CONNEMARA PUBLIC LIBRARY

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா

மலர் 15 } **ஏப்ரல் 1954** { இதழ் 4

## ஆபத்து! ஆபத்து!!
## ஆரம்ப ஆசிரியர்கட்கு ஆபத்து!!!

சென்னை மாநிலத்தில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களே!

ஆயிரமாயிரமாக உள்ள அருமைத் தோழர்களே!

எழுத்தறிவிக்கும் பணியைப் புரியும் சிறப்பு வாய்ந்த செம்மல்களே!

போதுமான ஊதியமும் வசதியான வாழ்க்கையுமின்றித் துடித்துக் கிடக்கும் நண்பர்களே!

கல்வி மாளிகையின் அடிப்படையை அமைக்கும் கருத்துள்ள செயல் புரியும் கண்ணியவான்களே!

சொந்த வாழ்க்கையில் சுகம் இல்லாவிட்டாலும் குழந்தைகளின் கல்வியைச் சுகமுள்ளதாக்க முயலும் தியாகத் திரு உருவங்களே!

உங்கள் அனைவருக்கும் ஓர் வேண்டுகோள். உறங்கியது போதும். உடனே விழித்தெழுங்கள்.

வேகமாய் ஓடிவருகிறது வெள்ளம். அது உங்களை விழுங்கு முன்னே, அணைகள் எழுப்ப வாருங்கள்.

என்றுமில்லாத ஆபத்து உங்களை அணைத்து அழிக்க வருகிறது அந்தப் பேராபத்தின் திரு உருவத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிக்கத் திரள் திரளாகத் திரண்டு வாருங்கள்.

ஆபத்து—ஆபத்து—இதுவரை என்றென்றும் நீங்கள் கண்டிராததோர் ஆபத்து உங்களை நோக்கி ஓடி வருகிறது.

மாதம் ரூபாய் நாற்பத்தாறு என்கிற இந்த ஊதியத்தைக் கொண்டு எப்படி வாழமுடியும் என்று இதுவரை நீங்கள் தத்தளித்துக்கொண்டிருந்தீர்கள். ஆனால் இப்போதோ அந்த நாற்பத்தாறு ரூபாய்க்குக்கூட ஆபத்து ஏற்பட்டுவிட்டது.

ஊதியத்தில் உயர்வு தேவை—எங்கள் வாழ்க்கையில் உள்ள வேதனை தீர சம்பளத்தில் சிறிது கூடுதல் தேவை என்று இதுவரை நீங்கள் கிளர்ச்சி செய்து வந்தீர்கள். ஆனால் இப்போதோ அந்தச் சிறிய அளவு ஊதியத்திற்குக் கூடத் 'தலைவலி' ஏற்பட இருக்கிறது.

ஆமாம் தோழர்களே! வருகிற ஜூன் மாதத்திலிருந்து உங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் வேலையை இழந்து தீரவேண்டிய கட்டாயம் ஏற்படவிருக்கிறது.

புதிய கல்வித் திட்டத்தால் இந்நாட்டின் கல்விக்கு ஆபத்து என்றோம். சின்னஞ் சிறு குழந்தைகளின் வாழ்க்கைக்கு ஆபத்து என்றோம். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு முதல்தரமான ஆபத்து என்றோம். பிற்பட்ட வகுப்பினரின் நன்மைக்கு ஆபத்து என்றோம். இத்தனையும் உண்மைதான். ஆனால் உண்மை இந்த அளவோடு நிற்கவில்லை. புதிய கல்வித் திட்டத்தால் ஆரம்ப ஆசிரியர்களாகிய உங்களின் தொழிலுக்கும் ஆபத்து உண்டு என்பது இப்போது தெள்ளத் தெளிவாக விளங்கிவிட்டது.

சர்க்காரிலிருந்து மானியம் பெற அருகதை உடைய ஆசிரியர்கள் இப்போது தனித்தனி 20 மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகின்றனர். அந்தத் தொகை தொடர்ந்தாற்போல, 30–40–50– என்கிற முறையில் 1954, 55, 56 ஆகியஆண்டுகளில் கூட்டப்பட வேண்டும் என்று அரசாங்கத்தார் பிறப்பித்துள்ள உத்தரவு ஒன்று தெரிவிக்கிறது.

இதன் விளைவாக, ஆரம்ப ஆசிரியர்களின் தொகை, முதல் ஆண்டில் 3609, இரண்டாம் ஆண்டில் 4509, மூன்றாம் ஆண்டில்

2706 என்கிற முறையில் குறையவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

ஆக மொத்தம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள்ளாக ஏறத் தாழ 10,844 ஆசிரியர்கள் வேலையை இழப்பர் என்கிற நிலைமை உரு வாகிவிட்டது.

ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, இதுபோது கிட்டத்தட்ட 36 லட்சம் என்கிற நிலையில் இருக்கிறது.

அடுத்த ஆண்டில் மேலும் ஒரு 18 லட்சம் மாணவர்களும், அதற்கடுத்த ஆண்டில் அதற்கு மேல் ஒரு 18 லட்சம் மாணவர் களும், மூன்றாவது ஆண்டில் இன்னமும் ஒரு 18 லட்சம் மாணவர் களும் புதிதாகச் சேர்ந்தால்தான் ஆசிரியர்கள் எவரும் வேலையை இழக்காமல் இருக்க முடியும்.

ஆனால் அடுத்த மூன்று ஆண்டுகளின் தொகை இந்தவிதமாக கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிகமாகும் என்பது எத்தரும் பித்தரும் தவிர வேறு எவரும் எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும்.

ஆகவே, **புதிய கல்வித் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்குமானால், அடுத்த மூன்றாண்டுகளுக்குள், ஆயிரக்கணக்கான ஆரம்ப ஆசிரியர்கள் வேலையை விட்டு விரட்டி அடிக்கப்படுவது உறுதி யினும் உறுதியாகும்.**

ஏற்கனவே பல பள்ளிக்கூட நிர்வாகிகள், தங்கள் பாடசாலைகளி லுள்ள எல்லா ஆரம்ப ஆசிரியர்களுக்கும் நோட்டீஸ் கொடுத்து விட்டு, 1–6–54–ல் மாணவர்கள் ஆஜருக்குத் தகுந்தபடி வேண்டிய அளவு ஆசிரியர்களை மட்டும் திரும்ப எடுத்துக்கொள்ள முடிவு செய் திருக்கிறார்கள்.

எடுத்துக் காட்டாக, விக்கிரமசிங்கபுரம், சரகம் பசுக்கிடை விளையில் உள்ள செயின்ட் ஜோசப் பாடசாலையில் ஆசிரியர்களாக இருக்கும் 17 பேரில், தலைமையாசிரியர் தவிர ஏனைய 16 பேருக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

கொட்டாரம் செயின்ட் சவேரியார் உயர்தர ஆரம்பப் பாட சாலையில் வேலை செய்யும் 11 ஆசிரியர்களில் 7 பேருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

சாத்தூர் கஸ்பாவில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் வேலை பார்க்கும் 75 ஆசிரியர்களில், 35 பேருக்கு வேலையை விட்டு விலகிக் கொள்ளும்படி முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

திருச்செந்தூருக்கு அருகே உள்ள காயாமொழி சரசுவதி ஆரம்பப் பள்ளியில் உள்ள 5 ஆசிரியைகளில் இருவரின் கதி இதே வகையானதுதானும்.

புதிய கல்வித் திட்டத்தின்படி, இப்பொழுது உள்ள அத்தனை ஆசிரியர்களையும் வேலைக்கு வைத்துக்கொள்ள இயலாதாகையால் ஜூன் மாதத்திலிருந்து வேலையை விட்டு விலகிவிடுமாறு பாடசாலை நிர்வாகிகள் தங்கள் ஆசிரியர்களில் பலருக்கு அறிவித்துவிட்டார்கள் என்கிற பயங்கரச் செய்தி, பற்பல ஊர்களிலிருந்தும் அலை அலையாக வந்தபடி இருக்கிறது.

தினசரிப் பத்திரிகைகளைப் பிரித்துப் படித்தால், ஒவ்வொரு நாளும், இப்படிப்பட்ட வேதனைச் செய்திகள் இரண்டு மூன்றாவது இல்லாமல் இருப்பதில்லை.

இன்னொரு செய்தி. அரசாங்கத்தாரால் நடத்தப்படாத ஆரம்பப் பள்ளிகளுக்கு என்று அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகிற தொகை, நடைமுறை ஆண்டின் பட்ஜெட்டில் இருப்பதை விட அடுத்த ஆண்டின் பட்ஜெட்டில், 3,67,600 ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படுகிற ஆரம்பப் பள்ளிகளுக்குரிய அரசாங்கத்தின் உதவித் தொகையும், புத்தாண்டுப் பட்ஜெட்டின்படி 1,35,09,900 ரூபாயிலிருந்து, 1,11,54,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த இருவகைக் குறைவுகளையும் கூட்டிப் பார்த்தால் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில், ஆரம்பக் கல்விக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகிற தொகையில் 26 லட்சத்து 40,000 ரூபாய் குறைந்துபோயிருக்கிறது என்னும் உண்மை தெளிவாகிறது.

இப்படிக் குறைவுபடும் தொகை, ஏறத்தாழ இரண்டாயிரம் பள்ளிக்கூடங்களுக்கும் அவற்றின் ஆசிரியர்கட்கும் தேவையான அளவு கிராண்ட் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொண்டால், ஆரம்பக் கல்விக்குரிய தொகையை அரசாங்கத்தார் ஏன் குறைத்திருக்கிறார்கள் என்பது நமக்கு எளிதில் புரிந்துவிடும்.

புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக, இப்போது 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருப்பது மாறி, அடுத்த ஆண்டில் 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று ஏற்பட்டு விடும். அப்படி ஏற்படுவதன் காரணமாக நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் வேலையை இழப்பர். அவ்வாறு அவர்கள் வேலையை இழந்தால்,

அவர்களுக்கு அரசாங்கத்தால் தற்போது தரப்பட்டு வருகிற 'கிராண்'டை அடுத்த ஆண்டில் தரவேண்டியிருக்காது. எனவே தான் பட்ஜெட்டில், ஆரம்பக் கல்விக்குரிய தொகை குறைக்கப்பட்டிருக்கிறது என்று நாம் கருதுகிறோம்.

இருக்கும் ஆசிரியர்கட்கே வேலை இல்லாமற்போக இருக்கிற போது புதிய ஆசிரியர்கட்கு என்ன அவசியம் இருக்கமுடியும்? இதனை உத்தேசித்துத் தான்போலும், அடுத்த ஆண்டில் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்காக வருகிற மனுக்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று, அரசாங்கத்தார், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் (Teachers' Training Schools) அனைத்திற்கும் ஓர் உத்தரவை அனுப்பியிருக்கிறார்கள்!

இதுமட்டுமல்ல. 50 மாணவர்களை விடக் குறைவாகக் கொண்டிருக்கிற வகுப்புகளுக்கு அடுத்த ஆண்டுமுதல் கிராண்ட் கிடைக்காது என்று, பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்கள், பள்ளிக்கூட நிர்வாகிகளுக்குக் கூறிவருவதாகவும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

1. அடுத்த ஆண்டுமுதல் 20 மாணவர்கட்கு ஓர் ஆசிரியர் என்பது 30 மாணவர்கட்கு ஓர் ஆசிரியராக மாறவேண்டும் என்று அரசாங்கத்தார் உத்தரவுபிறப்பித்திருப்பது.

2. அடுத்த ஆண்டுமுதல் வேலைக்கு வரவேண்டாம் என்று பல பள்ளி நிர்வாகிகள் பல ஆசிரியர்கட்கு நோட்டீஸ் கொடுத்திருப்பது.

3. ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டு வருகிற தொகையில் அரசாங்கத்தார் அடுத்த ஆண்டுக் கணக்கில் 26 லட்சம் ரூபாயைக் குறைத்திருப்பது.

4. ஆசிரியர் பயிற்சிக்குரிய புதிய மனுக்களை ஏற்கவேண்டாமென்று பயிற்சிப் பள்ளிகளுக்கு அரசியலார் கட்டளை அனுப்பியிருப்பது.

5. ஐம்பது மாணவர்களுக்குக் குறைந்த வகுப்புகளுக்குக் கிராண்ட் கிடையாது என்பதாக இன்ஸ்பெக்டர்கள் கூறிவருவது.

ஆகிய இந்த ஐந்து செய்திகளையும் ஒன்றாக வைத்துப் பார்க்கிற போது, வருகிற ஜூன் மாதம் முதல், ஆரம்ப ஆசிரியர்களில் நூற்

றுக்கணக்கானவர்கள் வேலையை இழக்கப் போகிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்த நிலையில், ஆரம்ப ஆசிரியர்களே, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

நீங்கள் வாழ்ந்தாக வேண்டுமானால் புதிய கல்வித் திட்டம் அழிந்தாகவேண்டும்.

புதிய கல்வித்திட்டம் வாழ்ந்தாக வேண்டுமானால் நீங்கள் அழிந்தாகவேண்டும்.

அழிய இருப்பது யார்? நீங்களா அல்லது புதிய கல்வித் திட்டமா?

இதுதான் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற பிரச்சினை.

ஆரம்ப ஆசியர்களாகிய உங்களை எல்லாக் கட்சியினரும் பாராட்டியிருக்கிறார்கள். அதுபோலவே புதிய கல்வித் திட்டத்தை எல்லாக் கட்சியினரும் வெறுத்து ஒதுக்கியிருக்கிறார்கள்.

ஆரம்ப ஆசிரியர்களா — அவர்களல்லவா வருங்காலப்பிரஜைகளை உருவாக்கும் தற்கால மன்னர்கள் என்று இயம்பி மகிழாத தலைவர்கள் கிடையாது.

புதிய கல்வித் திட்டமா—செச்சே நாட்டை நாசமாக்கும் நச்சுத் திட்டமது என்று கசந்து கூறாத அறிஞர் பெரு மக்களும் எவரும் இல்லை.

ஆரம்ப ஆசிரியர்களாகிய உங்களின் தொண்டு, சிறப்புள்ளது; சீர் பலமிகுந்தது; நாட்டிற்குத் தேவையானது; நல்லறிவாளர் அனைவராலும் பாராட்டப்படுவது.

ஆச்சாரியாரின் கல்வித் திட்டமோ, அவசியமற்றது; நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டை போன்றது; அழிந்துவரும் ஜாதி முறைக்குப் புத்துயிர் ஊட்டும் தன்மை படைத்தது; மக்கள் மன்றத்தால் மனமார வெறுக்கப்படுவது.

நீங்கள்—நாட்டுக்குத் தேவை. ஆச்சாரியாரின் திட்டம்—நாட்டிற்குக் கேடு.

ஆகவே அழிய வேண்டியது ஆச்சாரியாரின் திட்டம்தான். நீங்களல்ல.

நீங்கள் வாழவேண்டுமானால்—உங்களின் தொண்டால் கல்வி வளர வேண்டுமானால்—வளரும் கல்வியால் சமுதாயத்தின் வாழ்க்கை சிறப்புற வேண்டுமானால் புதிய திட்டம் ஒழிந்தாக வேண்டும்.

இதனை மறுப்பவர், உண்மையை மறுப்பவர். நியாயத்தை மறுப்பவர். நேர்மையை மறுப்பவர்.

இந்த உண்மையை நீங்கள் நன்றாக அறிந்திருக்கிறீர்கள்.

அறிந்தும் ஏன் நீங்கள் வீண்பொழுது போக்க வேண்டும்?

உடனே புறப்படுங்கள். புதிய திட்டம் தொலைந்தாக வேண்டும் என்கிற குரலை இடிமுழக்கமென எழுப்புங்கள். ஜில்லா ஜில்லாவாக, தாலுகா தாலுகாவாக, ஆரம்ப ஆசிரியர்களின் மாநாடுகளைக் கூட்டுங்கள். புதிய திட்டத்தைப் புத்தாண்டிலிருந்து நீக்கியாக வேண்டும் என்கிற தீர்மானத்தை ஒவ்வொரு மாநாட்டிலும் நிறைவேற்றுங்கள். புதிய திட்டத்தைக் கண்டித்துப் பொதுக் கூட்டங்கள் போடுங்கள். கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்புங்கள். கல்வித் திட்டத்தை உடனே கைவிடுக என்பதை வற்புறுத்தி ஒவ்வொருவரும் தனித்தனியே அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதுங்கள். பொது மக்களிடமிருந்தும் ஆயிரக்கணக்கில் கடிதம் வாங்கி அனுப்புங்கள்.

நீங்கள் கூட்டுகிற உங்களுடைய மாநாடுகளுக்கு அமைச்சர்களையோ அல்லது அரசாங்க அதிகாரிகளையோ அழைத்துப் பேச வைப்பதில் அர்த்தமுமில்லை, அது அவசியமுமில்லை. மாநாட்டின் நடுவில் மந்திரியை அமர வைத்துவிட்டால், முகதாட்சண்யம் காரணமாக,மந்திரிசபையினர் கொண்டு வந்துள்ள கல்வித்திட்டத்தை அழுத்தந்திருத்தமாகக் கண்டிக்க முடியாது போய்விடுகிறது. அது போலவே அரசாங்க அதிகாரிகள் மாநாட்டிற்கு வந்தாலும் அந்த அதிகாரிகளால் கல்வித் திட்டத்தைக் கண்டிக்கமுடிவதில்லை. புதிய திட்டம் கேடு பயப்பது என்பதை அந்த அதிகாரிகள் எவ்வளவு உணர்ந்தாலும் அந்த அதிகாரிகளால் உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாது. தனியாகப் பேசுகிறபோது புதிய திட்டத்தின் கொடுமைகளைப்பற்றி மனம்விட்டுக் கூறுகிற பல அதிகாரிகள், மேடைகள் மீதேறிவிட்டால், அதே திட்டத்தை ஆதரிப்பதாகப் பேசுகிற அற்புதத்தை நாம் பார்க்கிறோம். அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். ஏனெனில் அவர்கள் அரசாங்க அதிகாரிகள். அவர்களுக்கு வேறு வழி கிடையாது. நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைக்கஅவர்களுடைய பதவி அவர்களை அனுமதிக்காது. ஆகவே இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் சிக்கிக்கொண்டிருக்கும் கல்வி அதிகாரிகளை நம் மாநாடுகளுக்கு அழைத்து, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடித் தத்தளிக்கிற நிலைக்கு அவர்களை ஆளாக்குவதில் பயன் துளியுமில்லை.

அதுபோலவே, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், நம் மாநாடுகளுக்கு வந்தாகவேண்டும் என்கிற அவசியமுமில்லை.

ஆரம்ப ஆசிரியர்களின் மாநாடுகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் மட்டும் இருந்தால் போதும். அதுதானே நியாயமுங்கூட!

ஆசிரியத் தோழர்களே! ஏப்ரல் மாதம் பிறந்துவிட்டது காலம் அதிகமில்லை! உடனே புறப்படுங்கள்! புதிய திட்டத்தை ஒழிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுங்கள்! ஆசிரியர்கள் எவரையும் வேலையைவிட்டு விலக்கக்கூடாது என்பதை அரசாங்கத்திற்கு அறிவியுங்கள்! ஏற்கனவே அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவுகளையெல்லாம், ஆசிரியர்களின் வேலைபோகாத முறையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று இடியோசை எழுப்புங்கள்!

**வாளா கிடந்தீர்களானால் வேலை பறிபோகும். நினைவிருக்கட்டும் நினைவிருக்கட்டும்!**

**இது ஜனநாயக சகாப்தம்! இந்த சகாப்தத்தில், கிளர்ச்சி செய்பவர்கள்தான் பயன்பெறுவர். பேசத் தெரிந்தவர்கள்தான் வசதிகளை அடைவர். அழுத பிள்ளைகள்தான் பால் குடிக்க முடியும். மறந்துவிடாதீர்கள். மறந்து விடாதீர்கள்!!**

---

## அறிவுக் கதிர்

தன் உரிமைகளுக்காகப் போராடும் துணிச்சல் இல்லாதவனுக்குத் தன் உரிமைகளுக்கு உரிமை கொண்டாட உரிமை ஏது?

**—கவிஞர் டென்னிசன்**

அறிவு என்பதும், நமக்குத் தேவையான புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதிலே மட்டும் அடங்கியிருப்பது அல்ல. நமக்குத் தேவையில்லாத பழைய கருத்துக்களை எடுத்து எறிவதிலேயும் தான் அது அடங்கியிருக்கிறது.

**—ஜேம்ஸ் லவல்**

சாட்டை அழிப்பது கூடும்—அலை
கடலையும் தூர்ப்பது கூடும்
மேட்டை அகழ்வதும் கூடும்—வீரி
விண்ணை அளப்பதும் கூடும்
ஏட்டையும் நூலையும் தடுப்பதும் கூடும்—உரிமை
எண்ணத்தை மாற்றுதல் எப்படிக் கூடும்?

**—பாரதிதாசன்**

# ஒரு கடல் துன்பம்!
# ஒரு துளி இன்பம்!

பல நாள் பட்டினி கிடந்தவனின் எதிரே ஒரு சிறிது உணவு வைக்கப்பட்டு, அன்புடன் உண்க என்று இயம்பப்பட்டால் எப்படி இருக்கும்?

திக்குத் தெரியாத கடலிலே சிக்கி, உயிருக்கு மன்றாடிக் கிடக்கும் ஒருவனின் கைகளில், திடீரென்று, ஆதாரவாய்ப் பற்றிக்கொள்ள மரத்துண்டு ஒன்று கிடைத்தால் எவ்வாறு இருக்கும்?

பரம்பரை பரம்பரையாக ஏழையாகக் கிடந்த ஒருவனுக்கு சட்டென்று நூறு ரூபாய்ப் பணமுடிப்பொன்று கிடைக்கப் பெற்றால் அவன் மனநிலை எவ்வாறு இருக்கும்?

அவ்வாறுதான் இருக்கிறது ஆரம்ப ஆசிரியர்களின் இந்நாள் நிலை.

பட்டினி அவர்களைக் கொட்டுகிறது—அது, உலகம் அறிந்த செய்தி.

வேதனை அவர்களை வாட்டுகிறது அது, நாடு அறிந்த சம்பவம்

வறுமையின் கோரப் பிடி அவர்களைச் சீரழியவைத்துச் சின்னா பின்னப் படுத்துகிறது—அது, யாராலும் மறுக்கமுடியாத நிலைமை.

அவர்களுடைய, உடலத்தையும் உள்ளத்தையும், என்உற்சாகத்தையும் உணர்ச்சியையும் கூடசுற்றிவளைத்துச்செந்தேளெனக்கொட்டி வரும் வேதனையும் வாட்டமும் தீர்ந்து, அவர்களுடைய வாழ்க்கையில் இன்பமும் எழிலும் தவழ்ந்திடவேண்டுமானால், கண்ணியமான அளவுக்கு அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்பட வேண்டும்.

உயர்த்தப்படவேண்டும் என்பதை அமைச்சர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். கவர்னர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். அரசியல் தலைவர்களும் ஆமாம் என்கிறார்கள். கல்வி அதிகாரிகளும் மெய் தான் என்கிறார்கள். பண்டிதர் நேரு முதல் திருவாளர் காமராஜர் ஈறாக, தலைவர் ராஜேந்திரன் முதல் கல்வி ஆலோசகர் ராமச்சந்திரன் வரையில், இந்த உண்மையை மறுப்பவர் இல்லை.

ஊதியம் உயர்த்தப்படவேண்டும். அதுதான் முறை என்பதை ஆட்சித் தலைவர்கள் அத்தனைப் பேரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறார்களா—உலகறிய முழக்கமிட்டுவருகிறார்கள்.

ஆனல் முழக்கமிட்டு என்னலாபம்? முழக்கம் ரூபா அணு பைசாவாக மாறினல்தானே ஆசிரியனின் தொல்லை குறையும்? ஏனே தெரியவில்லை—முழக்கம் முழக்கமாகவே நின்றுவிட்டதே தவிர, உருவான பயன் அளிக்கவில்லை. எனவேதான், சென்னை மாநில ஆரம்ப ஆசிரியர்கள், சென்ற ஏழெட்டு ஆண்டுகளாக ஊதிய உயர்வை வற்புறுத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றி வந்தார்கள். வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அமைச்சர்களை நேரில் கண்டும் கூறிவந்தார்கள். மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் நிலைமையை விளக்கி எடுத்துப் பேசிவந்தார்கள். எம். எல். ஏ. க்கள் மூலமாக சட்டசபையிலும் பிரச்சினையை அடிக்கடி எழும்புமாறு செய்துவந்தார்கள். ஆயிர மாயிரமாக உள்ள ஆரம்ப ஆசிரியர்கள் சார்பிலே, நாமும், ஊழிய உயர்வின் உடனடி அவசியத்தையும் அவசரத்தையும வற்புறுத்தி நமது **"ஆரம்பக் கல்வி"** மூலமாக ஓயாமல் கிளர்ச்சி செய்து வந்தோம்.

நமது கிளர்ச்சியும் ஆசிரியர்களின் எழுச்சியும் இப்போதுதான் ஓரளவு பலன்கொடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஆரம்ப ஆசிரியர்களின் அடிபபடை ஊதியம், வருகிற ஜூன் திங்களிலிருந்து மூன்று ரூபாய் உயர்த்தப்படும்.

இப்போது அடிப்படை ஊதியம் ரூபாய் இருபத்தேழாக இருக்கிறது. இது இனி முப்பது ரூபாயாக மாறும்.

சென்னை சட்டசபையில், கல்வி அமைச்சர் சுப்ரமண்யனர் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறர்.

வரவேற்கிறேம் இந்த மூன்று ரூபாய்களை, இந்த மூன்று ரூபாய்களால் ஆசிரியர்களின் துயரம் தீர்ந்துவிடும் என்று நம்பி அல்ல நாம் இந்த மூன்று ரூபாய்களை வரவேற்பது. இந்த மூன்று வெண்பொற் காசுகளால் அவர்களுடைய துயரம் மாறிவிடாது என்பது நமக்கு மிக நன்ருகத் தெரியும். அடிப்படை ஊதியம் ரூபாய் எழுபத்தைந்து, பஞ்சப்படி ரூபாய் இருபத்தைந்து, ஆக மொத்தம் மாத ஊதியம் ரூபாய் நூறு என்று ஆனலொழிய ஆசிரியர்களின் வேதனை ஒழிய முடியும் என்று நம்புவது வெறும் பைத்தியக்காரத்தனம். அத்தகு மூடமதி, நமக்கு இல்லை. ஆசிரியர்களின் துயரம் மலை அளவு இருக்கிறது. ஆனல் இப்போது கிடைத்திருக்கும் ஊதிய உயர்வோ வெறும் கடுகளவுதான் இருக்கிறது. தெரிகிறது நன்ருக. தெரிந்தும்தான் வரவேற்கிறேம் இந்த மூன்று ரூபாய்களை, ஆசிரியர்களின் கிளர்ச்சி இந்த அளவுக்காவது பயன் கொடுத்ததே என்பதற்காகவும், இந்த அளவு நன்மையாவது செய்ய வேண்டும் என்கிற உணர்ச்சி ஆட்சித்தலைவர்களுக்கு ஏற்பட்டதே

அதறகாகவுமதான் இந்த மூன்று ரூபாய்களை மனமார வரவேற்கிறோம்.

ஆனால் ஒன்று. மூன்று ரூபாய்களைக் கொடுத்துவிட்டோமே, இனி என்ன கவலை என்று இருந்துவிடக்கூடாது ஆட்சியாளர்கள். ஆசிரியர்களுக்கு இருப்பதோ, ஒரு கடல் துன்பம். ஆனால் இப்போது கிடைத்திருப்பதோ ஒரு துளி இன்பம்தான். கடலெனப் பரந்துகிடக்கும் துன்பத்தைத் தீர்க்க சின்னஞ்சிறு துளியெனச் சுருங்கிக் கிடக்கும் இந்த மூன்று ரூபாய்களால் முடியாது என்பதை, நாம் சொல்லித் தெரிந்துகொள்கிற நிலையில் ஆட்சியாளர்கள் இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். எனவே இந்த மூன்று ரூபாய் உயர்வை வெறும் இடைக்கால ஏற்பாடாக எண்ணி, விரைவில், தக்க அளவு ஊதிய உயர்வை அளிக்க ஆட்சிப் பீடம் முன்வரவேண்டும். முன்வருமா ?

---

## ஏஜெண்டுகள் தேவை.

நமது ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை வெளியிடப்பட்டுள்ள **புதுமுறை சங்க வாசகங்களையும்**, இவ்வாண்டு புதிதாக வெளியிடப்பட்டுள்ள ஒன்று முதல் ஏழாவது வகுப்புவரை **வீர பாண்டியன் தமிழ் வாசகங்களையும்** இதர பாட புத்தகங்களையும் எயிடெட் பஞ்சாயத்து பாடசாலைகளுக்கு நேரில் சென்று 1954–55 ஆண்டுக்கு பாட புத்தகங்களாக வைக்கும்படிச் செய்து ஆர்டர்களை வாங்கி அனுப்ப தாலுக்கா வாரியாக சுற்றுப்பிரயாணம் செய்யச் சிலப் பிரதி நிதிகள் தேவை.

அப்பிரதிநிதிகள் அனுபவமும் செல்வாக்கும் உள்ள, பெரும்பாலும் ஆரம்ப ஆசிரியர்களாகவே இருப்பது மிகவும் நல்லது. கோடைகால விடுமுறை நாட்களை வீணாக்காமல் பல ஊர்களுக்குச் சென்று பல இடங்களைப் பார்ப்பதற்கு ஓர் நல்ல வாய்ப்பு. அதற்குத்தக்க ஊதியமும், கொடுக்கப்படும். அப்படி வேலை செய்ய வசதியுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். மனு அங்கீகரிக்கப்பட்ட பிறகு வேலை செய்ய வேண்டிய முறைகள், ஊதியம் இவைகளைப்பற்றி விளக்கம் அனுப்பப்படும்.

# மந்திரி. கிருஷ்ணமாச்சாரி எதிர்ப்பு

## "என்னைப் போன்றவர்களுக்கு மந்திரி பதவி கிடைக்கச் செய்த கல்வி முறையையா மாற்றுவது?"

ராஜகோபாலாச்சாரியின் புது கல்வித் திட்டத்தை மத்திய அரசாங்க வர்த்தக இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி வன்மையாகக் கண்டித்தார்.

"பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திய கல்வித் திட்டம்தான் எங்களை பொறுப்பு உள்ள பெரிய பதவிகளை (மந்திரி போன்ற பதவிகள்) அடையச் செய்தது. அப்படியிருக்க அந்த கல்வி முறையை மாற்றுவது சரியல்ல" என்று அவர் கூறினார்.

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் ஆண்டுவிழா நேற்று முன் தினம் நடந்தது. அப்போது மந்திரி கிருஷ்ணமாச்சாரி பேசினார். அவர் கூறியதாவது:—

"எங்களை பொறுப்பு வாய்ந்த பெரிய பதவிகளை அடையச் செய்தது பழைய கல்வித் திட்டம்தான். அப்படிப்பட்ட கல்வித் திட்டத்தை லாயக்கற்றது என்று கருதி அதை சென்னை சர்க்கார் மாற்றியுள்ளது. எனக்குப் புரியவில்லை.

### படிப்பே இல்லாமல் போய்விடும்!

ஒரு கைத்தொழிலை கற்றுக் கொள்வது நல்லதுதான். ஆனால் அதற்காக கல்வித் திட்டம் முழுவதையும் அடியோடு மாற்றியமைத்தால் அதன் விளைவாக கல்வி அநேகமாக இல்லாமலே போய்விடும்.

அதேபோல தாய் பாஷையில் கல்வி கற்பது நல்லதுதான். ஆனால் ஒரேயடியாக ஆங்கிலத்தை ஒழித்துக் கட்டுவது நல்லதல்ல.

புது கல்வித் திட்டத்தின் பலன்கள் பற்றி சில பெரிய மனிதர்கள் (ராஜாஜி போன்றவர்கள்) மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் நான் அப்படி அல்ல. கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க எவ்வித அவசியமும் இல்லை என்றே நான் கருதுகிறேன்.

# கல்விதிட்டம்: ஆசிரியருக்கு வெகுமதி

## அவர் மனைவிக்கும் அதே காணிக்கை!

6–3–'54–ல் திருச்செங்கோடு தாலுகாவிலுள்ள கருமாபுரம் போர்டு ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் ஆர். செங்கோட புலவர் என்பவர் சங்ககிரியில் நடந்த ஆசிரியர்கள் சங்கக் கூட்டத்திற்குச் சென்று வீட்டிற்குத் திரும்பி வந்ததும், மேற்படி ஊர் பழனிக் கவுண்டர் மகன் கத்தி (எ) சுப்பராயக் கவுண்டர், மேற்படி

ஆசிரியரின் வீட்டிற்குச் சென்று "நீர் ஏன் என் மகனை அரைநேரம் மட்டும் பள்ளிக்கூடம் வரச் சொல்லுகிறுய்" என்று கேட்டார்.

அதற்கு ஆசிரியர், "இது சர்க்கார் உத்தரவு; அதற்கு நான் என்ன செய்ய முடியும்" என்று சொன்னதற்கு, திடீரென்று அவர், ஆசிரியர் கன்னத்தில் இரண்டு அறைகள் கொடுத்து விட்டார். 'வேண்டாம்' என்று தடுத்த ஆசிரியரின் துணைவியையும் இரண்டு அறைந்தும் காலால் உதைத்தும் தள்ளி விட்டார்.

இது விஷயமாக மேற்படி ஆசிரியர் மல்லசமுத்திரம் போலீசுக்கு ரிப்போர்ட்செய்தார். அதிகாரிகள் மாஜிஸ்திரேட்டிற்கு பிராது செய்துகொள்ளும்படி சொல்லி விட்டனர்.

8-3'-54-ல், ஆசிரியர், திருச்செங்கோடு சப்-மாஜிஸ்திரேட்டிடம் பிராது செய்துகொண்டதற்கு, 12-3-54-ல் பெஞ்சு கோர்ட்டில் கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பு: ஆசிரியர், உள்ளூர் கி. மு. அவர்களிடம், ரிபோர்ட் செய்யும்படிக் கோரியும், அவர், கத்திக் குத்து, காயங்கள் இருந்தால் தான் 'ரிப்போர்ட்' செய்யமுடியும் என்று சொல்லி விட்டார்.

# புதிய கல்வி திட்டத்திஞல் ஏற்பட்ட பலன்!

## நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வேலே இழக்கின்றனர்!

### தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னறிவிப்பு

சென்னை முதன் மந்திரியின் புதிய கல்வித் திட்டத்தின் பயனுகபரமக்குடி தாலூகாவில் மட்டும் நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் வேலே இழக்கின்றனர்.

பரமக்குடியில் உள்ள காளிதாஸ் உயர்தர தொடக்கப் பள்ளியில் உள்ள 17 ஆசிரியர்களில் 9 ஆசிரியர்களுக்கு மே 31-ந் தேதியோடு வேலேயிலிருந்து விலகிக் கொள்ளும்படி முன்னறிவிப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

இதுபோல, இங்குள்ள வைசியப்பச்சப்புத்தூர் தொடக்கப் பள்ளியில் உள்ள 10 ஆசிரியர்களில் 8 ஆசிரியர்களுக்கு மே மாதம் 31-ந் தேதியோடு விலகிக் கொள்ள நிர்வாகிகள் முன்னறிவிப்பு கொடுத்துவிட்டனர்.

இந்தப் பள்ளியில், நிர்வாகியும் தலைமை ஆசிரியரும் தவிர மற்ற

எல்லா ஆசிரியர்களுக்குமே வேலையிலிருந்து விலக்கிக் கொள்ளும்படி முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோல தாலுகாவிலுள்ள நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வேலையிழக்கின்றனர்.

---

## உலகத்தில் உற்பத்தி யாவதென்ன?

பிரதி வருஷமும் உலகத்தில் சராசரி என்னென்ன பொருள்கள் எவ்வளவு எவ்வளவு உற்பத்தியாகின்றன வென்பதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன :—

| | | |
|---|---|---|
| நிலக்கரி | 1,440,000,000 | டன் |
| சிமெண்ட் | 70,000,000 | ,, |
| உப்பு | 31,000,000 | ,, |
| தகரம் | 170,000 | ,, |
| செம்பு | 1,900,000 | ,, |
| வெள்ளி | 220,000,000 | அவுன்ஸ் |
| தங்கம் | 35,000,000 | ,, |
| வைரவகைகள் | 7,400,000 | செண்ட் |
| மின்சாரம் | 360,000,000,000 | கிலோவாட் |
| ரப்பர் | 870,000 | டன் |
| பெட்ரோலியம் | 245,000,000 | ,, |
| அலுமினியம் | 350,000 | ,, |
| இரும்பு | 120,000,000 | ,, |
| ப்ளாடினம் | 500,000 | ,, |
| பட்டு | 55,000 | ,, |
| இமிடேஷன் பட்டு | 460,000 | ,, |
| பஞ்சு | 6,800,000 | ,, |
| கம்பளி | 1,700,000 | ,, |
| ரேடியம் | 3 | அவுன்ஸ் |

# செய்திச் சுருள்

## கடையடைப்பு

சென்னை மாநிலத்தில் விற்கப்படுகிற மில் துணிகளின்மீது ரூபாய்க்கு ஒன்றேகாலணு விதம் புதிய விற்பனை வரி ஒன்றை விதிக்க ஆச்சாரியார் அரசாங்கம் முடிவு செய்திருப்பதைக் கண்டித்து, சென்னை மாநிலத்தில் உள்ள மில் துணி விற்பனைக் கடைகளில் மிகப் பெரும்பாலானவை, ஏப்ரல் 2, 3 ஆகிய நாட்களில், மூடப்பட்டுக் கிடந்தன. சென்னை நகரில் இக் கடையடைப்பு மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. இது போலவே, தங்கம், வெள்ளி, வைரம் முதலிய நகைகளின்மீது, ஏற்கெனவே உள்ள ரூபாய்க்குக் காலணு விற்பனை வரி போக மேற்கொண்டு ரூபாய்க்கு அரையணு விதம் விற்பனை வரியை விதித்திருப்பதைக் கண்டித்து, மாநிலம் முழுவதுமுள்ள தங்கம், வெள்ளி, வைர, நகைக் கடைகள் ஏப்ரல் 1–2–3 ஆகிய மூன்று நாட்களிலும் மூடப்பட்டிருந்தன. இந்த இருவகை வரிகளின் விளைவாக இருவகை வாணிபமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

## ராஜிஞமா

மத்திய அரசாங்கத்தில் நிதி அமைச்சராகப் பணியாற்றிவரும் திருவாளர் தேஷ்முக்குக்கும் அதே அரசாங்கத்தில் உள்ள ஏனைய அமைச்சர்களுக்குமிடையே தகராறு வளர்ந்து வருகிறதாம். ஏனைய அமைச்சர்கள் யாவரும் தம்தம் துறைகளில் அளவுக்கு மீறிச் செலவு செய்கின்றனர் என்றும், எனவே நிதி அமைச்சர் என்கிற முறையில் அதனைக் கட்டுப்படுத்தி ஒரு குறிப்பிட்ட நிலைக்குக் கொண்டு வரவேண்டியது தன்னுடைய கடமை என்றும் தேஷ்முக் கருதுகிருராம். அவரை அப்படிச் செய்யும்படி அனுமதிப்பது தங்களுடைய சுதந்தரத்துக்கு இழுக்கு என்று ஏனைய அமைச்சர்கள் கருதுகிருர்களாம். தேஷ்முக்கின் போக்குதான் தவருனது என்று முதலமைச்சர் நேரு தீர்ப்பளித்துவிட்டால் தேஷ்முக் தன் பதவியை விட்டுவிடுவது நிச்சயமாம். மந்திரிகள் தங்கள் மனம் போனபடி செலவு செய்து கொண்டே போனுல் நாட்டின் பொருளாதார நிலை சீர்படுவது எப்படி என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்கிருராம் தேஷ்முக்.

## கற்பவர் தொகை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 1953–ம் ஆண்டில், மார்ச் — அக்டோபர் இரண்டு தடவைகளிலுமாகச் சேர்த்து

எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதிய மாணவர்களின் தொகை 70,000. இவர்களில் 32,000 பேர் கல்லூரிக் கல்வி பெறத் தகுதியுடையவர் என்று அறிவிக்கப்பட்டனர். ஆனல் இந்த 32000 பேரில் 17,206 பேர் தான் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கின்றனர். அதே, 1953–ம் ஆண்டில், கலைக் கல்லூரிகள் அத்தனையிலுமாகப் படித்துவந்த மாணவர்களின் தொகை 46,000. தொழிற் கல்லூரிகளிற் படித்து வந்தவர் தொகை 8174. இன்டர்மீடியட் வகுப்பில் மட்டும் அதே ஆண்டில், 17206 பேர் படித்திடலாயினர். பரீட்சைகள் முதலியவற்றின் கட்டணங்களால் மட்டும், 1953–ல் மட்டும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 17 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

## அதிசயம்—ஆனல் உண்மை!

அமெரிக்காவில், நியூயார்க் நகருக்கு அருகே உள்ள பாக்ஸ் பரோ என்னும் ஊரைச் சேர்ந்த தோழியர் தெல்மா சாப்மன் என்னும் மாது, மார்ச் இரண்டாவது வாரத்தில் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதே மாதிற்கு அடுத்த மாதத்தில் மற்ருெரு குழந்தை பிறக்க இருக்கிறதாம். இந்த அதிசய நிலைமைக்குக் காரணம், அந்த மங்கையின் வயிற்றில் இரண்டு கருப்பைகள் இருப்பதுதானும். ஒரு பெண்ணுக்கு இரண்டு கருப்பைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் முறையாம். டாக்டர்கள் கூறுகிருர்கள்.

## அந்த ஒரு பள்ளிக்கூடம்!

சென்னை மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் அமுலில் இருக்கிறது என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிருேம் அல்லவா? அது உண்மை அல்லவாம். வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வந்தவாசியில் உள்ள பஞ்சாயத்துப் போர்டு தொடக்கப் பள்ளியில் அந்தப் புதிய திட்டம் இன்றுவரையில் அமுலுக்கு வரவில்லையாம். வந்தவாசி பஞ்சாயத்து போர்டு தலைவர், புதிய திட்டத்தைத் தங்கள் பள்ளியில் ஏற்க முடியாது என்று அரசாங்கத்திற்கு அறிவித்துவிட்டாராம். அழுத்தந் திருத்தமாக இப்படி அறிவித்துவிட்ட பஞ்சாயத்துப் போர்டின்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசாங்கம் சிந்தித்து வருகிறதாம். நிதி அமைச்சர் சுப்ரமண்யம் சென்னை சட்டசபையில் இவ்வாறு தெரிவித்திருக்கிருர்.

## பெண்கள் உலகம்

சென்னை மாநிலத்தில், கெஜட் பதிவுள்ள பெண் அதிகாரிகள் மொத்தம் 282 பேர் இருக்கின்றனராம். இவர்களில் ஒரு பெண், ஐ. ஏ. எஸ் பயிற்சி பெற்று, ரிவின்யூ டிவிஷனல் ஆபீசராகப் பணியாற்றி வருகிருராம். மந்திரி சபையினர் தந்துள்ள தகவல் இது. (49–ம் பக்கம் பார்க்க)

# எழுச்சிக்கு வழி காட்டும் எழுத்துலகச் சிற்பி

## [அறிஞர் அண்ணாதுரை]

கலை என்றால், வானவில்லிலே தோன்றி மறைந்துவிடும் அழகை எப்போதும் மக்கள் கண் எதிரே கொண்டுவந்து நிறுத்தும் ஒரு மாயாஜாலத் தந்திரம் என்றும், ஊனக் கண்ணுக்குப் புலப்படாத உருவ அழகுகளைக் கலைக் கண் கொண்டு கண்டறிந்து, மற்றவரின் பார்வைக்குக் கொண்டு வரும் 'மந்திரவாதி'யின் வேலை என்றும் கூறி, கலையைச் சாதாரண மக்களுக்குச் சம்பந்தமேயற்ற அதியற்புதப் பொருளாக்கினர். கலையை ரசிப்பதற்கே தனியானதோர் பண்பு வேண்டும் என்றனர். இவ்வளவு சுற்றுச் சுவர் எழுப்பி, இவர்கள் வளர்த்த கலை, எதற்குப் பயன்பட்டுவந்தது என்று கவனித்தால், சுகபோகிகளின் சுந்தரிகளை வர்ணிக்கவும், சூரர்களைப் பாராட்டவும், மற்றும், இயற்கை எழில், செயற்கை அழகு என்பன போன்றவைகளை விளக்கவும் பயன்பட்டதேயன்றி, வாழ்வுக்குப் பயன்படவில்லை.

கலையிலே திறம், கலையின் நிலையிலே உயர்வு, கலையிலே பல வகை என்று கூறுவதிலும், "கலை, கலைக்காகவே" என்று பேசுவதிலும், பூரிப்பும் பெருமையும் அடைந்தனர். கலை, நோக்கமற்ற நேர்த்தியாகக் கருதப்பட்டது. கலை, வெறும் அழகு விளக்கமா? என்று கேட்டால், இல்லை என்பர். கலை, மன எழுச்சிக்குச் சாதனமா என்று கேட்டால், அதுமட்டும் அல்ல என்பர். கலையை விளக்குங்கள், அதன் தன்மை எப்படி இருக்கவேண்டும்? அது பயன் கருதும் செயலா? அல்லது விளைவு இல்லாததா? என்று கேட்டால், கலை, மணம்போல், அழகுபோல், உண்மைபோல், முழுவதும் விவரிக்க முடியாத வியக்கத் தக்க சக்தி என்பர். அழகு, சுவை, மணம் இவைகளால் பயன் உண்டே, அதுபோல் கலையினால் பயன் உண்டன்றோ! அங்ஙனம், கலையினால் பயன் உண்டு என்றால், யாருக்குப் பயன் தருவது கலை எனக் கருதப்படவேண்டும் என்று கேட்டுவிட்டாலோ, கலாரசிகர்களுக்கு முகம் கடுக்கும். 'கலை, கலைக்காக என்பர்.

காண்டேகர், கதாசிரியர், மட்டுமல்ல, கலாசிரியர், அவர் கருத்து, கவிஞர் பாரதிதாசனின் கருத்துப் போன்றதே. கலை, கலைக்காக என்று பேசுபவர்களின் பகட்டுரை அவருக்குப் பிடிக்காது. கலைக்காக வாழ்கிறேன், என்ற பொருளற்ற பேச்சுக்காரரல்ல காண்டேகர், புரட்

சிக் கவிஞர் கவிதைகளில் கூறுவதைக் காண்டேகார், உரைநடையில், கதைவடிவிலே கூறுகிறார். புரட்சிக் கவிஞர் போலவே, காண்டேகார், முற்காலத்தவர் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் ஆகியவற்றை மீறுபவர். கலை, வாழ்வுக்காக! வாழ்வு செம்மைப்பட, மக்கள் வாழ்வை அனுபவிக்க, வாழ்வு கருகும் நிலை பெறாமல் மலர்ந்து மணம் பரப்புவதற்குக் கலைப்பயன் படவேண்டும். என்ற கொள்கையினர், தென்றல் போன்ற இனிமையும், சிறு தூறலுக்குள்ள ஜிலு ஜிலுப்பும், இசைக்கு உள்ள எழுச்சியும் மக்களுக்கு, வெறும் மாளிகை வாசிகளுக்கு மட்டுமல்ல, உழைத்து அலுக்கும் மக்களுக்குப் பயன்படவேண்டும் என்பது காண்டேகர்கார் கொண்டுள்ள கொள்கை. அவருடைய கதை அமைப்பு முறை கதைகளிலே கூறப்படும் நிகழ்ச்சிகள், கதையைத் தீட்டிச் செல்லும் போக்கு ஆகியவற்றிலே கலை வாழ்வுக்காக, என்பதனைக் காண்டேகார் அழகுபட விளக்கியிருக்கிறார். செல்வவான்கள், சுகபோகிகள், கொண்டுள்ள 'கலைஉணர்ச்சி' கபடம் நிறைந்தது,' அந்தக் 'கலாரசிகர்கள்' ஏழைகளை உறுஞ்சி, இன்பம் பெற்று இறுமாந்து கிடப்பவர்கள் என்பதை நன்கு உணர்ந்து, சமுதாயத்திலே எதை எதையோ கூறி, என்னென்ன காரணமோ காட்டி உழைக்கும் கூட்டத்தைப் பாடு படாத கூட்டம் ஏய்த்து வந்தது போலவே, கலையையும் இந்தச் சுரண்டும் காரியத்துக்குச் சுகபோகிகள் பயன்படுத்துகிறார்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக்குகிறார், காண்டேகார்.

கலைத் துறையிலே, நடைபெற்று வரும், புரட்சியிலே, காண்டேகாரின் முயற்சிக்கு ஓர் முக்கியமான பங்கு உண்டு.

காண்டேகார், மராட்டியர்; சுயமரியாதைக்காரர்; சமதர்ம நோக்கமுடையவர். அவருக்கு மக்களிடம் மட்டற்ற அன்புமட்டுமல்ல, வற்றாத நம்பிக்கை இருக்கிறது. கொடுமைகளைக் களைய வீரர்கள் வாள் எடுத்துக் களம் புகுவது போலக் காண்டேகார், பேனாவைக் கருவியாகக் கொண்டு சுகம் எங்கே? இரு துருவங்கள், கருகிய மொட்டு, வெறுங் கோயில் முதலிய பல ஏடுகள் மூலம், நாட்டுக்குப் பணி புரிந்து வருகிறார்.

கலை, கோயிலுக்கு; இல்லையானால் அரண்மனைக்கு, என்ற நிலையை மாற்றிய, பாரதிதாசன் போலவே, கவை மூலம், கலையை, நாட்டு நிலையை விளக்கவும், அதனைத் திருத்தவும், காண்டேகார், உபயோகிக்கிறார், கலை கலைக்காக அல்ல, கலை, மக்களுக்காக, மக்களின் வாழ்விலே மணம் பரப்புவதற்காக, சிக்கலை அறுக்க; கலை ஓர் கருவி, கால வேகத்தையும் மீறக்கூடியது, அதனை நாட்டுப் பெருங்குடி மக்களின் வாழ்வுக்கு அர்ப்பணிக்கவேண்டும். என்ற

நோக்கத்தோடு, திட்டத்தோடு, வேலை செய்கிறார், இந்தக் கலாசிரியர். ஆகவேதான் இவருடைய கதைகளிலே, 'ஜீவசக்தி' ததும்புகிறது; எழுச்சிக்கு வழி காட்டும் எழிலுடை ஏடுகளாக உள்ளன.

கதை, வெறும்பொழுதுபோக்குக்காக கட்டப்படும் சில நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பதை மட்டுமல்ல, காண்டேகார் மாற்றியது, புதுக் கருத்துக்களைத் தாங்கும் புரட்சி ஏடுகளை, இக்கதைகளின் மூலம் தந்திருக்கிறார். கதைகளிலே, அவர் காட்டும் பாத்திரங்களின் பண்புகள் அவ்வளவும், வாழ்க்கையிலே நமக்கு ஏற்படும் மனப் போராட்டங்களை விளக்கும் சித்திரங்களாக உள்ளன. காதலால் உருகிய கன்னியர், கட்டுக்கு அடங்காத காளை, கபடத்தால் உயிர் வாழ்பவன் என்று பலவகையானவர்களை எத்தனையோ கதாசிரியர்கள் தத்தமது ஏடுகளிலே, காட்டியுள்ளனர். அவைகளைப் படிக்கும்போது, 'ஏன் பத்மா இப்படிப் பதைத்தாள்? சேகர் ஏன் இவ்வளவு சஞ்சலப்பட்டான்? குமாருக்கு இவ்வளவு குரூர குணமா?' என்று கேள்விகள் படிப்பவர் மனதிலே எழுமேயொழிய, அந்தச் சூழ்நிலையிலே யார் இருப்பினும் இப்படித்தான் நடந்தேறி இருக்குமோ என்ற எண்ணம் தோன்றுவது இல்லை. காண்டேகார், சூழ்நிலை, நமக்கு உண்டாக்கும் எண்ணங்கள் உள்ளனவே, அவைகளையே, பாத்திரங்களாக்கிக் காட்டுவதால், கதை உண்மையில் கருத்தோவியமாகிறது.

காண்டேகார் புதுமையை விரும்புபவர்; புதுமையின் பளபளப்பை அல்ல, அதன் ஆழ்ந்த பாடத்தை; அவருடைய முயற்சி அவ்வளவும், திறமை முழுதும், முன்னால் ஏற்பட்ட எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், ஆகியவற்றை முறியடித்து, மனிதத் தன்மையின் மேன்மையை உயர்த்தவேண்டும் என்பதுதான். அவருடைய கதாநாயகிகளின் கண்ணீர் காலடியிலோ அல்லது பூஜா பாத்திரங்களிலோ பெரும்பாலும் விழுவதில்லை; ஆணின் ஆணவம் என்னும் தீயை அணைக்கவே, சிந்தப்படுகிறது. பிரபஞ்சம் மாயை என்று கூறும் பழைமை வாதிகளைக் காண்டேகார், ஆணித்தரமாகக் கண்டிப்பவர். பொதுவாகவே சமுக அமைப்பு முறையிலே, மிகப் புரட்சிகரமான மாறுதல் வேண்டும் என்பதற்கான போர் முரசு, காண்டேகாரின் கதைகள்.

சுகம் எங்கே? என்று கேட்டால் ஏழை செல்வவான், உயர் ஜாதி தாழ்ந்த ஜாதி என்றபேதங்கள் ஒழிந்து, ஆண் பெண்ணை அடிமை கொள்ளும் பழக்கம் ஒழிந்து, மக்கள் நிம்மதி அடைகிற தன்மை இருக்கிறதே, அதுவே சுகம்!—பெண்களின் வாழ்க்கையை குடும்பப் பெரியவர்கள் சிக்கலுள்ள தாக்குவதைக் காண்டேகார் மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

மாட்டிய நாட்டிலே, இவருடைய மறுமலர்ச்சி தரும் ஏடுகள் போற்றப்படுவது போலவே தமிழ்நாட்டிலும், இவருக்குப் பாராட்டுதல் வளர்ந்துவருகிறது.

வாழ்க்கை! இது, மதவாதிகள், வேதாந்திகள் மட்டுமல்ல கலை வாதிகளும் மறக்கவேண்டிய ஒன்று, என்பது, ஓர் வைதீகக் கோட்பாடு. அனேகருடைய அபூர்வமான திறமை, வாழ்க்கையைப் பழிக்க, உதாசீனப்படுத்த அதன் மாய்கை, மோசம், நிலையாமை ஆகியவற்றை வற்புறுத்தவே பயன்பட்டது. காண்டேர்கார், புரட்சி எழுத்தாளர் கூட்டத்தைச் சேர்ந்தவர்; உரைநடை பாரதிதாசன், ஆகவே அவர், "வாழ்க்கை"யைப்பற்றி விளக்க, அதிலே வரக்கூடிய சிக்கல்களைத் தெரிவிக்க, அந்தச் சிக்கல்களின் காரணத்தை அறிவிக்க, அவைகளைப் போக்கும் மார்க்கத்தைத் தீட்டத் தமது திறமையைப் பயன்படுத்துகிறார்.

**"வாழ்க்கை என்பது ஒரு புஷ்பம். அந்தப் புஷ்பத்தின் உயிர் எது ? வண்டைக் கணப்பொழுது மயங்க வைக்கும் மதுத் துளியா? சே! அது அல்ல! ஒவ்வொரு விநாடியும் காற்றலைமீது குதித்து ஓடும் மதுரமான நறுமணம்" என்று.** காண்டேர்கார், **எரிநட்சத்திரம்** என்னும் நூலில் எழுதி இருக்கிறார்.

வண்டை மயங்கவைக்கும் மது போன்றது வாழ்விலே மக்கள் கொள்ளும் பிரேமை—இது வேதாந்திகள் கூற்று; வாழ்வை வெறுக்கவேண்டுமென்று உபதேசிக்கும் போக்கு; மலரிலே மது இருப்பது போல, வாழ்விலே, மயக்கமூட்டும் தன்மை மட்டுமே இருப்பதாக வேதாந்திகள் கூறுவர். மலரின் முழுப் பயனையும் கண்டறியாதது போலவே வாழ்வின் முழுத்தன்மையையும் அவர்கள் கண்டறியாது கூறிய பேச்சு அது. அவர்களின் உரை, மேதைகளின் மதிமொழி என்று கருதப்பட்டு, கவிதை, கதை, கூத்து, எதுவாயினும் இதே கருத்தினையே பலரும் தீட்டித் தீட்டி, வாழ்வு, வெறுக்கப்பட வேண்டுவதொன்று என்ற எண்ணத்தை மக்கள் மனதிலே பதியச் செய்து விட்டனர். காண்டேர்கார், இந்த எண்ணத்தை எப்படிச் சாடுகிறார், பாருங்கள். **மதுவா, புஷ்பத்தின் உயிர்?—சே! அது அல்ல!**—என்கிறார். மயக்கமூட்டும் தன்மைதானா வாழ்வின் நோக்கம், விளைவு? செ! அது அல்ல!

வேறு என்ன காண்டேர்கார் கூறுகிறார், "**ஒவ்வொரு விநாடியும் காற்றலைமீது ஓடும் மதுரமான நறுமணம்**" – புஷ்பத்தின் உயிர்.

பலருக்கு இன்பந் தரும் காரியமாற்றும் தன்மை, சக்தி, வாழ்வுக்கு உண்டு, அதனைச் செய்தலே, வாழ்வின் நோக்கம், என்பதை அழகாக விளக்கிவிட்டார். வாழ்வு ஓர் சுமை அல்ல, வாழ்வு ஓர் சந்தர்ப்பம்—பயன்படுத்திக்

கொள்ளவேண்டிய சந்தர்ப்பம். காண்டேர்கார், இந்தக் கருத்தைப் பல இடங்களிலே வலியுறுத்தி இருக்கிறார். வாழ்வு பெரிதல்ல, கலைதான் பெரிது என்று பேசுபவர்களுக்குக் காண்டேர்கார், நிலமும் ஆகாயமும் என்ற ஓர் உவமை மூலம் அறிவுறுத்தும் தன்மை, ரசமாக இருக்கும். அவர் கேட்கிறார்,

"வாழ்க்கை என்றால் நிலம். கன்னங் கரிய மேடும் பள்ளமுமான சத்தையும் கூளமும் நிரம்பிய நிலம். ஆனால் அதிலிருந்து தான் தானியம் விளையும். கலை என்பது ஆகாயத்தைப் போன்றது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்தாலும், பழங்கள் பூமியில்தான் பழுக்கின்றன,

''ஆனால் அவைகளைப் பழுக்க வைப்பது எது? ஆகாயத்திலிருந்து மழையே பெய்யாவிட்டால்?

ஆகாயத்துக்கு மழை எங்கிருந்து போகிறது? பூமியிலிருந்து தானே?'' என்ன பதில் கூற முடியும், வறட்டு வேதாந்தக்காரர்கள்!!

வாழ்க்கையைப்பற்றி முக்யத்துவம் கொடுத்துப் பேசலாம், எழுதலாம் ஐயா! ஆனால் வாழ்க்கை இன்பம் சூழ்ந்ததாக இருக்கவேண்டுமே, அதற்கு என்ன வழி? வாழ்க்கையிலே எப்படி இன்பம் வரச் செய்வது? என்று கேட்பவர்கள் உண்டல்லவா, அவர்களுக்குக் காண்டேர்கார், வாழ்க்கைக் கீதத்தை விளக்குகிறார், ஓரிடத்தில்.

''வாழ்க்கைச் சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையால் நிருவப்படுகிறது. ஒன்று தொண்டு; மற்றொன்று அன்பு; தொண்டு உலகத்தைக் கவனிக்கச் செய்கிறது? அன்பு மனத்தைக் களிக்கச் செய்கிறது.''

இந்தத் தொண்டும் அன்பும் தான், வாழ்க்கைக் கீதத்தின் நரம்புகள்; புஷ்பத்தின் உயிர், நறுமணம்; வாழ்வின் மேன்மையும், அன்பு தொண்டு ஆகியவற்றிலே இருக்கிறது. எவ்வளவு ஆழ்ந்த பொருள் உள்ள கருத்து!

வாழ்க்கைக் கீதத்தை விளக்கிவிட்டு, வெறும் இலட்சியவாதியாக இருந்துவிடவில்லை காண்டேர்கார். இன்றைய சமுகத்தின் நிலை அவருக்கு விளங்காமற் போகவில்லை. இன்று சுகம் அனுபவிப்பவர்கள் யார் என்பதையும் அவர் தெரிந்துகொள்ளாமல் இல்லை. நொந்த மனதுடன், நீங்களும் நானும், வாழ்க்கையின் ரசத்தைப் பருகும் வீணர்களைப் பற்றி என்ன கூறுவோமோ அதனைக் காண்டேர்கார் அழகுபட "சுகம் என்பது ரசவாதிகளின் ரசகுளிகையைப்போல், கிடைப்பதற்கு அரிய ஒரு பொருள். அது கேவலம் கவியின் கற்பனையில் தான் கிடைக்கக்கூடியது. இவ்வுலகில் மனிதத் தன்மைக்கும் சுகத்துக்கும் சம்பந்தமே இல்லை. இவ்வுலகில் சுகமாக இருக்க வேண்டுபவன் புலியைப்போல் மற்றவர்களின் ரத்தத்தைக் குடிப்பதையே ஆனந்தமாகக் கருத வேண்டும். நியாயம், தியாகம்,

கடமை, மனிதத்தன்மை, நாணயம், நம்பிக்கை ஆகிய சொற்களை மறக்க முடியாதவன் இந்த உலகத்தில் சுகம் அனுபவிக்கத் தகுந்தவனல்ல!" என்று கூறுகிறார். ஆஹா! எவ்வளவு சரியான சவுக்கு, பிறர் உழைப்பிலே சுகம் தேடுபவர்களுக்கு.

வாழ்க்கை, ஏழை மக்களுக்கு, பாட்டாளிக் குடும்பங்களுக்கு, எப்படி இனிப்பாக இருக்க முடியும்? சுகம் எது? சுபீட்சம் எது? நெஞ்சுருகும் அந்த நிலைமையைக் காண்டேகார் படம் பிடிக்கும் திறமையைப் பாருங்கள். "ஒரு குடிசை வாசலில் காலியான மண்ணெண்ணெய்ப் புட்டியை வைத்துக்கொண்டு ஒரு ஸ்திரி உட்கார்ந்திருந்தாள். விளக்கு எரிப்பதற்குக்கூட அவளிடம் எண்ணெய் இல்லை.

மற்றொரு மண் வீட்டின் அசுத்தமான முற்றத்தில் ஒரு குழந்தை தட்டிலிருந்த ரொட்டித் துண்டொன்றைக் கடித்துக் கொண்டிருந்தது. அதைச் சாப்பிட்ட பின்பு தாய் அதற்குத் தண்ணீர் கொடுத்தாள். தட்டில் வேறு ஒன்றும் மிச்சமில்லை. தாய் தண்ணீரைக் குடித்துத் தன் வயிற்றை நிரப்பினாள்.

மூன்றாவது இடத்தில் பாதையில் விழுந்து கிடந்த வாழைத் தோலுக்காக இரண்டு குழந்தைகள் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. கடைசியில் பெரிய மனிதர்களும் வந்து சண்டையில் கலந்துகொண்டனர். அந்தச் சண்டையைத் தீர்ப்பதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

மற்றொரு வீட்டில், ஒரு குழந்தைக்குக் கொதிக்கும் ஜுரம். அதன் பெற்றோர்கள் ஆண்டவனை நோக்கிக் கை தொழுதுகொண்டும், களகளவென்று கண்ணீர் வடித்துக்கொண்டும் இருந்தனர்.

ஒரு நாய் ஓர் எச்சிலையை வாயில் கவ்விக்கொண்டு போயிற்று. ஒரு பிச்சைக்காரன் அதைத் துரத்திக்கொண்டு ஓடினான். அந்த நாய் பாவம், இலையைப் போட்டுத் தாவி ஓடியது. பிச்சைக்காரன் அந்த இலையிலிருந்த எச்சிற் பருக்கையை வாயில் போட்டுக்கொண்டான்."

இவை சுதேசி சினிமா! நாம் நித்த நித்தம் காண்பது! இவைகளுக்குக் காரணம் என்ன? கலாவாணர்கள், ரோஜா மலருவதற்குக் காரணம் கண்டுபிடிக்க முனைந்தனர், "அந்திவானமே! உனக்கு அழகு தந்தது யார்?" என்று கேட்க முனைந்தனர், எச்சில் இலை நாயோடு போராடும் மனிதனே! நீ இந்தக் கதிக்கு ஆளானது ஏன் என்று கேட்க மறுத்தனர். கேட்கக்கூடாதாம், கேட்டுவிட்டால் கலை கெட்டுவிடுமாம்! கேவலம், பிரச்சாரமாகிவிடுமாம்! இந்தக் கலாவாணர்களுக்குக் காண்டேகார், சரியாகக் கசையடி தருகிறார்.

அப்பா கலைவாணா! இப்படி வா! உன் கலை இருக்கிறதே, அது

எங்கே இருந்து வந்தது? என்று கேட்டுப்பதிலும் கூறுகிறார், கலை கலை என்று கூவுபவர்கள் நாணும் படி.

"தொழிலாளிகளின் வாழ்க்கையில் பாலியம், இளமை, மூப்பு, என்ற படிகளே இல்லை. கைகால்களை அசைக்கத் தெரிந்ததோ இல்லையோ உடனே ஒவ்வொரு ஜீவனும் வேலை செய்ய ஆரம்பித்துவிட வேண்டும், இந்த வேலை கைகால்களின் அசைவு நிற்கும் வரையில் நடக்க வேண்டியது. செக்கைப்போல உழைக்க வேண்டியது. இந்தச் செக்கிலே எருதுகள் உழைப்பதோடு போவதில்லை. ஆட்டும் கொப்பரைக்கும் எருதுகளைப் போலவே இரத்தமும் மாமிசமும் உண்டு. இதிலிருந்து ஆடி எடுத்த எண்ணெய் எதற்குத் தெரியுமா? கலை என்ன, சாஸ்திரம் என்ன, தர்மம் என்ன, கலைப் பண்பு என்ற—இவற்றை எல்லாம் பற்றிச் சிந்தனைகள் செய்து செய்து கொதித்துப்போன உயர் வகுப்பாரின் மூளையைச் சாந்தமாக்குவதற்கு அந்த எண்ணெய் வேண்டும்.

கூழுக்கே தாளம்போடும் இடத்தில் கலை ஏது? கல்வி ஏது? குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் வேலை செய்துங்கூடச் சாப்பாட்டு நேரத்துக்குத் தகராறுதான். ஆகவே பணம் செலவழித்துக் கல்வி கற்கும் சக்தி எத்தனை பேரிடம் இருக்கும்? இப்படிக் கோடிக்கணக்கான ஜனங்கள் மிருகங்களைப் போலக் காலம் தள்ளுவதால்தான் உயர் வகுப்பினரின் கலையும் சுகபோகங்களும் நடக்கின்றன. சில நோய்களில் நோயாளியைப் பிழைக்க வைப்பதற்காக ஜனங்கள் தம் ரத்தத்தைக் கொடுப்பது உண்டு. தொழிலாளி வர்க்கம் தலைமுறை தலைமுறைகளாக உயர் வகுப்பாருக்கு இந்த இரத்தத்தை வேண்டிய மட்டும் கொடுத்துவந்திருக்கிறது. ஆனால் இப்படி இரத்தத்தைக் கொடுத்துக் கொடுத்து இப்போது இதுவே சாக நீட்டிவிட்டது அல்லவா?"

பாட்டாளிகளின் இரத்தமப்பா, உன் காவியம், சிற்பம், ஓவியம், என்பன போன்றவை! கலையின் நிலை பற்றிக் களிப்புடன் பேசுகிறாயே, அந்தக் கலைக்கு தண்ணீர், பாட்டாளியின் பச்சை இரத்தம், பரம்பரை பரம்பரையாக அந்த இனம் கொட்டிய குருதியிலே உன் கலை, முளைத்தது, தெரிந்துகொள், என்று எச்சரிக்கிறார்.

கலாரசிகர்களுக்கு, ஆதவன் உதயம், நிலவின் எழில், மலரின் அழகு, போன்றவைகளில்தானே பிரேமை. அதே, காட்சிகளையே காண்டேகர் காட்டுகிறார், அவர்களுக்குப் பாடம் கற்பிக்க. சுகந்தப் புஷ்பங்களைக் காட்டிக் கூறுகிறார்.

"தொழிலாளிகள் யாவருமே இந்த ஸுரங்கி மொட்டுகளைப் போன்றவர்களே அல்லவா? உல

தில் பிறப்பதும் யாருக்காவது தன் உடலிலுள்ள ரத்தத்தைக் கொடுத்து விட்டுச் சாவதுமே அவர்கள் வாழ்க்கை. பூவின் வாழ்விலுள்ள ஆனந்தம் இந்த மொட்டுகளுக்குக் கணநேரமாயினும் கிடைத்திருக்குமா?

படி ஓரணு விலைக்கு இந்த மொட்டுகள் யார் மடியிலும் போய்விழும். நாளைக்கு இவற்றிலிருந்து அத்தர் இறங்கியதும், அதை வாங்குபவன் அஹஹா! அத்தரின் மணம் எவ்வளவு நேர்த்தி! என்று போற்றுவான். அவனுடைய அந்தப் போற்றுதலினால், பலியான இந்த மொட்டுக்களுக்கு என்ன உபயோகம்?''

பிறருக்குப் பயன்பட்ட பரம்பரையில்உதித்த பாட்டாளிகளுக்குத் தங்கள் "சக்தி" தங்களுக்கே தெரியவில்லை அல்லவா? காண்டேர்கார் கூறும் இந்த வாசகங்கள், அவர்களை விழிப்பும் எழுச்சியும் பெறச் செய்யுமல்லவா! புரட்சி வாடை வீசும் சொற்கள், காண்டேர்காரின் ஏடுகளிலே ஏராளம். அவை பாட்டாளிகளின் வெற்றிக்குத் தேவையான புது முறுக்குத் தரும் சக்திவாய்ந்தவை.

"உயர் வகுப்பினரின் வாழ்க்கை நிலவுபோலத்தானே இருக்கிறது? இந்த நிலவு பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக, எவ்வளவு சாந்தமாக இருக்கிறது. ஆனால் சூரியனே இல்லாவிட்டால் சந்திரனுக்கு ஒளி எங்கிருந்து கிடைக்கும்? ரத்தத்தை நீராக்கும் தொழிலாளிகள் இல்லாமற் போனால் உயர் வர்க்கத்தினரின் சுகபோகங்கள் நடக்குமா? கலை சௌந்தரியம், கலைப்பண்பு இந்த பொற்கலசம் பார்ப்பதற்கு அழகு தான் ஆனால் கீழே கோயில் முழுவதும் உறுதியும் காடு முரடுமான கற்களாலேயே கட்ட வேண்டி இருக்கிறது. அந்தப் பொன்னைப்போலவே – இன்னும் கேட்டால் அதையும்விட அதிகமாக—இந்தக் கற்களையும் கவனிக்க வேண்டியதுதான்.'' என்று கூறுகிறார், பாட்டாளிகளின் உழைப்பின் மீதே உன்னதமானது என்று பலரும் போற்றும் கலை கட்டப்பட்டிருக்கும் உண்மையை, புரட்சிக் கவிஞரின், கவிதை மணம், காண்டேர்காரின் உரைநடையிலே தவழ்கிறது என்று கூறலாம்.

"தொழிலாளி என்றால் உயிருள்ள ஒரு யந்திரம்! இந்த உயிருள்ள யந்திரத்துக்கு உயிரில்லாத யந்திரத்துக்குப்படும் அவ்வளவு அக்கறைகூட யாரும் எடுத்துக் கொள்வதில்லை. அவனுடைய சாப்பாடு, துணிமணிகள் வைத்தியம், மருந்துகள் எல்லாம் எவ்வளவு மோசமானவை! ஏழைமை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் நோய். இந்த ஒரு நோயிலிருந்து துர்ப்பழக்கம், திருட்டு, துர்ப்புத்தி முதலிய 72 வகையான நோய்கள் உண்டாகின்றன.

பணம் இல்லாதவன் மிருகம்! பணம் படைத்தவன் ராட்சதன். உலகத்தில்உண்மையானமனிதன்

கண்ணுக்குத் தென்படுவதுதான் அரிதாக இருக்கிறது. குடி, கூத்தி, பந்தயம், போட்டி, இவ்வெல்லாத் தூர்ப்பழக்கங்களுக்கும் வேர் இந்தப்பணவிசனமேவேறுபாட்டுக்குக் காரணம் பணம்; தன்னலத்துக்குக் காரணம்பணம் உலகத்திலுள்ள எல்லாத்துன்பங்களுக்கும் காரணம், விரல்விட்டு எண்ணக்கூடிய சிலபேர்களின் கையில் உருளும் இந்தப் பணந்தான். இன்றைய உலகத்திலுள்ள பணம் சிறு குட்டையில் தேங்கிய நீரைப்போலல்லவா இருக்கிறது? குடிப்பதற்கு இந்த நீர் உபயோகம் இல்லை. மாடுகளுக்கு உபயோகம் இல்லை; ஊர்ந்து செல்லும் சது சதுப்பான விஷக் கிருமிகளின் முட்டைகள் மட்டுமே இதில் நன்றாக வளர்கின்றன. இந்தக் கிருமிகள் பரவிய உடனே, இதன் அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்கள் நொடி நேரத்தில்பொட்டுப்பொட்டென்று சாவதில் வியப்புஎது?' என்று கேட்கிறார் காண்டேர்கார். மனிதனல்ல யந்திரம்! பிறருக்குப் பயன்படும், யந்திரம்! என்றுபாட்டாளி உலகுக்கு அறிவித்து, அவர்களைப் புரட்சி உருவினராக்கும் பணியினை அருமையாகச் செய்கிறார். வாழ்வு பொய்யல்ல, நிஜம்! வாழ்வு மாய்கையல்ல, நல்லது பெறச் சந்தர்ப்பம், வாழ்வுக்கு இரு நரம்புகள், ஒன்று தொண்டு மற்றொன்று அன்பு, இவை இரண்டும் மீட்டப்படுவதால் வாழ்க்கை க்கீதம் கிளம்பும், ஆனால் அந்த இன்னிசையை அனுபவிக்க முடியாதபடி, சமூகத்திலே இருபாம்புகள், இரு துவருங்களிலே இருப்பதால், வாழ்வு வெறுங் கோயிலாகி, களிப்பு, கருகிய மொட்டாகி விடுகிறது, 'மக்கள் சுகம் எங்கே?' என்று தேடி அலைகிறார்கள், எங்கும் எரி நட்சத்திரமே காண்கின்றனர், புயலும் படகும் போல சுயநலமும் இலச்சியமும் மோதுவது காண்கின்றனர்— இதுவே காண்டேர் காரின் கருத்து. உஷா, ஆனந்தன், முத்தண்ணு, கருப்பன், என்று பலப்பல கதாப் பாத்திரங்களை நம் முன்கொண்டுவந்து நிறுத்தி வைத்து அவர்களைக்கொண்டு, கூறவைக்கும் கருத்து, இவைகளே. கதாபாத்திரங்கள் அவ்வளவும், காண்டேர்கார் அமைக்கும், மேடைமீது ஏறி நின்று, புரட்சி முழக்கம் செய்யும், பிரசாரகர்கள்!

இவ்வளவு கொடுமைகள் இருந்தும், ஏன் இந்தமக்கள், பிறரால் சுறண்டப்பட்டு, சுருண்டுபோகிறார்கள்? ஏன்புரட்சி உணர்ச்சி தோன்றவில்லை? இதேகேள்வி நமக்குப் பலதடவை தோன்றுகிறதல்லவா? இதுவரைக் கலைத் துறையின் காவலர்களாக இருந்தவர்கள், "இதெல்லாம்" கர்மம் என்றனர், சிலர், வெறும் மனப்பிராந்திஎன்றனர், புரட்சிமுரசு கொட்டவில்லை. ஓடப்பர்ஒப்பப்பர் ஆகவேண்டும் என்றுபுரட்சிக்கவி பாடினர் பாரதிதாசன். அவ்வித

மே, உரைநடையில் கூறுகிறார் காண்டேர்கார்.

புரட்சி செய்ய வேண்டியது தான். கொடுமைகள் பொடிபட, புது உலகுதழைக்க. ஆனால் அவர்களால் முடியாது, என்றுகாண்டேர்கார், உள்ளம் உருக்கும் முறையிலே எடுத்துக்கூறி, அவர்களால் முடியாது என்பதனுல், கைகட்டிக் கொண்டு வாய்பொத்திக்கொண்டு நீ இராதே, இந்தப் பணி உன்னுடையது, மகத்தான வேலை உன்முன் இருக்கிறது, என்று நமக்கெல்லாம் அறிவுறுத்தும் முறையில் கூறுகிறார்.

"புரட்சிசெய்வதற்கும், போரும் சச்சரவும் நிகழ்த்தி அதில் வெற்றி பெறுவதற்கும் வேண்டிய தைரியம் இவர்களிடம் ஏது? தம்வேலைக்காரர்கள் பயங்கொள்ளிகளாக இருப்பதற்குவேண்டிய முயற்சிகளையே எஜமானர்கள் எப்போதும் செய்து வருகிறார்கள். கஷ்டப்பட்டு வாழும் இந்த மனிதர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிவதில்லை. மனிதனின் விதி அவனுடைய தலை எழுத்தில் இல்லை. அவனுடைய மனோபலத்தில்தான் இருக்கிறது என்றவிஷயம் இவர்களுக்குப் புரிவதில்லை. ஆண்டவனுக்கு எப்தாவது நம்மீது இரக்கம் பிறக்கும் என்ற பைத்தியக்கார ஆசையும் இவர்களைவிட்டு விலகுவதில்லை. அப்படி இருக்க, எந்தச் சமூகத்துக்காக நாம் செத்துச் சுண்ணும்பு ஆகிறோமோ அந்தச் சமூகம் நாம் உயிர் வாழ்வதற்குரிய சாதாரணமான சுகங்களைக் கூட நமக்கு அளிப்பதில்லை, என் பதைப்பற்றிக் கிளர்ச்சி செய்யும் அறிவு இவர்களுக்கு எங்கிருந்து வரும்?

"மிதிபட்ட ஜனங்களைவிழிக்கச் செய்வது, மனிதர்கள் என்றமுறையில் அவர்கள் தமக்கு உரிமையான வற்றைப் பெறுவதற்காகச் சச்சரவும் நெருக்கடியும் போரும் விளைவிக்கவும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தார் போல், அப்போர்களிலே தங்கள் உடல்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் அவர்களைத் தயார் செய்வது, எவ்வளவு பெரியவேலைகள், நம் தலைமுறைக்கு இருக்கின்றன." என்று கூறுகிறார்.

இவ்வளவு விளக்கமாகக் கூறினும், நம் நாட்டு மேதைகள் 'கல்வி பரவினுல், எல்லாப்பிணியும் அகலும்,' என்று கூறுகிறார்களல்லவா! காண்டேர்கார், அவர்களையும் விடவில்லை, கல்வி வரட்டும், என்று காத்திருந்து பயன் இல்லை, கல்வி வராதபடி ஒருதடை இருக்கிறது என்று காட்டுகிறார்.

**"கல்வி என்பது தண்ணீர்! அதைச் சமூக விருட்சத்தின்வேரில் ஊற்றினுல் நம்வேலை ஆகிவிட்டது என்று நினைத்தேன். ஆனுல் இந்த மரத்தின் வேரிலுள்ளஜாதித் துவேஷமும், பேதபுத்தியும் பணத்துக்கு அடிமைத்தனமு மாகிய புழுக்களா அதை வளரவிடப்போகின்றன? இந்தப்புழுக்கள் சாக வேண்டும் அவற்றைக்கொல்ல**

(29-ப் பக்கம் பார்க்க)

# ஜூலியஸ் ராய்ட்டர்!

(தென்காசி—ரஷீத்)

நாம் தினசரி படிக்கும் செய்தித் தாள்களில் செய்திகளுக்குக் கீழே ராய்ட்டர், ரேபன் என்ற பெயர்களும் பி. டி. ஐ. என்ற மூன்று ஆங்கிலச் சொற்களும் காணப்படுகின்றன. செய்தித் தாள்கட்கு செய்திகளைக் கொடுக்கும் செய்தி நிலையங்களின் பெயர்களே அவை. இந்தியச் செய்தி நிலையத்தைக் குறிப்பிட (Press Trust of India) பி. டி. ஐ. என்ற ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கின்றனர். இந்தியாவில் இருப்பது போன்று உலகெங்கிலும் உள்ள நாடுகளில் அந்தந்த நாட்டுச் செய்தி நிலையங்கள் இருக்கின்றன. அவைகள் வெளி நாடுகளில் இருக்கும் தத்தம் நிருபர்களும் மற்ற செய்தி நிலையங்களும் கொடுக்கும் செய்திகளைச் சேகரித்து உள்நாட்டில் பல்வேறு நகரங்களிலுள்ள செய்தித் தாள்களுக்குக் கொடுக்கின்றன. இப்படி வாங்கும் செய்திகட்கு செய்தித் தாள்கள் பணம் கொடுப்பதுண்டு.

இப்படி உலகெங்கிலும் செய்தி நிலையங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது, உலகில் முதன் முதலாகத் தோன்றியதும் மிகப் பெரியதுமான ராய்ட்டர் செய்தி நிலையமேயாகும். இச் செய்தி நிலையத்தை நிறுவியவர் ஜூலியஸ் ராய்ட்டர் என்னும் ஜெர்மானியராவர். இவர் 1816-ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள கேசல் நகரில் பிறந்தார். தன் வாலிபப் பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்ததால் தன் சிறிய தகப்பனர் ஆதரவுடன் வங்கியொன்றில் குமாஸ்தாவாகப் பணியாற்றினர். வங்கியில் பணியாற்றுவதன் மூலம் தம் வாழ்க்கைக்குப் போதுமான வருமானம் கிடைக்காதென்பதைக் கண்ட ராய்ட்டர் வாங்கியிலிருந்து விலகி கூட்டாளிகள் பலரைச் சேர்த்து வியாபாரம் செய்யத் தொடங்கினர். வியாபாரம் கொஞ்ச காலம் ஓடவே மீண்டும் வருவாயின்றி அந்த வியாபாரத்ததயும் கைவிட்டனர்.

வியாபாரிகள் மற்ற நகரங்களிலுள்ள விலைவாசிகளை தபால் வருவதற்கு முன்னமேயே தெரிந்து கொள்ள ஆவலுற்றனர் என்பதை தன் வியாபாரத்தின் போது கண்ணுற்ற ராய்ட்டர் தாம் அப்படி முன்னதாகவே செய்திகளைக் கொடுத்து பணம் வாங்கலாம் என்ற எண்ணத்துடன் பிரசிலில் உள்ள தமது நண்பரை அணுகி தம் எண்ணத்தைச் சொன்னர். அந்நண்பரும் அங்குள்ள செய்திகளை அனுப்பித் தருவதாகச் சொன்னர். அதன்படியே பிரசிலுள்ள வியாபாரச் செய்தி தபால் வருவதற்குப் பல மணி நேரங்களுக்கு முன்பாக

புருக்களின் மூலமாக ராய்ட்டருக்கு வந்து சேர்ந்தன. இப்படி வரும் செய்திகளைக் கொடுத்துப் பணம் வாங்கினர் ராய்ட்டர்.

இச் சமயத்தில் லண்டனுக்கும் பாரிசுக்கும் இடையே தந்திப் போக்குவரத்து ஏற்படவே தம் தொழிலை விருத்தி செய்யும்நோக்கத்துடன் லண்டனில் குடியேறினர் ராய்ட்டர். அங்குள்ள முக்கிய வியாபாரப் பகுதியொன்றில் தமது நிலையத்தை அமைத்துக் கொண்டு வாடிக்கைக்காரர்கள் பலரைப் பிடித்து அவர்கட்குச் செய்திகள் அளித்து வந்தார். கொஞ்ச காலத்தில் ஐரோப்பிய நகரங்களிலுள்ள செய்திகளைத் தந்தி மூலமாகவும் இந்தியாவிலுள்ள செய்திகளை சுயஸ் வரை கப்பலிலும் கொண்டு வந்து அங்கிருந்து தந்தி மூலமாயும் தெரிவிக்கும்படி நிருபர்களை ஏற்படுத்தினர்.

பின் 1858-ல் வியாபாரச் செய்திகளோடு செய்தித் தாள்கட்கு வேண்டிய செய்திகளையும் தமக்கு அனுப்பும்படி ஏற்பாடு செய்தார். அப்படி வந்த வெளிநாட்டுச் செய்திகளை இங்கிலாந்திலுள்ள செய்தித் தாள்கள் பலவற்றிற்கும் கொடுக்க முன் வந்தார். அவைகளில் சில பத்திரிகைகளை பணம் கொடுத்து இவரின் செய்திகளை வாங்க முன் வந்தன. சில இவரின் செய்திகளைப் புறக்கணித்தன. இச் சமயத்தில் பிரெஞ்சு சக்ரவர்த்தி மூன்றும் நெப்போலியன் ஆற்றிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சொற்பொழிவொன்று அவர் பிரெஞ்சில் சொற்பொழிவாற்றிய கொஞ்ச நேரத்தில் இங்கிலாந்திலுள்ள சில செய்தித்தாள்களில் வெளியாயின. இதுகண்ட மற்றச் செய்தித்தாள் வியப்படைந்ததோடு தமது அறியாமையை உணர்ந்து அன்று முதல் ராய்ட்டர் நிலையத்தில் செய்திகள் வாங்க முன்வந்தன. அதோடு செய்திகளின் கீழே ராய்ட்டர் செய்தி என குறிப்பிடவும் ஆரம்பித்தன. இது கண்ட ராய்ட்டர் மேலும் பல இடங்களில் நிருபர்களை நியமித்ததோடு யுத்தச் செய்திகளைச் சேகரிக்கும் பொருட்டுத் தனி நிருபர்களும் ஏற்படுத்தினர்.

1865-ம் ஆண்டு ராயட்டரின் செய்தி நிலையம் மிகப் பெரியதாயிற்று. பங்குதாரர்களாகப் பலர் சேர்ந்தனர். நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ராயட்டர் ஏற்றுக்கொண்டார். இச் செய்தி நிலையத்தைப் பின்பற்றி ஆரம்பிக்கப்பட்ட மற்றும் பல செய்தி நிலையங்களுக்கும் இந்நிலையம் மனமுவந்துசெய்திகள் கொடுத்து- இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பல செய்தி நிலையங்கள் அவற்றுடன் தொடர்புகொண்டன. இன்றைய நமது இந்தியச் செய்தி நிலையமும் ராயட்டருடன் தொடர்பு கொண்டுள்ளது. இவ்வாறு மனித உலகிற்காக மாபெரும் சாதனைகள் புரிந்த ராயட்டர் 1890-ம் ஆண்டு லண்டனில் காலமானர். ராயட்டரின் பூத

(29-ம் பக்கம் பார்க்க)

# அரைநாள் படிப்பு அங்கும் உண்டு! ஆனல்...?

**அரைநாள் படிப்பு—அரைநாள் தொழில்** என்ற முறை, செல்வப் பெருக்கில் மேலோங்கி நிற்கும் **அமெரிக்காவிலும் உண்டு. ஆனல்,**

(1) அந்தமுறை 16 வயதுள்ளவர்களுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் மட்டுமே, என்று அங்கு வகுக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல், 5 வயதுக்கும் 11–வயதுக்கும் உட்பட்டவர்களுக்கு என்று இங்குள்ளதைப் போல் வகுக்கப்படவில்லை.

(2) ஆரம்பப்பள்ளி, நடுத்தரப் பள்ளி ஆகியவைகள் நீக்கி உயர் நிலைப்பள்ளியிலும், கல்லூரியிலும் மட்டுமேதான் அந்த முறை அங்கு கையாளப் படுகிறதேயல்லாமல், இங்குள்ளதைப்போல், ஆரம்பப்பள்ளிக்கு மட்டுமே என்று செய்யப்படவில்லை.

(3) அங்கு அரைநாள் படிப்புப் படித்து, அரை நாள்தொழில் செய்ய அல்லது தொழிற்பயிற்சி பெற விரும்புபவர்கள் அப்படிச் **செய்யலாம்** என்றிருக்கிறதேயொழிய, இங்குள்ளதைப்போன்று அரைநாள்மட்டுமே படிக்க**வேண்டும்** அரைநாள் மட்டும் தொழில் செய்ய **வேண்டும்** என்றில்லை.

(4) அங்கு முழுநேரமும் படிக்கவேண்டுமென்றாலும், அல்லது அரை நேரம் மட்டுமே படிக்கவேண்டுமென்றாலும் அதற்கான வாய்ப்பு உண்டு, அது அவரவர் **விருப்பத்தைப்** பொறுத்ததேயொழிய, இங்குள்ளதைப் போல ஆரம்பப்பள்ளிகளிலுள்ள அனைவரும் அரைநேரம்மட்டுமே படிக்கவேண்டும் என்ற **கட்டாயம்** இல்லை.

(5) அங்குக் கல்வி நிலையத் தலைவர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் ஏற்படும் உடன்பாட்டின்பேரில், தொழிற்பயிற்சி கற்பிக்கப்படுமே யொழிய, இங்குள்ளதைப்போல், பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் சொந்த முயற்சிலேயே பொறுப்

---

(26–ம் பக்கத் தொடர்ச்சி)

**வேண்டும்.'** என்று கூறுகிருர். இனி என்ன வேண்டும், காண்டேர்கார். மராட்டிய பாரதிதாசன், உறை நடைப் பாரதிதாசன் என்று உவகையுடன் கூற.

**(திராவிட நாடு)**

---

(28–ம் பக்கத் தொடர்ச்சி)

உடல் நம்மைவிட்டுச் சென்றுவிட்டது. ஆனல் அவர் செய்த சேவைகளை மக்கள் என்றென்றும் நினைத்துக்கொள்ளும் பொருட்டு அவரது பெயர் மட்டும் நம்மிடையே தினம் தினம் இரவு பகல் எல்லா நேரங்களும் நம் கண் முன் காட்சியளித்துக் காதுகளிலும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. —'தமிழ் நாடு'

பெற்றுக்கொள்வார்கள் என்று விட்டுவிடும் நிலை இல்லை.

(6) அங்கு அவரவர் பொறுப் புணரக்கூடியவயதில்,அவரவர்க்கு விருப்பமான தொழிலை விருப்பப் படிக் கல்வியோடு சேர்த்துக் கற் றுக்கொள்ளலாம் என்று இருக் கிறதே யொழிய, இங்குள்ள தைப்போல், பொறுப்பறியாப் பருவத்தில், குலத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும்என்று வற்புறுத்தப்படுவதில்லை.

(7) அங்கு, வளரும்—வளத் தைப் பெருக்கும்—உலகச் சந் தையைப் பிடிக்கும் விஞ்ஞானத் தொழிற் பயிற்சியை பெற திட் டம் வகுத்திருக்கிறார்களே யொ ழிய, இங்குள்ளதைப்போல, மிக் க வருவாயைத் தராத—உலகச் சந்தையைப் பிடித்துத்தராத— உள்நாட்டிலேயே நெருக்கடியை உண்டாக்கிக் கொண்டிருக்கும் கிராமக் குடிசைத்தொழில்களைக் கற்கத் திட்டம் தீட்டவில்லை.

அமெரிக்காவில் ஆரம்பப்பள் ளிகள் அடிப்படை அறிவை மாணவர்களுக்குக் கற்பித்து, அவர்களின் பண்புகளைப் பக்கு வப்படுத்தும் அறிவுப் பயிற்சிக் கூடங்களாகத் தாம் இருந்து வரு கின்றனவே யல்லாமல், தொழிற் பயிற்சிக் கூடங்களாக ஆக்கப்பட வில்லை.

அமெரிக்காவில் பெருநகரங்க ளிலும், சிறு நகரங்களிலும் உள் ள உயர்நிலைப் பள்ளிகள்—கல்லூ ரிகள் ஆகியவைகள் ஆங்காங் குள்ள வணிக நிலையங்களோடும், தொழிற்சாலைகளோடும் தொடர் புவைத்துக்கொள்கின்றன. மாண வர்களுக்குத் தொழிற்சாலைகள் சோதனைக் கூடங்களாக விளங்கு கின்றன. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கும் மாண வர்கள் தங்களுக்கு விருப்பமான தொழிலைத் தெரிந்து கொண்டு, அதனைத் தொழிற் கூடங்களுக் குச் சென்று பயிலுகிறார்கள்.

இவ்வாறு, விஞ்ஞானத்துணை யால் வளர்ந்த தொழிற்கூடங்க ளும், வாணிப நிலையங்களும் உயர்நிலை பள்ளிக்கூடங்களோடு ஒத்துழைப்பதால், படிப்பு முடிந் தவுடன் மாணவர் யாதேனும் தொழிற்செய்வதற்கு வசதியாக இருக்கிறது; மாணவர்கள் பாட சாலைகளை விட்டு வெளியேறிய வுடன் எளிதாக யாதேனும் வேலை செய்யக்கூடியவர்க ளாகி றார்கள்.

வாழ்க்கையைப்பற்றித் தெரிந் துகொள்ளக் கூடிய, பொறுப்பு உணரக்கூடிய வயதான **பதினாறு வயதுக்கு மேற்பட்டோர்க்கே** இந்த முறை என்று வகுக்கப்பட் டிருப்பதால், அத்தகைய மாண வர்கள் பள்ளிகளில் பொதுக் கல்வி பெற்றுக்கொண்டுதொழிற் கூடங்களில் தொழிற்பயிற்சி பெறுகிறார்கள்.

அமெரிக்காவில் வயதுவந்த மாணவர்கள் பெரும்பாலும் அரை நாள் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள்; அரை நாள் தொ ழிற்கூடத்தில் வேலை செய்கிறார்

கள். சில இடங்களில் ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்குப் போவார்கள்; மறு நாள் தொழிற்கூடத்துக்குப்போவார்கள். வேறு சில இடங்களில் இரண்டு மாணவர்கள் ஒரே வேலை செய்வார்கள். அவர்களுள் ஒருவர் பள்ளிக்கூடத்திற்குப் போகும் போது மற்றவர் வேலைக்குப் போவார். வேலைக்குப் போனவர் பள்ளிக்கூடத்துக்குப்போகும் போது மற்றவர் வேலைக்குப்போவார்.

தொழிற்கூடத்தில் செய்யும் வேலைக்கு மாணவருக்குச் சம்பளம் கிடைக்கும். செய்யவேண்டிய வேலைபற்றியும் சம்பளம் பற்றியும் பள்ளிக்கூடத்து அதிகாரிகளும் தொழில் அதிகாரிகளும் ஒப்பந்தம்செய்து கொள்வார்கள். தொழில் கற்றுக்கொடுப்பதற்கு வேண்டிய கருவிகளையும் வசதிகளையும் தொழிற்கூடங்கள் கொடுக்கின்றன. ஆதலால் செலவில்லாமல் பல்வகைத் தொழில்களையும் மாணவர்கள் படிக்கிறார்கள்.

அமெரிக்காவில் தொழிலும் படிப்பும் கலந்த இத்திட்டம் ஐந்து வகைப்படும்.

(1) தொழிற்சாலைத் தொழில்கள்:—இந்த திட்டத்தின்படி மாணவர்கள் தொழிற்சாலைகளில் மோட்டார் மெக்கானிஸம், உலோக வேலை, மின்சாரவேலை முதலிய யாதேனும் வேலை பழகித் திறமைவாய்ந்தவர்களாகிவிடுகிறார்கள்.

(2) அலுவலக வேலைகள் :— சில மாணவர்கள் கணக்குப் பதிதல், திட்டம் தீட்டுதல், செயலாற்றல் போன்ற அலுவலக வேலைகள் பயில்கிறார்கள். அவற்றிற்குரிய படிப்பு பாடசாலையில் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

(3) விற்பனை வேலை :—சாமான்களை விற்பதற்குரிய பயிற்சி இதனால் அளிக்கப்படுகிறது.

(4) பல்வகை வேலைகள் :— இத்திட்டத்தின் படி சில மாணவர் ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகள் பயில்கின்றனர்.

(5) தொழிற்பயிற்சி :— இத்திட்டத்தின்படி தொழிலுக்குரிய படிப்பு வகுப்பறையிலும் சொல்லிக்கொடுக்கப்படும்; திறமைவாய்ந்த தொழில் வினைஞர்களாகவும், தச்சுவேலை செய்வோராகவும், மின்சார வேலையாட்களாகவும் ஆவதற்குப் பயிற்சியும் அளிக்கப்படும்.

அரைநாள் படிப்பு அங்கும் உண்டு! ஆனால் அங்கு அது வளர்ச்சிதரும் வகையில அமைந்திருக்கிறது, இங்கு வர்ணாச்சிரமத்தை நிலை நாட்டும் வகையில் அமைந்திருக்கிறது! காரணம் இங்கு திட்டம் தீட்டியவர் விஞ்ஞானி அல்ல, வேதாந்தி!

**“மன்றம்”**

# புதிய கல்வித் திட்டத்தின் பலாபலன்கள்

## குறிப்பு.

1. மந்திரியார் உத்தரவிடுகிறார்கள். அதை கல்வி இலாகா ஏற்று நடத்த வேண்டியது இலாகாவின் கடமை,

2. கல்வி இலாகா உத்தரவிடுகிறது. அதை உத்தியோகஸ்தர்கள் ஏற்று நடத்துகிறார்கள்.

3. உத்தியோகஸ்தர்கள் உத்தரவிடுகிறார்கள். அதை ஏற்று நடத்த முயற்சிப்பவர்கள் ஆசிரியர்கள்.

## ஆனால்

அதில் மறைந்து தொனிக்கக் கூடிய விஷயம் யாதெனில் ஒவ்வொரு வகை உத்தியோகஸ்தர்களும் இது மேன்மையான திட்டம் இது கட்டாயம் அமல் நடத்தப்படவேண்டும் என மேடைப் பிரசங்கங்கள் செய்வதும், கீழ்க் கடையிலுள்ளவர்களுக்கு உத்தரவுமிடுகிறார்களே தவிர அவரவர்கள் உணர்ச்சியோடு கருதும் கருத்துக்களாகாது (உ—ம்) அரசன் மந்திரிமார்களைப் பார்த்து மந்திரிகளே இந்த மலை மீது அருமையான நெல் சாகுபடி செய்யலாமா என்று கேட்கும்போது, ஆமாம் மகாராஜா நல்ல விளைச்சல் விளையும் எனவும், அரசன் இது மலையாச்சே தண்ணீர் தங்காதே நெல் எப்படி விளையும் என வினவியபோது, ஆமாம் மகாராஜா நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம் எனச் சொல்வதாக கிராமாந்தரங்களில் கூறும் பழமொழி. இதைப் போலவே நமது மந்திரிமார்கள் எதைச் சொன்னாலும் அது சரியில்லையென்று கூறிவிட்டால் தங்கள் உத்தியோகங்களுக்கு ஆபத்து வந்துவிடுமேயென்று வயிற்றுப் பிழைப்பைக் காக்க ஆதரிக்கும் கருத்தேயாகும்.

## திட்டத்தைப் பற்றிய கருத்து

1. கிராமாந்திரங்களிலும் நகரங்களிலுமுள்ள ஏழை மக்கள் தங்கள் வாழ்க்கையின் சீர்கேட்டின் காரணமாக தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டுமென்ற கருத்து பெரும்பாலோர்களுக்குக் கிடையாதென்பது, நாம் அனுபவத்தில் கண்ட விபரமாகும்.

## காரணம்

பெற்றோர்களில் பெரும்பாலோர் ஏழைகள், தங்கள் வாழ்நாளுக்குரிய ஊதியத்தைச் சம்பாதிக்க கூலி வேலை தேடி சுமார் 2, 3 மைல்களுக்கும் அப்பால் புருஷன் மனைவியுடன் போய் வேலை செய்து வரவேண்டிய நிலைமையிலிருக்கிறார்கள். இந்த நிலைமையில் குடும்ப சாப்பாட்டிற்கு போதாத நிலைமையில் தங்கள் பிள்ளைகளை ஒரு தனவந்தரிடம்

ஆடு மேய்க்கவோ, மாடு மேய்க்கவோ, ஏவலாள்வேலைசெய்யவோ அமர்த்தி தங்கள் பிள்ளைகளின் பசிப்பிணியைத் தீர்க்க வழிதேடுகிறார்கள்.

2. ஒரு சிலர் தங்கள் குழந்தைகளையும் தாங்கள் வேலைக்குப் போகும் காலத்தில் தங்களுக்குப் பதிலாக வீட்டைப் பாதுகாத்துக் கொள்ளவோ அல்லது தங்கள் கைக்குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளத் தாங்கள் தொழில் புரியப்போகுமிடத்துக்குக் கூடவே கூட்டிக்கொண்டே போய்விடுகிறார்கள். காலையில் தங்களுடன் கூட்டிப்போன பாடசாலை வயதுப் பையன்களும் பெற்றோர்கள் மாலையில் வீடு திரும்பும் போதுதான் கூடவே வீட்டுக்கு திரும்புகிறார்கள்.

## N. B.

இந்தச் சந்தர்ப்பத்தில் புதிய திட்டத்தின் அம்சங்களை விரும்புகிறவர்கள் யார் யார் என்றால், ஏழைகள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகக் கருதி தங்கள் பிள்ளைகளை ஆசிரியர்கள் பாடசாலைக்கு வரச்சொல்லிக் கட்டாயப்படுத்தாமலிருக்கட்டுமென்று நினைக்கக்கூடிய பெற்றோர்களும்.

2. ஏழைகள் படித்து முன்னேறக்கூடாமல் பணக்காரர்களின் அடிமைகளாகவே இருக்க வேண்டுமென நினைக்கும் பணக்காரக் கும்பலுமேயாகும்.

3. மந்திரிமார்களின் தயவுக்காகவும், உத்தியோகத்தின் உயர்வுக்காகவும் எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதை ஆக்ஷேபிக்க வேண்டுமெனக் கருதுபவர்களே தவிர உண்மையையும் நியாயத்தையும் கருதக்கூடியவர்கள் எவருமே இதை ஆதரிக்கமாட்டார்கள்.

### உதாரணமாக

ஒரு மாணவனின் பெற்றோர்கள் கூலிவேலை செய்பவர்கள். அவர்கள் காலை 6 மணிக்கு 3 மைல்களுக்கு வெளியில் போய் வேலை செய்பவர்களாவர். அவர்களின் பிள்ளைகள் காலையில் பள்ளிக்கு வருகிறவர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அப்பிள்ளைகள் மாலையில் பாடசாலைக்கு வரவேண்டியதில்லை. பெற்றோர்கள் 2 அல்லது 3 மைல்களுக்கப்பால் வேலைக்குப் போயிருப்பார்கள். பிள்ளை மாலையில் பெற்றோர்களிடம் போகவும் முடியாது. பாடசாலைக்கு வரவும் முடியாது. பையன் எவருடைய கண் காணிப்புமின்றி அனாதையாகத் தெருவில் திரிந்து ஆபத்துக்குள்ளாகிறான். இதை முன்னிட்டு பெற்றோர்கள் மாலையில் பள்ளிக்குச் செல்ல வேண்டிய பிள்ளையையும் காலையில் யாருடைய பாதுகாப்புமின்றி வீட்டில் விட்டுப்போக இஷ்டப்படாமல் தங்களுடன் கூட்டிப் போய் விடுகிறார்கள், தங்கள் பிள்ளைகளைத் தாங்கள் வேலை செய்யுமிடங்களிலிருந்து மாலை வகுப்புக்கு 12 மணி வெயிலில் தனிமையாகக் காட்டிலிருந்து

அனுப்புவார்களா? இது சாத்தியப்படுமா?

N. B.

இந்த விஷயத்தில் ஆசிரியர்கள் மேலதிகாரிகளுக்குப் பயந்து, ராமன் மகன் லவன் காலையில் வந்திருப்பான் அவன் மாலையில் லக்ஷ்மணன் மகன் குகன் என அழைக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிடுகிறது. இது அரசாங்கத்தாரே கள்ளத்தனம் செய்யக் கற்றுக்கொடுக்கும் வழியாகும்.

இரண்டாவதாக

ஆசிரியர்கள் என்றால் ஏழ்மையின் காரணமாகவும், கல்வியின் அலட்சியத்தின் காரணமாகவும், மதிக்கப்படாதவர்களாக ஆக்கப்பட்டுள்ள இந்தக் காலத்தில் ஆசிரியர்கள் பாடசாலை வயதுள்ள அத்தனை பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்க்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கிறது.

அரசாங்க உத்தரவுக்குப் பயந்து தங்கள் வயிறு பசியால் வாடினாலும் அரசாங்க உத்தரவை மதிக்கவேண்டுமே எனக் கருதி தங்கள் வருவாயில் சிறிது பாகத்தைச் செலவிட்டு சிறு மாணவர்களுக்கு பப்பர்மெண்ட் வாங்கிக் கொடுத்து பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். இதே சமயத்தில் பாடசாலை வயதுள்ள பெற்றோர்களுடன் வேலை செய்யக் கூடிய குழந்தைகளைச் சேர்க்கப் பிரயாசப்பட்டு பெற்றோர்களைக் கண்டு பேசும்போது, என் குழந்தை தினம் 0-12-0 அணா சம்பாதிக்கிறான் அவனைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் நாங்கள் சாப்பாட்டிற்கு என்ன செய்வோம் அப்படி கட்டாயம் அனுப்ப வேண்டுமானால் வாத்தியார் தினம் 8 அணாவாவது கொடுப்பதாயிருந்தால் அனுப்புகிறோம் என்று கூறுகிறார்கள். ஆசிரியர்களுக்கு எந்த அதிகாரத்தால் பிள்ளைகளைச் சேர்க்க முடியுமென்பதைச் சிறிது கவனிக்கவும்.

N. B.

தற்போதைய பாடசாலை வயதுள்ள பிள்ளைகளில் பெரும்பாலோர் இப்புதிய திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர் இன்னும் சேர்க்கப்படவேண்டியவர்கள் 20 சதவிகிதமே இருக்குமெனக் கருதப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 18 சதவிகிதமே கல்வி கற்றுள்ளார்கள் எனக் கணக்கிடும் இந்தக் காலத்தில் ஆசிரியர்களைப் பெருக்கி எல்லாரையும் கற்றவர்களாக்க வேண்டியிருக்கும் இந்தக் காலத்தில் ஆசிரியர்கள் குறைப்பு என்ற படலம் ஆரம்பமாகிறது.

ஆசிரியர்கள் ஒன்றுக்கு ஆஜர் மாணவர்கள் 30 விகிதமிருக்க வேண்டுமென்பதன் காரணமாக பாடசாலை நிர்வாகிகள் 50 சதவிகித ஆசிரியர்களைப் பாடசாலையினின்று நீக்கப்படுமென்பதாக நோட்டீஸ் கொடுத்துவிட்டனர்.

மாணவர்களின் ஆஜரைப் பொருத்து ஆசிரியர்கள் குறைக்கப்பட அவசியம் ஏற்படுமானல் ஏற்கனவே வேலையில்லாமல் திண்டாடும் ஆசிரியர்கள் அநேகம் பேர்களிருக்க, தற்போதும் மாணவர்களின் ஆஜர் உயர்த்தப் பட்டதால் பாடசாலையில் சேர்க்கப்படவேண்டிய அத்தனை பிள்ளைகளையும் பாடசாலையிலேயே சேர்த்துவிட்டாலும்கூட தற்போது வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு 30 மாணவர்கள் வீதம் ஆஜர் காட்ட முடியாதென்பது புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டும்.

## இறுதியாக

ஆசிரியர்கள் மாணவர்களைச் சேர்ப்பது என்பது இயலாத காரியமாகும். பெற்றோர்கள் இன்னும் அந்தப் பக்குவத்துக்கு வரவுமில்லை. அரசாங்கம் அப்பிரச்சனைக்கு கொண்டு வரவுமில்லை. ஆகையால் பாடசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பது என்னும் நோக்கத்தை அரசாங்கத்தின் நுண்ணிய கருத்துக்களால் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்பதும், மாணவர்களின் ஆஜரைப் பொருத்து ஆசிரியர்களைக் குறைக்கப்படுமென்பதையும் உடனடியாக அரசாங்கம் கவனம் செலுத்தி உடனடியாக வேலை செய்யும் ஆசிரியர்களைப் பாடசாலையினின்று நீக்கப்படாமலும், இன்னும் வேலையில்லாமல் திண்டாடும் ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க வழிசெய்ய வேண்டுமென்பதைக் குறித்து அசெம்பளியிலும் பொது ஜனங்களும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

---

# அறிஞர் வாயுறை

மனம் எவ்விடத்தில் அச்சமின்றி உலவுகிறதோ, குறுகிய எண்ணங்கள் எவ்விடத்தில் குடிகொள்ளாமல் இருக்கின்றனவோ, சொற்கள் எவ்விடத்தில் வாய்மையின் ஆழத்திலிருந்து பிறக்கின்றனவோ, சளையாத உழைப்பு எவ்விடத்தில் முழுமைத் தன்மையைப் பயணம் செய்துகொண்டிருக்கிறதோ, பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை எவ்விடத்தில் செத்துப்போன பழக்க வழக்கம் என்னும் வரண்ட பாலைவனத்தில் புகுந்து மறையாமல் இருக்கிறதோ, அந்த சுதந்தர பூமியை நோக்கி என் நாடு செல்லட்டும்.

— கவிஞர் தாகூர்.

# ஆசிரியர்களுக்கு இரு பக்கமும் இடி

மதுரைத் தாலுகா அவனியாபுரம் கிராமத்தில் உள்ள ஜில்லா போர்டு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் கீழே கண்டபடி உள்ள மகஜரில் ஊரில் உள்ள சில பெரிய மனிதர்களிடம் (தனித்தனியாக) கையெழுத்து வாங்கினார்கள். அதை என்னவென்று விசாரித்ததில் சர்க்காரின் ரகசிய உத்தரவு என்று சொன்னார்கள்.

மகஜர் விபரம்:—

மதுரை ஜில்லா கனம் கல்வி அதிகாரி அவர்கள் சமூகத்துக்கு,

மதுரைத் தெற்கு ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் மூலமாக ........கிராமம்......... எழுதிக் கொண்ட லெட்டர்.

ஐயா,

எங்கள் கிராமத்தில் உள்ள பாடசாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமக் கவுன்சிலில் நான் ஒரு அங்கத்தினராக இருக்கச் சம்மதிக்கிறேன். புதுக் கல்வித் திட்டம் நல்ல முறையில் நடக்கவும் என்னால் ஆன உதவி புரிவேன்.

இதுதான் மகஜரின் சாரம். ஷை தாலுகா வலையன்குளம் என்ற கிராமத்திற்கும் சென்றிருந்தேன். அங்குள்ள பள்ளிக்கும் சென்றேன். பள்ளியில் சுமார் 7, 8 குழந்தைகள் இருந்தார்கள். அங்கும் மேலே கண்ட மாதிரி மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். அங்குள்ள ஆசிரியரை விசாரித்தேன். அவர் புதுக் கல்வித் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி என்ற பழமொழிபோல் ஒரு பக்கம் பெற்றோர்களிடமும், மறு பக்கம் மேலதிகாரிகளிடமும் நாங்கள் இடிபட வேண்டியதிருக்கிறது. "என்ன வாத்தியாரய்யா என் பையனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. நீங்கள் பாதி நேரம் வைத்திருந்துவிட்டு விரட்டிவிட்டு விடுகிறீர்கள். பாதி நேரம் ஊரைச் சுற்றுகிறான்" என்று பெற்றோர்கள் திட்டுகிறார்கள். மேலதிகாரிகளோ ஒரு ஷிப்டுக்கு 30 பிள்ளைகள் வீதம் புள்ளி விபரத்தோடு கணக்குக் கேட்கிறார்கள். நாங்கள் பிள்ளைகளின் பெற்றோர்களிடம் சென்று பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்புங்கள் என்று கேட்டால் "போய்யா முழு நேரம் படித்தே ஒன்றும் தெரியவில்லை. நீர் பாதி நேரம் படிக்க வைத்து விரட்டி விட்டுவிடுகிறீர்" என்று திட்டுகிறார்கள். இந்த லட்சணத்தில் நாங்கள் எப்படி மேற்கண்டவாறு புள்ளி விபரம் காட்டுவது என்று கவலைப்படுகிறார்கள். மேற்கண்டபடி புள்ளி விபரம் காட்டவில்லையென்றால் அவர்களுக்கு வேலை தொலைந்துவிடும். இத்திட்டத்தை இப்படியே விட்டு வைத்தால் தமிழ் நாட்டில் உள்ள லட்சக்கணக்கான குழந்தைகளின் கதியும், ஆசிரியர்கள் கதியும் என்ன ஆகும்?

**பி. நடராசன்,**

# " புதிய கல்வித் திட்டமும் அதன் பேயாட்டமும் "

கடைசியாக இப்பொழுது, 27–2–54-ல், சென்னை கல்வி இலாகா டைரக்டர் 'சர்க்குலர்' ஒன்று வந்திருக்கிறது. அதில் 1954-வது வருடம் ஜூன் மாதத்திலிருந்து ஒரு ஆசிரியருக்கு முப்பது பிள்ளைகள் இரண்டு நேரங்களிலும் (15+15) ஆஜர் இருக்க வேண்டுமென்றும், அப்படி இருந்தாற்றான் ஒரு ஆசிரியருக்கு மானியம் கொடுக்கப்படுமென்றும் கண்டிருக்கிறது. 1955 ஒரு ஆசிரியருக்கு நாற்பதும், 56–ல் ஐம்பதும் ஆஜர் இருக்க வேண்டுமாம். இந்தச் சுற்றறிக்கை வந்தவுடன் 1954 மார்ச் 1–ந் தேதியன்று நான், ஐந்து ஆசிரியர்கட்கு மூன்று மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானேன். 1955ம் வருடத்தில் இன்னுமிரண்டு ஆசியர்களையும், 1956-ல் மேலும் இரண்டு ஆசிரியர்களையும் விலக்க வேண்டியது நேரிடும்.'

நான் மானேஜராக இருக்கும் இந்து நாடார் இலவச உயதர ஆரம்பப் பாடசாலையில் பதினேழு ஆசிரியர்கள் வேலை பார்த்து வருகின்றனர். எங்கள் பள்ளிக்கூடத்தில் 413 பிள்ளைகளும், மிஷன் பள்ளியில் சுமார் 90 பிள்ளைகளும் படிக்கிறார்கள். கிராமத்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 2000, சேர்க்க வேண்டிய பிள்ளைகள் 34 தான் இருக்கின்றன. எவ்வளவு நிர்பந்தித்தாலும் வர இயலாத பிள்ளைகள் தான் அவர்கள்."

15—4—53-ல், முதல் 'சர்க்குலர்' வந்ததில், ஒவ்வொரு வகுப்பையும், இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டுமென்றும் ஒரு பிரிவு காலையிலும், மற்றொரு பிரிவு மாலையிலும், பாடசாலைக்கு வரவேண்டுமென்றும், பள்ளிக்கூடத்திற்கு வெளியே செல்லும் போது பெற்றோர் தொழிலைக் கற்க வேண்டுமென்றும், மற்றும் கிராமப் பொது வேலைகளாகிய ரோடு போடுதல், கிணறு வெட்டுதல், கட்டிடம் கட்டுதல் முதலிய வேலைகளில் பழக வேண்டுமென்றும் அறிக்கை வந்தது.

இப்பொழுது வேலையில் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எந்தப் பள்ளிக் கூடத்திலும் குறைக்கப்பட மாட்டாது என்றும் அறிக்கை வந்ததுடன் உறுதிமொழியும் அளிக்கப்பட்டது.

பின் எதிர்ப்பின் நிமித்தமாக பெற்றோர் தொழில் பழக வேண்டுமென்றும், ரோடு போடுதல், கிணறு வெட்டுதல் போன்ற அம்சங்களும் கைவிடப்பட்டு, இத்திட்டத்தினல் பள்ளியில் படிக்க இயலாமலிருக்கும் பிள்ளைகளில் பெருவாரியான குழந்தைகளைப் படிக்க வைக்க

உதவுமென்ற காரணம் சொல்லப் பட்டது.

இதுவும் நடைமுறையில் அனுபவ சாத்தியமற்றதாகவே இருக்கிறது. என் அனுபவத்தில் பார்த்த அளவில் எந்தக் கிராமத்திலுள்ள எந்தப் பள்ளிக்கூடத்திலும் படிக்க விரும்பிவரும் பையன்களை, இடமில்லாமல் சேர்க்க முடியாதென்று சொல்ல எந்தவொரு பள்ளிக்கூடத்தையும் நான் பார்த்ததில்லை; கேள்விப்பட்டதுமில்லை.

எங்கள் கிராமம், சுற்றிலும் ஒன்பது கிராமங்கள் கொண்ட ஒரு கூட்டத்திற்குத் தலைமையாகும். இக் குளத்தூரில் இந்து நாடார்கள் இலவச உயர்தர ஆரம்பப் பாடசாலை என்றும், டி. டி. டி. ஏ. மிஷன் ஆரம்பப் பாடசாலை யென்றும் இரண்டு பாடசாலைகளிருக்கின்றன. இன்னும் இதர இரு கிராமங்களில் மட்டும்தான் பாடசாலைகளிருக்கின்றன. மற்றும் ஆறு கிராமங்களில் பள்ளிக்கூடங்களில்லை

படியாத பிள்ளைகள் பெரும்பாலும் இப்படிப் பள்ளிகள் இல்லாத இடங்களிற்றான் இருக்கின்றனர். பள்ளிக்கூடங்களிருக்கும் கிராமங்களில் படியாமல் இருக்கும் குழந்தைகள் வெகுவாய் எளிய குடும்பத்தில் பிறந்து, உடுக்கத் துணி வாங்கவும் இயலாத குடும்பத்திலுள்ளவர்களாகவும், பெற்றோர் அன்றாடம் வெளியிற் போய் சம்பாத்தியம் செய்யவேண்டிய நிலையிலிருக்க, வீட்டிலிருக்கும் நான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கவனிக்க 4 – வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ள குடும்பத்திலுள்ள குழந்தைகளும், அல்லது ஏழ்மையின் நிமித்தமாகத் தன் குழந்தைக்கு ஆடுகள் வாங்கிக் கொடுத்து அதை வளர்த்து விற்றால் பத்து ரூபாயாவது ஆதாயம் கிடைக்காதா என்ற நிலையிலுள்ள ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளுமே படியாமலிருக்கின்றனர். எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் இதை நிதர்சனமாகப் பார்க்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில் இத்திட்டத்தினால் அதிகமானவர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் புள்ளி விபரம் முன் வருடங்களில் வகுப்புக்களில் படித்து வந்தவர்களின் கணக்கை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மையற்றதாக இருக்குமென்று உறுதியாக நம்புகிறேன்.

பொய்க் கணக்கு எழுதத் தூண்டப்படுகிறோம்; மனச் சாட்சி மறுக்கிறது.

தாங்கள், தயவுசெய்து, 40 விகிதாசாரம் கூடியிருக்கிறது என்று கூறப்படுகின்ற ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தை திடீரென அறிக்கையின்றிப் பார்வையிடுவீர்களானால், எந்தப் பள்ளிக்கூடத்திலும் விகிதாச்சாரம் கூடியிருக்

காது என்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

இத்திட்டம் ஏமாற்றமளிக்கும் திட்டம்; பிள்ளைகளை முட்டாள்களாகவே ஆக்கும் திட்டம். கிராமத்திலுள்ள எந்த மாணவனும் எதிர்காலத்தில் உயர்ந்த கல்விக்கு எக்காலத்திலும் போக முடியாதபடி தடை செய்யும் திட்டமென்று உறுதியாக நம்புகிறேன். நிற்க.

முன்பு மாணவர்களுக்குத் தேர்ச்சி வேண்டும்—ஒழுக்கம், உயர்வு வேண்டும் — என்று சொன்ன அதிகாரிகள் இன்று, வாய்மூலமாக தேர்ச்சி, சுத்தம், ஒழுக்கத்தைப் பற்றி அக்கறை வேண்டாமென்று சொல்லுகிறார்கள். இளம் பிள்ளைகள் தேர்ச்சியின்றி உதவாக்கரையாவதை கண்கூடாகவே காண்கின்றேன்.

உபாத்தியாயர்கள் இத்திட்டத்தை ஆதரித்துப் பேச வேண்டுமென்றும், எதிர்த்தால் சர்டிபிகேட் பறிமுதல் செய்யப் படுமென்றும் சொல்லுகிறார்கள்.

இத்திட்டத்தால் விலக்கப் படும் ஆசிரியர்களின் நிலைமை என்ன ஆகுமென்று பொது மக்கள் மனம் கலங்குகின்றார்கள்.

கிராமாந்திரங்களில் இத்திட்டத்தை ஆதரிப்பார் யாருமில்லை. பிராமணரல்லாதாரின் கல்வியறிவைப் பாழாக்க உருவெடுத்திருக்கும் இக்கொடிய ராட்சதப் பேயாட்டத் திட்டம் ஒழியாதாவென்று பொதுமக்கள் எல்லோரும் ஏகமனதாக ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இத்திட்டத்தினால் நன்மை ஏற்படுமென்று சொல்பவர்கள் தீமையையே உறுதியாகச் செய்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆகையால் பேயாட்ட வெறியுள்ள இந்தப் புதிய கல்வித் திட்டத்தை ஒழிக்கத் தங்களால் இயன்ற முயற்சி எடுத்து, தாங்களும். தங்கள் சகாக்களும் வெற்றி காண வேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக் கொள்கின்றேன்.

[திருநெல்வேலி ஜில்லா, கோவில் பட்டி தாலூகா, குளத்தூர் இந்து நாடார் இலவச உயர்தர ஆரம்பப் பாடசாலையின் மானேஜர் எழுதியது.]

# ஏமாற்றிக் கையெழுத்து வாங்கும் எத்தர்களின் சூழ்ச்சி!

## சென்னை மற்றோர் வங்கமாகா திருக்குமா?

—·—·—

மூக்குடைபட்டு முணு முணுத்து வந்தனர்! திருமங்கலத்தார் திடுக்கிட்டார்!

சென்னை மற்றோர் வங்கமாகா திருக்குமாக!

ஆசிரியர்களின் ஆணித்தரமான தீர்மானங்களும், ஆவேசமான சொற்பொழிவுகளும்!

ஏன் வந்து அகப்பட்டுக் கொண்டோம்? என்றஏக்கம்மந்திரிக்கும் கல்வி அதிகாரிகளுக்கும்!

பிள்ளைகளை மடையர்களாக்கும் பித்துக்கொள்ளித்திட்டம். ஆசிரியர்களின் வேலையை அதிகப்படுத்திஅவர்களைச்சோர்வில் தள்ளிவிடும் சோம்பேறித் திட்டம்.

எழுத்தறிவில்லாத பெற்றோர்களிடம் ஏமாற்றிக் கையெழுத்து வாங்கும் எத்தர்களின் சூழ்ச்சி.

பெரிய ஆதரவு இருப்பதாகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கும் கயவர்களின் முகமூடி கிழித்தெறியப்பட்டது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாய், உலக்கை தேய்ந்து உளிப்பிடியாகும் உதவாக்கரைத் திட்டம்.

இன்னும் ஓராண்டு வரை இந்தத் திட்டம் அமுலிலிருந்தால் ஆயிரம் ஆசிரியர்கள் வேலை இழப்பது திண்ணம்.

இருவேளை பள்ளிகளையே கிராமத்தவர் விரும்புகின்றனர். ஒருவேளை படிப்பால் கல்வித்தரம் குறைகிறது. மாணவர்கள் சோம்பேறித்தனமாய் அலைந்து கெடுகிறார்கள். மாணவர் எண்ணிக்கை நாளுக்கு நாள் தேய்கிறது.

மரங்களின் மறைவிலிருந்து வாலியைக் கொன்ற வீரமற்ற இராமன் கதையைப் போல், ஆசிரியர்களை 'எந்த நேரத்திலும் எந்தவிதக் காரணமும் காட்டாமல் வீட்டுக்கனுப்பலாம். அவர்களுக்களித் திருக்கும்நற்சாட்சிப் பத்திரங்களை நாசமாக்கலாம்.

இதுவா நீதி என ஏங்குகின்றனர் ஆசிரியர்கள். எங்கே நமக்கு உயர்வு என தேம்புகின்றனர் கல்வியின் காவலர்கள்.

பள்ளி விவரங்களைக் கேட்ட ராசாராமர் புகையென மறைந்து விட்டார்.

### வீரராகவரின் வீர உரை

செங்கற்பட்டு மாவட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் மாநாட்டில், ஆரம்பக் கல்வி ஆசிரியர் வீரராகவன் அவர்களின் ஆணித்தரமான கேள்வி?

'சர்க்காரின் புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக ஆசிரியர் களுக்குப் பெருத்த ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் இருப்பதா—இறப்பதா என்ற நிலைகூட வந்துள்ளது.

ஆசிரியர், அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்ற விதி இருக்கிறது. ஆனால் இந்தப் புதிய கல்வித் திட்டம் ஆசிரியர் களை அரசியலுக்கு வலிய இழுக்கிறதே. இந்தத் திட்டம் இல்லையென்றால், அரசியல் போராட்டம் கிராமங்களுக்கு வந்திருக்காதே' என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:—

அண்மையில் சென்னைக் கல்வி விதிகளுக்கு சர்க்கார் கொண்டு வந்துள்ள திருத்தம் ஆசிரியர் களின் அந்தஸ்தையும் தன்மானத்தையும் பாதிப்பதாக இருக்கிறது. எந்த கிரேடு ஆசிரியர்களையும் விசாரணையில்லாமலேயே, அவர்களுடைய சர்டிபிகேட்டு களை ரத்து செய்ய கல்வி அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்திருப்பது, புதிய கல்வித் திட்டத்தின் கீழ் வேலை செய்யாத ஆசிரியர்களை வெளியேற்றும் நோக்கத்தின் கீழ்தானோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது' என்ற விளக்கந்தந்தார்.

இந்த நியாயமான கேள்விகளுக்கு சர்க்கார் என்ன பதில் அளிக்கப் போகிறது என்பதை எதிர்காலந்தான் பதில் சொல்லும். அவ்வளவு பெருந்தன்மையும், நல்ல எண்ணமும் ஜனநாயகப் பண்பும் ஆச்சாரியார் சர்க்காருக்கு இருக்குமென்றோ, இது வரை இருந்ததாகவோ யாரும் நம்பமாட்டார்கள்.

அன்பர் ஆச்சாரியார் மூளை அலாதியானது. எல்லாரையும் எதிர்த்து வெற்றி பெற்றுவிட்டோம் என்ற இறுமாப்புக்கொள்வதில் அவருக்கு இணை அவரே தான். அத்தகு மண்டைக்கனம் படைத்தவரிடம் மாகாண சர்க்கார் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கின்றது. என்ன செய்யலாம் என ஏங்குகின்றனர் ஆசிரியர்கள். வேலை நிறுத்தம் செய்யத் தெரியாதவர்கள். புரட்சி வாடை அறியாதவர்கள். அரசியலைத் தீண்டத் தகாதவர்கள். சாத்மீகத்தின் நிழல்கள். கிடைத்ததைக்கொண்டு கிழிந்த கோட்டும், உடைந்த கண்ணாடியும் போட்டுக் கொண்டு வகுப்பை நடத்துபவர்கள். வேறு வேலை செய்தறியாதவர்கள். எதிர்த்துப் பேசத் தெரியாதவர்கள். ஏன், என்று கேட்க தைரியமில்லாதவர்கள். வாழ்க்கையின் வீழ்ச்சியை எண்ணி எண்ணி வதைபடும் தனி சமுதாயமாகவே தங்களை ஆக்கிக்கொண்டவர்கள். மற்றவர்கள் அல்லது மற்றக் கட்சிகளின் உதவியை நாடினால், எங்கே தமது வேலைக்கு மரண ஓலை வருமோ என்று குலை நடுங்கிச் சாகின்றவர்கள். போர்க் கொடி உயர்த்திப் பழக்கமில்லாதவர்கள் என்று இப்படி எல்லாம் வர்ணிக்கப்பட்டவர்கள். இன்று

எப்படி துணிந்து போராட்டம் நடத்துவார்களென்று சர்க்கார் மனப்பால் குடித்துக்கொண்டு அசட்டுத் தைரியத்தோடு இருக்கின்றது.

இது இந்த மாகாணத்தின் ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல. இந்தியா முழுதிலுமுள்ள ஆசிரியர்களுக்கும் இதே வர்ணனைகள் தான்.

ஆனால்:—

## வங்கத்தைப் பாரும்

அங்கே இதைப்போன்ற கல்வித் திட்டத்தை எதிர்த்துக்கூட அல்ல போராட்டம் நடப்பது. சம்பளம் போதவில்லை. வாழ்க்கைத்தரம் உயருகிறது. பண்டங்களின் விலையேற்றம் நாளுக்கு நாள் நஞ்சுபோல் ஏறுகிறது. குடும்பம் பெருகுகிறது. இதன் காரணமாக ஏற்பட்ட குறைகளை பன்முறை எடுத்துச் சொல்லியும் பணியாத பரிதாபத்துக்குரியராயின் போக்கைக் கவர்னருக்கு நேரடியாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்காகவே செல்கிறோம், என்றனர் ஆசிரியர்கள். எடுத்தடி வைக்காதீர்கள். மேலே செல்ல விடமாட்டோம், நில்லுங்கள் இங்கேயே என தடுத்தனர் போலீஸ்காரர்கள். இருந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டனர் ஆசிரியர்கள், நாட்கணக்காக. ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தைச் சரியென ஒப்புக்கொண்ட மாணவர்கள் அவ்வளவு பேரும், ஆசிரியர்களுக்கு வேண்டிய உணவு, தண்ணீர் போன்ற வசதிகளைச் செய்து கொண்டிருந்தனர்.

## ஆசிரியர்களுக்கு அரசியல் இல்லையா?

ஆசிரியர்கள் ஆண்டவனை எதிர்த்துப் போராடவில்லை. அரசியலை, அங்க ஈனமான முடவன் நடப்பதைப்போல் நடத்திக் கொண்டிருக்கும் சர்க்காரை எதிர்த்துத்தான் அங்கே போராட்டம்.

சட்டம் பேசிற்று அங்கே, சன்மார்க்கம் முன்வந்தது அங்கே—சண்டமாருதம் கிளம்பிற்று. ஏன், அவர்கள் தலைமேல் விழுந்த அடியைவிட, கும்பியின் மேல் விழுந்த அடி ஆறாத ரணமாயிற்று—தீராத நோயாயிற்று—தொல்லைகளைத் தாண்டிச் செல்ல வேண்டியவர்களானார்கள். அந்தத் தொல்லையின் நெடும் பயணம் எவ்வளவு தூரமானாலும் நடந்து தீரவேண்டியவர்களானார்கள். இடையே இடையே தடையுத்திரவுகளென்ற முள்வேலி, துப்பாக்கி சத்தங்கள் இடும் அதிர் வேட்டுகள். எனினும் மதியோம் என்றே நடந்தனர்.

## மனிதன்—மனிதனா?

மனிதர்களை மனிதர்களாக மாத்திரமல்ல, மதியுள்ள மனிதர்களாக்க, அதிலும் பகுத்தறிவுள்ள மனிதர்களாக்க வேண்டுமென்ற பெரும் பொறுப்பைத் தடை புயத்தில் தாங்கிக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் முதலில் தங்களை மனிதர்கள் என்று

மதிக்காத சர்க்காரின் முன் தங்களை மனிதர்களென்று காட்டிக் கொண்டுதான் என்ன பயன் என்று அவர்கள் உள்ளே இருந்த மிருகத்தை வெளியே அனுப்பி விட்டார்கள். இல்லை, இல்லை, சர்க்காரை நடத்துபவர்கள் வெளியே கொண்டுவந்து விட்டார்கள். அதுதான் உண்மை. இல்லை, பல ஆண்டுகளாக பலதிறப்பட்ட குணமுடைய துடுக்குத்தனம் நிரம்பிய பல மாணவர்களைப் பார்த்துப் பார்த்துப் பழகிவிட்ட பண்பட்ட அவர்கள் மனம் இந்தப் பாழான நிலையை அடையமுடியாது.

## ஒரு கணம் சிந்திப்போம்

மேலே சொன்ன உண்மைகளையும் எடுத்துக்காட்டையும் வைத்துக் கொண்டு ஒரு கணம் சிந்திப்போம். ஆசிரியர்களா, ஆத்திரமடைந்தார்கள்? இந்த ஆத்திரம் அவர்கள் வகுப்பு நடத்தும் போது ஏற்பட்டிருந்தால் மாணவர்கள் நிலை என்னாகும்? இதையும் பெற்றோரும் பெரும் புள்ளிகளும் யோசிக்க வேண்டும். அதிகாரப் போதையால் எதையும் செய்து விடலாம். எள்ளி நகையாடலாம், அது எளிதும்கூட. ஆனால் அதிகாரத்தில் புரட்சியும், பீடத்தில் பேதமும் ஏற்படும் போது நிலைஎன்னாகும் என்பதை யோசிக்க வேண்டும்.

மாகாணத்தை யாள்பவர்களுக்கு மந்திரிகள் என்ற பட்டம் இருப்பதற்காகவே ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிடலாம் என்ற தைரியம் பிறக்குமானால், மக்கள் வர்க்கத்திலே மக்களாக இருக்கிற ஒரு சில ஆசிரியர்கள் அடக்கமாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது அசட்டுத்தனமும் ஆகாத போக்குமாகும்.

வருங்கால இளைஞர்களை நாட்டின் நல்ல குடிகளாக்கவல்லதோர் வாய்ப்புப் பெற்றோர் வறுமையில் உழல்வதும், உரிமையற்று வாழ்வதும், பேச வாயிருந்தும் பேசாமடந்தைகளாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்துவதும், மீறி அவர்கள் வாய் ஏதாவது வெளியிட்டால், பிடி சாபம் என்று அவர்களுக்களித்திருக்கிற நற்சாட்சிப் பத்திரங்களைக் கிழித்தெறிவதும், வாழக் கற்றுக் கொடுக்கும் அவர்களை வாழமுடியாதவர்களாக்கி, வறுமை யெனும் கடலில் தள்ளி வதைப்பதும், இன்றைய சர்க்காரில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது. இந்த கண்மூடிப் போக்கை உடனே நிறுத்தியாக வேண்டும் என்ற தீவிரமான எண்ணத்தில் ஆசிரியர்களை அரசாங்கமே நெட்டித் தள்ளப் பார்க்கிறது.

மாகாணத்திலேயே பல தொழிலாளிகள் கிளர்ச்சி நடந்திருக்கின்றன. ஏன்? N. G. O.-க்கள் வேலை நிறுத்தம் நடந்திருக்கின்றன. போலீஸ்காரர்களும் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றார்கள். ஆனால் பரிதாபத்துக்குரிய பயந்த சுபாவ முடையவர்கள் என்று

பிறரால் பரிகசிக்கப்பட்ட ஆசிரியர்கள் என்றுமே வேலைநிறுத்தம் செய்ததில்லை. எப்படிச் செய்கின்றார்கள் பார்க்கலாம் என்ற நோக்கத்தோடு நிற்கிறதா சர்க்கார் என்பதும் நமக்குப் புரியவில்லை.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை 'அறிவே செத்துப்போ' என்று சொல்வதைப்போல் இருக்கிறது. 'உடனடிப் பிரச்சினை' உடனடிப் பிரச்சினை' என்று மூச்சுக்கு முப்பது தரம் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் இதையும் அவர்களுடைய உடனடிப் பிரச்சினையில் சேர்த்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். (தீச்சுடர்)

---

# எந்தெந்த நாட்டில் எவ்வளவு எவ்வளவு தங்கம் இருக்கிறது?

| நாடு | பவுன் மதிப்பு |
|---|---|
| அமெரிக்கா | £ 2,600,000,000 |
| இங்கிலாந்து | 540,000,000 |
| பிரான்ஸ் | 480,000,000 |
| ஹாலந்து | 200,000,000 |
| ஸ்வீட்ஜர்லாந்து | 135,000,000 |
| ஸ்பெயின் | 105,000,000 |
| பெல்ஜியம் | 100,000,000 |
| அர்ஜண்டைன் | 88,000,000 |
| ஸ்வீடன் | 56,000,000 |
| பிரிட்டிஷ் இந்தியா | 55,000,000 |
| ஜப்பான் | 54,000,000 |
| இத்தாலி | 42,000,000 |
| கானடா | 38,000,000 |
| தென்னாப்பிரிக்கா யூனியன் | 38,000,000 |
| ருமேனியா | 25,000,000 |
| நார்வே | 20,000,000 |
| ஜெக்கோஸ் லோவேகியா | 19,000,000 |
| ஜாவா | 16,000,000 |
| ப்ரேஜில் | 7,000,000 |
| ஜெர்மனி | 6,000,000 |

**OFFICE OF**
**THE DEPUTY INSPECTOR OF SCHOOLS,**
**GEORGE TOWN RANGE, MADRAS.**

**Circular No. 8/53** **Dated 10-10-53.**

---

*SUB:- Elementary School - Aided - Monthly Returns--Preparation of Instructions issued.*

It has been observed that the details in the monthly returns are at times incomplete, meagre or defective. Consequently the assessment is either with held or the monthly return is sent back for rectification. Being an important return this must give a true and full picture of the condition of the school during the month under report. Hence all the points are gathered and the following guidance given to the concerned.

2. The year and month must be properly entered at the top.

3. The full name and correct address of the school should be written.

4. The staff statement shall contain the following details. This is the MOST IMPORTANT statement and on this depends the assessment of grant. This shall, therefore, give all details about the age, qualifications, conditions of service and concessions availed of by the teachers during the period.

(a) Serial numbers should be given carefully and correctly. If a teacher leaves the school or goes on leave and another teacher takes his place a separate S. No. should NOT be given for the new teacher. But the S. No. of the teacher leaving the school or going on leave should be noted as "1 (a)" and the S. No. of the teacher taking his place noted as "1 (b)" and so on. If a teacher who leaves the school returns parti-

culars relating to him should not be shown separately as far as possible, but his subsequent period noted against the same S. No. given to him previously. For example a teacher "X" in service from 1–3–53 to 5–3–53 goes on leave for 15 days from 6–3–53 to 20–3–53 and a substitute "Y" is appointed, then the entries in the respective columns would be

1 (a) "X" ... ... ... 1–3–53 to 5–3–53.
and 20–3–53 to 31–3–53.
1 (b) "Y" ... ... ... 6–3–53 to 20–3–53

(b) The name of the teacher must be the same as written in the T. T. C. if the name is changed for any reason this must have been got changed with proper attention or notified in the Fort St. George Gazette and a copy of the notification filed with the T. T. C. Otherwise the new name assumed must not be shown in the records. Below the name of the teacher the date of joining the school (with Fore-noon or After-noon F. N. or A. N.) must be noted in brackets. This helps assessing the increments and also finding the seniority of the teacher in the school when there is need to disallow any grant for a junior.

(c) Standard handled must be noted. If the teacher handled different standards for different periods, the details must be noted. In the case of P V–I, whether he is a full time or part time instructor must be noted (as P. V. I. F. T. or P. V. I. P. T.)

(d) Service Register Number with the year of issue must be furnished for each teacher. If the T. S. R. is one issued by the D. E. O., of another district the name of the district must be noted below e. g.

"3742/50/Tanjore" or "$\frac{\text{3742/50}}{\text{Tanjore.}}$"

If number and year done are noted it will be presumed that the T. S. R. has been issued by the D.

E. O. of the district in which the teacher is serving. If there is no T. S. R, the fact "Applied on......... (date)" must be noted. If simply "Applied" is entered, the entry serves no purpose. *Hence the date must be noted.* If there was any delay in the application for T. S. R. Whether application for condonation was made or if orders issued, the number and date of the order of condonation shall be noted in the remarks column.

(e) In the column "AGE" the correct DATE OF BIRTH should be entered as this has to be noted in the teaching grant statement. This date must agree with the entry in the T. T. C, Relieving or Transfer certificate or General educational certificate.

(f) GENERAL EDUCATIONAL QUALIFICATION :- Correct details regarding general educational attainments have to be furnished. The highest examination passed, the number and year of obtaining the certificate must be entered. In the case of transfer or relieving certificate, the number and year should be given. In the remarks column the name of the institution may be noted in such cases. Regarding S. S. L. C. holders the number must be given and below it or in the remarks column the fact whether he is eligible for college course (E. C. C.) or for Madras Public Service Commission (E. M. S. C.) or for Secondary grade training (E. Se. Tg.) must be given. For example,

"S. S. L. C"
43562—J
E. C. C.

If it is E. S. L. C or VIII Standard, it should be stated whether a Deputy Inspector's certificate or VIII Standard, Public Examination Certificate (VIII Standard Or E. S. L. C./D. I. C. or Pub. Exam). These

details or quite necessary especially in the case of unqualified teachers.

(g) PROFESSIONAL QUALIFICATION:- Grade. number and year should be noted. It is enough if such abreviations as H. G., Sec. Grd., J. B. G. and S. B. G, are used. The year must not be left out in giving the grade and number e. g. H. G. 2753/52 If the teacher has no professional qualification the word "untrained" (untd) or "Trained but failed" (Trd-Fld) etc. may be written. And in the remarks column if any exemption was granted the number and date of the order must be quoted. If an application for exemption made, "Applied for E on......(date)" must be entered in the remarks.

If the certificate is one of an outside state, the number, and date of order of evaluation and the grade of evaluation given must also be furnished.

(h) The actual amount (excluding Dearness and other allowances) paid by the management must be furnished. The T. G. paid by the Department must NOT be entered here.

(i) The correct period with dates must be shown. If a teacher is on earned leave or maternity leave for the whole month, all other details will be fuinished and in this columns "On E. L." or "On Mat. Leave" shall be noted. If a teacher goes on leave or leaves the school in the course of the month, the exact period must be noted. If a teacher eithor joins or leaves the school the session of joining or leaving i. e. Forenoon (F.N.) or Afternoon (A.N.) must be entered.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

**எதிர்ப்பு முரசு**

ஆந்திர மாநில சட்டசபையின் மொத்த உறுப்பினர்கள் 140 பேர். இவர்களில் 100 பேர், மதுவிலக்குத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்களாம். மதுவிலக்குத் திட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்றும், அப்படிச் செய்தால்தான் ஆந்திர மாநில செல்வநிலை சீர்படுமென்றும், தோல்வியடைந்துவிட்ட மதுவிலக்குத் திட்டத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதால் நன்மை துளியுமில்லை என்றும் இவர்கள் முரசு கொட்டுகிறார்களாம்.

**காலம் போதாது!**

15 ஆண்டுகள் முடிவதற்குள், ஆங்கிலத்திற்கு மாறாக இந்தி மொழியை மத்திய அரசாங்கத்தின் மொழியாக ஏற்றுக்கொண்டாகவேண்டும் என்று அரசியல் திட்டத்தில் காணப்படுகிற விதியை வற்புறுத்தக்கூடாதென்றும், அப்படி வற்புறுத்தினால் தென்னிந்தியர்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு, வட இந்தியர்களுக்கே பெரு நன்மை உண்டாகுமென்றும், இந்தியப் பாராளு மன்றத்தில், மார்ச் 28-ம் நாளன்று, தென்னிந்திய காங்கிரஸ் உறுப்பினராகிய திருவாளர் வி. நாகப்ப செட்டியார் முழக்கமிட்டிருக்கிறார்.

**அவர்களும் படிக்கட்டும்!**

ஹிந்தி, ஆங்கிலம், தாய்மொழி ஆகிய மூன்று மொழிகளைப் படிக்கவேண்டிய கட்டாயத்தில் தென்னிந்தியர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட வட இந்தியர்களோ, ஹிந்தி—ஆங்கிலம்—ஆகிய இரு மொழிகளைத்தான் கற்கவேண்டியிருக்கிறது. இவ்வாறாக, தென்னிந்தியர்கள் மூன்று மொழிகளைப் படிக்க, வட இந்தியர்கள் இரண்டு மொழிகளை மட்டுமே படிக்கும்படி நிலைமை இருப்பது, தென்னிந்தியர்களுக்குப் பிரதிகூலம். வட இந்தியர்களுக்கு அனுகூலம். எனவே இந்த நிலையை மாற்றி, தென்னிந்தியர்கள் எப்படி வட இந்தியர்களின் மொழியாகிய ஹிந்தியைப் படிக்கவேண்டி இருக்கிறதோ அப்படியே வட இந்தியர்களும் தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கட்டாய பாடமாகக் கற்கும்படி செய்தாகவேண்டும். அப்போதுதான் வட இந்தியர்-தென் இந்தியர் இருவரின் நிலையும் சமமாக இருக்கும் என்று, பாராளுமன்றத்தில், மார்ச் திங்கள் இறுதியில், சென்னை மாநில முன்னாள் கல்வி அமைச்சர் தோழர் அவினாசிலிங்கனார் கருத்துரை புகன்றிருக்கிறார்.

**மிக மிக வருந்துகிறார்!**

"எதிர்காலக் குடிமக்களை உருவாக்கும் எழில் மிக்க பணியை ஆற்றிவரும் ஆசிரியர்களுக்கு, இந்தியாவில், போதுமான மதிப்பும் காட்டப்படுவதில்லை—தகுதியான ஊதியமும் தரப்படுவதில்லை என்பதைக் காண்கிறபோது நான் மிக மிக வருந்துகிறேன்'' என்று

குறிப்பிட்டிருக்கிறார் பம்பாய் கவர்னர் தோழர் பாஜ்பாய்—26-3-54 அன்று! பம்பாய் நகர நடுத்தரப் பள்ளிகளின் ஆசிரியர் கழக விழா ஒன்றில் சொற்பொழி வாற்றியபோதுதான், கவர்னர், இந்த மணிமொழியை அளித்திருக்கிறார். அரசியலாரின் செவிகளில் கவர்னரின் கருத்து விழுந்திருக்குமா? விழுந்தாலும் பலன் கிடைக்குமா?

## அபாயம்! ஜாக்கிரதை!

இந்தியாவில் உள்ள பலர், அர்த்தமற்ற, ஆவேசம் காரணமாக, ஆங்கில மொழியை நம் பள்ளிகளிலிருந்து அகற்றி விட வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்களல்லவா? இந்தத் துடிதுடிப்பு நம் நாட்டுக்கு எவ்வளவு கேடு பயப்பது என்பதையும் மேற்படி கவர்னர் தெள்ளத் தெளிய விளக்கியிருக்கிறார் ஆசிரியர்களின் அதே விழாவில். வெகுவேகமாக வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் துணையின்றி நம் நாடு முன்னேற முடியாது என்றும், அந்த விஞ்ஞானத்தின் உதவி, அதன் முழு அளவில் நமக்குக் கிடைத்தாக வேண்டுமானால் ஆங்கிலப் பயிற்சி மிகமிக இன்றியமையாதது என்றும், எனவே ஆங்கிலத்தை அகற்ற முயல்வது நாட்டிற்குக் கேட்டைத்தான் தரும் என்றும் விளக்கமாகப் பகர்ந்திருக்கிறார் கவர்னர் பாஜ்பாய். ஆங்கிலத்தை அகற்றுவது ஆபத்தைத் தரும்—ஜாக்கிரதை என்று கவர்னர் கூறியிருப்பதை நல்லறிவாளர்கள் எப்படி மறுக்கமுடியும்?

## அன்றும் இன்றும்!

சென்னை நகரத்தில் டிராம் சர்விஸ் எடுபடுவதற்கு முன்னால், மொத்தம் 261 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் இப்போது 301 பஸ்கள் ஓடுகின்றன. முன்பு, நாள் ஒன்றிற்கு, அரசியலாரின் சென்னை பஸ் சர்விஸ், 30500 ரூபாய் வருமானம் அளித்துவந்தது. இப்போது, வருமானம், 35000 ஆக உயர்ந்திருக்கிறது.

## அங்கே அப்படி! ஆனால் இங்கே?

அமெரிக்கா, டென்மார்க், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடுத்தரக் கல்வி எவ்வாறு புகட்டப் படுகிறது என்பதைக் கண்டறிவதற்காக இந்திய அரசியலாரால் நியமிக்கப்பட்ட நிலைமை அறியும் குழுவினர் அங்கெல்லாம் சென்று திரும்பிவிட்டனர். அந்தக் குழுவில் ஓர் உறுப்பினரும், சென்னைக் கிறித்தவ உயர் நிலைப்பள்ளியின் தலைமையாசிரியருமாகிய தோழர் குருவில்லா ஜேகப், செய்தித்தாள் நிருபர்களிடம் பேசுகையில், பிற நாடுகள் அனைத்திலும் ஆசிரியர்களின் ஊதியம் கண்ணியமான நிலையில் இருக்கிறது என்றும், பிறபலதொழில்களிலும் பதவிகளிலும் இருப்பவர்களுக்குத் தரப்படுவதற்கு ஏறத்தாழ ஈடான ஊதியம் ஆசிரியர்கட்குத் தரப்படுகிறது என்றும், இந்தியாவில் தரப்படுவதைப் போன்ற பரிதாபகரமான ஊதியம், ஆசிரி

யர்களுக்கு, உலகத்தில், வேறு எந்த நாட்டிலுமே தரப்படுவதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

## இவ்வளவு மனிதர்களா?

1953ம் ஆண்டில் மட்டும், இந்திய ரயில்களில், டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்ததாக, 71,19,797 பேர் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 2,51,847 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள்மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையினால் மட்டும், அரசாங்கத்திற்கு, 4,68,900 ரூபாய் கிடைத்திருக்கிறது. டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்யும் "பெரிய மனிதர்கள்", இந்தியாவில், ஆயிரமல்ல, பத்தாயிரமல்ல, 71லட்சம் என்பதை அறியும்போது வியப்பாக இருக்கிறதல்லவா? என்றாலும் விவரம் பொய்யல்ல. புள்ளி விவரங்களைத் தந்திருப்பவர், ரயில்வேத் துறையின் துணை அமைச்சர், ஓ. வி. அழகேசன்.

## கவனிக்க முன் வருமா?

சேலம் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், ஏராளமான இரும்புக்கனிகள் கிடைக்கக்கூடிய பகுதிகள் இருக்கின்றனவாம். சேலம் நகரத்திற்கு 5 மைல்கள் அருகில் உள்ள காஞ்சமலை என்னும் பகுதியில்மிக அதிகமாக இரும்புப் பிரதேசம் இருக்கின்றதாம். கொடுமலை, பெருமலை, சித்தேரிமலை, தீர்த்தமலைஆத்தூர் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு இரும்புச் செல்வம் மண்ணிற்குள் புதைந்து கிடக்கிறதாம். இவ்விடங்கள் அனைத்திலுமாகச் சேர்த்து 305 மில்லியன் டன் இரும்புக் கனி கிடைக்குமாம். இந்த இரும்புக் கனியில், நூற்றுக்கு நாற்பதுபங்கு இரும்பும், ஐம்பது பங்கு சிலிகாவும், 2½பங்கு அலுமினியமும், சிறிதளவு பாஸ்பரஸ், கந்தகம், டிடானியா ஆகியனவும் இருக்கின்றனவாம். இந்த இரும்புக் கனிகளைத் தோண்டியெடுத்துத் தூய்மைப்படுத்திப் பயன்படுத்தும் முயற்சியில் மட்டும் அரசாங்கம் ஈடுபடுமானால், தென்னிந்தியாவின் பொருளாதாரநிலை உயர்வுபெறுவது உறுதி. தகவல் தந்திருப்பது, அனைத்திந்திய நிலப்பொருள் ஆராய்ச்சிக் குழு ஆகும். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும். செலுத்துமா?

# தீமைகள் மிகுந்தது! வாழ்க்கையை வதைப்பது!

---

## நாட்டின் எதிர் காலத்தை நலிவுறச் செய்வது!

### ஆச்சாரியார் திட்டத்தின் அலங்கோல அமைப்பு!

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் எத்தகைய தன்மை வாய்ந்தது? சிறப்பு மிகுந்ததா அல்லது சீர்கள் அற்றதா? நன்மை நிறைந்ததா அல்லது நலிவுகள் செறிந்ததா? நாட்டிற்குத் தேவையானதா? அல்லது கேட்டினைத் தருவதா? சமுதாயத்தின் செழிப்புக்கும் உயர்வுக்கும் இப்படியொரு திட்டம் இருப்பதுதான் நல்லதா அல்லது இல்லாமல் ஒழிவது நல்லதா? சென்ற ஓராண்டுக் காலமாக இப்படிப்பட்ட கேள்விகள்தான் மக்கள் மன்றத்தில் அலைமோதிக் கொண்டிருக்கின்றன. இத்தகு கேள்விகளுக்கு அன்பர் ஆச்சாரியாரும் அவருடைய சீடகோடிகளும் தரும் விடை ஒருவகை. அறிஞர் பெருமக்களும் ஆசிரியர் உலகமும் தரும் விடை வேறு வகை. உண்மை விடை எது? ஆச்சாரியார் கூறுவதா? அல்லது ஆசிரியர்கள் இயம்புவதா? மக்களின் பிரதிநிதிகளாகிய எம். எல். ஏக்கள், சென்னைசட்டசபையில், இந்தப்பிரச்சினை குறித்துமார்ச்26ம்நாளன்று தங்கள் கருத்துரையை அளித்திருக்கிறார்கள். யாது பேசினார்கள் எ.ம். எல். ஏக்கள்? புதிய திட்டத்தை வரவேற்றா? பாராட்டியா? ஆதரித்தா? போற்றிப் புகழ்ந்து பல்லாண்டு பாடியா? அல்லது திட்டத்தைக் கண்டித்து, அதன் தவறுகளை எடுத்துக் காட்டியா? எப்படிப் பேசினார்கள் மக்கட் பிரதிநிதிகள்? தெரிய வேண்டாமா நமக்கு? எனவேதான் எம். எல். ஏக்களின் சட்ட சபைப் பேச்சுக்களை ஒன்று திரட்டி இங்கே அளித்திருக்கிறோம். படித்துப் பார்த்துவிட்டு, பிறகு கூறுங்கள், இப்படிப்பட்ட ஒரு திட்டம் இனியும் உலவலாமா நாட்டிலே?

### எம். எல். ஏக்களின் கருத்துரைகள்:

"பிற்பட்ட வகுப்புகளின் கல்வி நிலையை விரைவில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டியது அரசாங்கங்களின் கடமை என்று அரசியல் திட்டத்தின் 46–வது விதி தெரிவிக்கிறது. ஆனால் ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தப் புதிய கல்வித் திட்டமோ, பிற்பட்ட வகுப்புகள் ஏற்கெனவே பெற்று வந்த அளவு கல்வியைக்கூட இனிபெறமுடியாதபடி செய்து விடுகிறது. பாருலேகர் கமிட்டி இந்தத் திட்டத்தை ஆதரித்து விட்டது என்று கூறுவதாலேயே, இந்தத் திட்டம் சரியானது என்று ஏற்பட்டுவிடாது. ஏனெ

ளில் பாருலேகர் கமிட்டியை அமைத்த முறையே சிறிதும் ஒழுங் கில்லாதது. முறையில்லா முறையில் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியின் தீர்ப்பை நியாயமானது என்று நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? புதிய திட்டத்தால், நாட்டில் குழப்பமும் தீய விளைவுகளுமே ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை உட னடியாகக் கைவிடுவதுதான் நியாயம். இல்லையானால், இந்தத் திட் டத்தின் விளைவாக, நாட்டிலே, பலவகையான கிளர்ச்சிகளும் அமை தியின்மையும் ஏற்பட்டே தீரும்"

—வி. ஆர். நாகராசன் எம். எல். ஏ.

"இந்தத் திட்டத்தின் விளைவாக நூற்றுக்கணக்கான ஆசிரியர் கள் தங்கள் வேலையை இழப்பது உறுதி. கல்வியின் தரமும், இந் தத் திட்டத்தின் காரணமாகக் குறைந்துவிடுவது நிச்சயம். திட்டம் கைவிடப்பட வேண்டும்."

—டி. சி. நாராயண நம்பியார் எம்; எல்.ஏ.

"இந்தத் திட்டம் மிகவும் பிற்போக்கானது. நாட்டிற்குத் தேவையில்லாதது. ஆசிரியர்களின் தொழிலுக்கே ஆபத்தைத் தரு வது. மூன்று மணி நேரம் மட்டுமே பாடங்கள். புகட்டப்பட்டாமல் குழந்தைகளால் கல்வியை எப்படிக் கற்றுக்கொள்ள முடியும் என் பதே எனக்குப் புரியவில்லை. மிச்சம் மூன்று மணிநேரமும் குழந்தை கள், அலைந்து திரிந்து வீணுகக் கெட்டொழிவது நிச்சயம். பள் ளிக்கூடத்தில் இருக்கும் அரைநாள் போக மிச்சமிருக்கும் அரை நாளில், குழந்தைகள், யாருடைய கண்காணிப்பிலும் இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், திட்டம் எவ்வளவு ஆபத்தானது என்பது எளிதில் புரிந்துவிடும். புதிய திட்டத்தின் காரணமாக ஆசிரியர்கள் எவரும் வேலையைவிட்டு விலக் கப்படமாட்டார்கள் என்று கல்வி அமைச்சர் பலமுறை கூறியிருக் கிறார் என்றாலும், பற்பல பள்ளிகளிலும் ஆசிரியர்கள், வேலையினின் றும் விரட்டப்பட்டுவருவது நாடறிந்த உண்மை."

—டி. கிருஷ்ண மூர்த்தி எம். எல். ஏ.

"புதிய திட்டத்தின் காரணமாகப் பல பிள்ளைகள் பள்ளிக் கூடத்திற்கு வருவதே கிடையாது. அப்படியிருந்தும், அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்ததாகப் பொய்க் கணக்கு எழுதப்பட்டுவரு கிறது. பள்ளியிற் பயிலாத அரைநாளில், தாங்கள் ஏதேதோ தொழில் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டதாகத் தங்

ருடைய நாட்குறிப்பில், பொய்யாக எழுதி வைக்கும்படி மாணவர்களும் தூண்டப்படுகிறார்கள். முறையா?"

—கே. அரங்கநாதன் எம். எல். ஏ.

"ஏனைய ஜாதிப் பிள்ளைகள் படித்து முன்னுக்கு வருகிற அளவுக்கு ஆதித் திராவிடப் பிள்ளைகள் வரமுடியாதபடி, செய்துவிடுகிறது இந்தத் திட்டம். இத்தகு திட்டத்தால் கிராமவாசிகளுக்குத் துளியளவும் நன்மை கிடையாது."

—கே. தசரதன் எம். எல். ஏ.

"வெறும் போலிக் கவுரவத்தை எண்ணிக்கொண்டு புதிய திட்டத்தைக் கைவிடாமல் இருப்பது சிறிதும் அறம் ஆகாது. ஆச்சாரியார், தன் திட்டத்தை, நாட்டின் நன்மையை முன்னிட்டு, உடனே வாபீஸ் வாங்குவதுதான் அறிவுடைமை."

—உ. முத்துராமலிங்கத் தேவர் எம். எல். ஏ.

"தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகிற தொடக்கப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தால் தரப்படுகிற உதவித் தொகை, சென்ற ஆண்டில் 3,45,00,000 ரூபாயாக இருந்தது, இந்த ஆண்டில் 3,41,00,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படுகிற தொடக்கப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்படுகிற தொகையும், 1,35,00,000 ரூபாயிலிருந்து 1,11,00,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுவிட்டது. ஆகமொத்தம் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில், தொடக்கப் பள்ளிகளுக்கான உதவித் தொகை, 26 லட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது. ஆசிரியர்கள் பலர் வேலையை இழக்காவிட்டால், இந்தக் குறைவு எப்படிச் சாத்தியமாகும்? எனவே, இந்தக் குறை நிறை செய்யப்படாத வரையில், புதிய திட்டம் காரணமாக ஆசிரியர்கள் வேலையை இழக்கமாட்டார்கள் என்று அமைச்சர் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது."

—பி. இராமமூர்த்தி எம். எல். ஏ.

# சுழலும் உலகம்

## இரண்டு குண்டுகள்—
## இணையற்ற ஆபத்து!

விஞ்ஞானப் பேரறிஞர் ஐன்ஸ்டினை, ஒருமுறை, செய்தித்தாள் நிருபர் ஒருவர் பேட்டி கண்டார்.

நிருபர் கேட்டார்: பேரறிஞர் அவர்களே! மூன்றாவது உலகப் பெரும் போர் மூளுமானால், அந்தப் போரில் என்னென்ன புதிய கருவிகள் பயன் படுத்தப் படும் என்பதைத் தாங்கள் இப்போது கூறமுடியுமா?

அறிஞர் இயம்பினார்: முடியாது. ஆனால் நான்காவது உலகப் பெரும் போர் மூண்டால், அதில் என்னென்ன கருவிகள் பயன்படுத்தப்படும் என்பதை என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

நிருபர்: மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே? என்னென்ன கருவிகள் பயன்படுத்தப்படும்?

ஐன்ஸ்டின்: இது தெரியாதா? வில்லும் அம்பும்!

நிருபர்: வில்லும் அம்புமா?

ஐன்ஸ்டின்: ஆமாம். ஏனென்று கேட்கிறீரா? மூன்றாவது உலக யுத்தம் மூளுமானால், அதில், இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற அணுக் குண்டு முதலான எல்லாவகை அழிவுக் கருவிகளும் பயன்படுத்தப்படும். இவற்றின் அழிவுச் சக்தி அளவிட்டு உரைக்க முடியாதது; உலக நாகரிகத்தையே ஒழித்துக் கட்டவல்லது. இந்த மகத்தான அழிவுக் கருவிகளின் நாச நாட்டியத்தின் காரணமாக நகரங்கள் அழியும்; கோடிக் கணக்கில் மக்கள் மாள்வர்; அரசாங்கம் என்பதே இல்லாது போய்விடும்; நாகரிக அமைப்புகள் அத்தனையும் தொலையும்; மனிதன் பழையபடி காட்டுமிராண்டி ஆகிவிடுவான். அந்நிலையில் அவனிடம் வில்லும் அம்பும் வேலும் வாளுந்தானே இருக்கமுடியும்? அந்த நிலையிலும் ஒரு போர் மூளுமானால் அவன் அந்தக் காட்டுமிராண்டிக் காலக் கருவிகளைத்தானே பயன்படுத்த முடியும்?

அறிஞர் ஐன்ஸ்டின் இயம்பிய இந்த அருமையான விடையைக் கேட்ட பிறகு செய்தித்தாள் நிருபரால் மறுப்பென்ன கூற முடியும். வாய் பேசாமல் திரும்பினாராம் நிருபர்.

விஞ்ஞான வல்லுநர் ஐன்ஸ்டினின் வாழ்க்கை வரலாற்றிலே வருகிற இந்த நிகழ்ச்சிதான் நம் நினைவுக்கு வந்தது சென்ற மா

தத்தில் பசிபிக் கடலில் வெடிக்கப்பட்ட இரண்டு ஐட்ரஜன் குண்டுகளைப் பற்றிய செய்தியை அறிந்ததும்.

இதுவரையில் அழிவுச் சக்தியின் கடைசி வாக்கியம் அணுக்குண்டு என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்போதோ, அதைவிடப் பேராற்றல் வாய்ந்த குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.பெயர்: ஐட்ரஜன் குண்டு.

அண்மையில் நடைபெற்ற உலகப் பெரும் போரின் இறுதிக் கட்டத்தில், ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஷிமா, நாகசாகி என்னும் இரண்டு நகரங்களின் மீது இரண்டு அணுக்குண்டுகள் வீசப்பட்டன அல்லவா? அந்த அணுக்குண்டு ஒவ்வொன்றாலும் அந்த நகரங்கள் ஒவ்வொன்றும் தரைமட்டமாகிவிட்டன. நகர மக்கள் யாவரும் செத்துச் சாம்பலாகி விட்டனர். ஒவ்வொரு குண்டாலும் ஏறத்தாழ 50,000 பேர் மாண்டு போயினர்.

1945-ம் ஆண்டில் வீசப்பட்ட அணுக்குண்டுகளின் ஆற்றல் இது. ஆனால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற ஐட்ரஜன் குண்டுகளோ அந்த அணுக்குண்டுகளைவிட 600 மடங்கு அதிக ஆற்றல் வாய்ந்தனவாம். ஒரே ஒரு ஐட்ரஜன் குண்டை வீசினால் போதுமாம். உலகத்திலுள்ள எந்த ஒரு பெரிய நகரத்தையும் ஒரே விநாடியில் தவிடு பொடியாக்கிவிட முடியுமாம். நகரம் முழுவதும் தூள் தூளாகும்; மக்களெல்லாம் சுக்கு நூறுவர்; கட்டிடங்கள் சாய்பலாகும் என்பது மட்டுமல்ல உண்மை. அந்தக் குண்டின் விளைவாக அந்த வட்டாரத்தில் பரப்பப்படுகிற நச்சுக்காற்றும் மிகக் கொடிய ரேடியோ அலைச் சக்திகளும் எத்தனையோ ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்குமாம். அந்த வட்டாரத்தில் அதற்குப் பிறகு இருபது ஆண்டுகளுக்கோ ஐம்பது ஆண்டுகளுக்கோ மக்கள் வாழவே முடியாதாம் — வாழ்வதா—நெருங்கவே இயலாதாம்.

ஐட்ரஜன் குண்டு பற்றிய விவரங்களைக் கேட்கவே பயமாக இருக்கிறது. உண்மையிலேயே அந்தக் குண்டு வெடிக்கப்படுகிற இடத்தில் வாழ்கிற மக்கள் நிலை என்ன ஆகும்–நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது.

இப்படிப்பட்ட பயங்கரத் தன்மை வாய்ந்த ஐட்ரஜன் குண்டு ஒன்றை மார்ச் திங்கள் முதல் வாரத்திலும், மற்றொரு குண்டை மார்ச் மாத இறுதியிலுமாக, அமெரிக்க அரசாங்கம் பரிசோதனைக்காக வெடித்துப் பார்த்திருக்கிறது.

பரிசோதனை, பசிபிக் கடலில் உள்ள பிகினி என்னும் தீவுக்கருகில் நடத்தப்பட்டது.

முதல் குண்டு வெடிக்கப்படுவதற்கு முன்னால், அந்தத் தீவுக்கு இருநூறு மைல் சுற்றளவுக்கு, கடலில், கப்பல்களோ படகுக

ளோ மனித சஞ்சாரமோ இல்லாத படி செய்யப்பட்டனவாம். ஆனால் எப்படியோ ஒரு ஜப்பானியப் படகு இந்த முன் அறிவிப்பை, அறியாமல், குண்டு வெடிக்கப்படுகிற நேரத்தில், அது .வெடித்த இடத்திலிருந்து எழுபது மைல் தொலைவில் உலவிக் கொண்டிருந்ததாம்.

அண்மையில் அல்ல — எழுபது மைல்களுக்கு அப்பால் உலவியிருக்கிறது ஜப்பான் படகு. என்றாலும் ஹ்டிரஜன் குண்டு அதனை விட்டுவைக்கவில்லை. குண்டு வெடிக்கப்பட்டதால் கிளம்பிய ஒருவகை ரேடியோ அலைகள் நாலா திசைகளிலும் பரவி, படகின்மீதும் படிந்து, அதன்மீது ஒருவித வெள்ளைச் சாம்பலைப் பூசிவிட்டதாம். படகிலிருந்த மீன்கள் மீதெல்லாம் கூட சாம்பல் பூசப்பட்டுவிட்டதாம். படகில் இருந்த எல்லோருக்கும் படுகாயம்.

ரேடியோ அலைகளால் தாக்கப்பட்ட அந்த மீன்களுக்கு அருகே ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் தொடர்ச்சியாக நின்று கொண்டிருந்தால்,அப்படி நிற்பவர்க்கு மரணம் நிச்சயமாம். கடைகளில் விற்கப்படுகிற மீன்களில், ரேடியோ அலைகளால் தாக்கப்பட்ட இந்த மீன்களும் எங்கே கலந்து கிடக்கின்றனவோ என்றெண்ணி, ஜப்பான் மக்கள் பத்து நாட்களுக்குமேல் மீன் கடைகளுக்கு அருகே போகவே இல்லையாம்; ஜப்பான் முழுவதிலேயும் அச்சம் பரவிக் கிடந்ததாம் பத்து நாட்கள்.

ஜப்பானில் மட்டுமல்ல, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, கனடா, பர்மா, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனீசியா, எல்லா நாடுகளிலும்தான் ஐட்ரஜன் குண்டு பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டது முதல் அச்சம் பரவியிருக்கிறது.

அமெரிக்கா, ரஷ்யா, ஆகிய இரண்டு நாடுகளிடம்தான் ஐட்ரஜன் குண்டுகள் இருக்கின்றனவாம். அந்த இரு நாடுகளும் இந்தக் குண்டுகள் உற்பத்தி செய்வதைஉடனடியாக அழித்து விடவேண்டுமென்றும், ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட குண்டுகளையும் ஒழித்து விட வேண்டுமென்றும் உலக மெங்கும் குரல் எழும்பியுள்ளது.

நியாயம்தானே உலகம் கேட்பது! மனித நாகரிகத்தை மனிதனேவா அழித்துக் கொள்வது? உலகிலே பெரும் பகுதி மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் பட்டினியாலும் தவிக்க, அவர்களின் வேதனையைத் தீர்ப்பதில் செலவிடப்பட வேண்டிய கோடிக் கணக்கான பணம் இப்படிப்பட்ட அழிவு வேலைகளுக்கா அவசர அவசரமாகப் பயன்படுத்தப்படுவது?

உலகம் கேட்கிறது இவ்வண்ணம். ஆனால் வல்லரசுகளின் செவிகளில் விழுமா இந்த அறிவுக்குரல்?

## மாபெருந் தோல்வி—
## மகத்தான பாடம்

உலகம் முழுவதும் ஐட்ரஜன் குண்டைப்பற்றிய அச்ச அலைக ளில் நீந்திக்கொண்டிருந்த அதே நேரத்தில் பாகிஸ்தான் நாட்டு ஆட்சித் தலைவர்களுக்கு மற் றொரு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கி றது.

எந்த முஸ்லிம் லீக் கட்சியின் ஓயாத கிளர்ச்சியால் பாகிஸ்தான் நாடு உருவாக முடிந்ததோ, எந்த முஸ்லிம் லீக்கைக் கட்டிக் காப்ப தற்காக ஆற்றல் மிக்க அருந்தலை வர் ஜின்னு பெரும்பாடுபட்டா ரோ, எந்த முஸ்லீம் லீக்கை இந்தியத் துணைக் கண்டத்து இஸ்லாமியர் அத்தனைப் பேரும் தங்களுடைய இதய கீதம் இலட்சிய விளக்கு என்றெல் லாம் ஏற்றிப் போற்றிப் பாராட் டிமகிழ்ந்தார்களோ, எந்த முஸ் லிம் லீக்கின் இணையற்ற தலைவர் களாக பாகிஸ்தான் நாட்டு ஆட் சியாளர்கள் அனைவரும் இருந்து வருகிறார்களோ, அந்த லீக், மார்ச் மாதத்தில் கிழக்கு பாகிஸ் தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மிகப்பெரிய தோல்வி யைத் தழுவியிருக்கிறது. சென்ற ஏழு ஆண்டுகளாக நாட் டை ஆண்டு வந்த முஸ்லீம் லீக் குக்குக் கிடைத்த வெற்றிகள் ஒன்பதுதான். ஆனால் எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணிக் குக் கிடைத்திருக்கிற தொகுதி களோ 215. நாடாண்ட கட்சி— நாட்டை உருவாக்கியகட்சி—பழம் பெருங்கட்சி—மாபெருந் தலைவர் களைக் கொண்டதோர்கட்சியின் என்றாலும் அதற்குக் கிடைத்த வெற்றிகள் ஒன்பதுதான். புத் தம் புதிய கட்சி, கூட்டு முன் னணி. என்றாலும் அதனால் பெறமுடிந்தது 215 இடங்கள்.

என்ன காரணம் இதற்கு? பலர் பலவகைக் காரணங்களைக் கூறுகின்றனர். ஆனால் இந்தப் படுதோல்விக்குரிய மிகவும் முக்கி யமான காரணம், முழுப் பாகிஸ் தானையும் ஆளும் முஸ்லிம் லீக் தலைவர்கள் கிழக்குப் பாகிஸ் தான் மக்களின் தாய்மொழியை அலட்சியம் செய்ததுதான்.

பாகிஸ்தான் நாட்டு மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 56 பேர் கிழக்கு பாகிஸ்தான் எனப் படும் கிழக்கு வங்காளத்தில் வாழ்கின்றனர். இவர்கள் அத் தனை பேருக்கும் தாய்மொழி வங்காளம்தான். இதுபோலவே மொத்த ஜனத்தொகையில் நூற் றுக்கு 44 பேர் வாழும் மேற்கு பாகிஸ்தானில் மிகப் பலரின் தாய்மொழி உருது. ஜனத்தொ கையில் கிட்டத்தட்ட பாதிப் பேர் வங்காளத்தையும் மற்றொரு பாதி உருதுவினையும் தாய்மொழி யாகக் கொண்டுள்ள காரணத் தால், இரண்டு மொழிகளையுமே பாகிஸ்தான் நாட்டின் தேசிய மொழிகளாகவும் அரசாங்க மொ ழிகளாகவும் ஆக்குவதுதான்நியா யம். ஆனால் முழுப் பாகிஸ்தானை ஆண்டுவரும் முஸ்லிம் லீக்தலை வர்களோ இந்த நியாயமான கோரிக்கையை ஏற்க மறுத்து,

உருது ஒன்றை மட்டுமே தேசீய மொழியாக ஆக்கினர். வங்காள மொழியை ஒதுக்கித் தள்ளினர்.

எனவேதான் சிங்கமெனச் சீறியெழுந்தது வங்கம். எங்கள் மொழி தங்கம். அதற்கு ஏன் இந்தப் பங்கம் என்று கொதித் தெழுந்து கேட்டது. முஸ்லிம் லீக் தலைவர்கள்தானே வங்க மொழியை அலட்சியப்படுத்தினர்—புகட்டுவோம் பாடம் அவர்களுக்கு என்று குமுறியெழுந்து முழக்கமிட்டனர்வீரவங்காளிகள் அந்த இடியோசையின் விளைவு தான் லீக் அடைந்துள்ள பரிதாபத்தோல்வி.

மக்கட் சமுதாயம் ஒன்றின் மீது அதனால் விரும்பப்படாத மொழி ஒன்றை வலுக்கட்டாயமாகத் திணித்தால் அப்படித் திணிப்பவர்கட்கு யாதுகதிநேரிடும் என்பதைத்தான் கிழக்குப் பாகிஸ்தானின் தேர்தல் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. இந்தத் தேர்தல் முடிவு வெளியானதும், இந்தியாவின் முதல்வர் பண்டித நேரு, வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் பலரையும் தன் இருப்பிடத்திற்கு அழைத்தாராம். அழைத்து இயம்பினராம், பாரீர் கிழக்கு வங்காளத்தை, அறிவீர் அது தரும் பாடத்தை என்று! வடநாட்டு ஹிந்தியைத் தென்னாட்டு மக்கள்மீது திணிப்பதில் மிகுந்த அவசரம் காட்டுகிறீர்களே, இப்படிப்பட்ட செய்கைகளால் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும் என்பதை இப்பொழுதாவது தெரிந்துகொள்ளுங்கள் என்று, பண்டிதநேரு, வடஇந்தியத் தலைவர்களுக்கு அறிவுரை பகர்ந்தனராம். மிகமிக அவசியமான அறிவுரை அது. தென்னாட்டு மக்கள்மீது இந்தி மொழியைச் சுமத்துவதில் வடநாட்டுத் தலைவர்கள் பலர் காட்டுகிறவெறியுணர்ச்சியையும்ஆவேச ஆர்வத்தையும் காண்கிறபோது, தென்னாட்டு மக்களுக்கு ஆத்திரமும் கோபமும் திரண்டெழுவது இயல்புதானே! இந்தியாவிலேயும் ஒரு கிழக்கு பாகிஸ்தான் ஏற்படாமல் இருக்க வேண்டுமல்லவா? எனவேதான் நேரு எச்சரிக்கை செய்திருக்கிறூர் வடஇந்தியத் தலைவர்களுக்கு. ஆனால் அந்த எச்சரிக்கையை ஏற்று அதன்படிநடக்கும்பெருங்குணம் ஏற்படுமா வட இந்தியத் தலைவர்களுக்கு? பொறுத்திருந்து பார்ப்போம்!

## கட்டுங்கள் மூட்டையை! காலதாமதம் வேண்டாம்!

ஆம்! இப்படித்தான் முழக்கமிடத் தொடங்கிவிட்டனர் பிரஞ்சிந்திய மக்கள். அவர்கள் பகுதியைவிட்டு இன்னமும் அகலமறுக்கிற பிரஞ்சு ஏகாதிபத்யத்தைப் பார்த்துதான் இதுபோல உரிமை முழக்கம் எழுப்புகின்றனர் அந்த இலட்சிய வீரர்கள்.

ஞாயிறு மறையாத சாம்ராஜ்யம் எங்களுடையது என்று வீரம் பேசிவந்த பிரிட்டிஷ் வல்லரசே இந்தியாவை இனி நம்மால் அடக்கி ஆளமுடியாது என்று

எண்ணி வெளியேறிவிட்டபிறகு, சின்னஞ் சிறிய அரசாகிய பிரான்ஸ், இந்தியாவில் உள்ள பாண்டிச்சேரி—காரைக்கால் — மாஹி— ஏனம் ஆகிய நான்கு ஊர்களை மட்டும் தன் ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொண்டு, தொடர்ந்து இந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்த எண்ணுவது வெறும்பேதமை அல்லவா? இரண்டாயிரம் மைல் நீளமும் ஆயிரத்தைந்நூறு மைல் அகலமும் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு முழு விடுதலை அளித்து வெளியேறிவிட்டது பிரிட்டன் என்பதைக் கண்டபிறகும், பிரான்ஸ், நான்கே நான்கு ஊர்களை வெறும் பிடிவாதத்திற்காகத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டிருப்பதை அந்தப் பகுதிகளில் வாழும் நம் மக்கள் எப்படி சகித்துக் கொண்டிருப்பார்கள்? ஆகவேதான் சென்ற ஒரு மாத காலமாக, பிரஞ்சு ஏகாதிபத்யமே வெளியேறு என்கிற இடியோசை, பிரஞ்சிந்தியா. என்று கூறப்படுகிற நான்கு ஊர்களிலும் வல்லோசையென எழும்பிவிட்டது. இதுவரையில் பிரஞ்சு ஏகாதிபத்யத்தை ஆதரித்துவந்த பிரஞ்சிந்திய அரசியல் கட்சிகள்கூட இப்போது விடுதலைக்கீதத்தைப் பாடத் தொடங்கிவிட்டன.

கட்சி வேறுபாடு—கொள்கை வேறுபாடு-இன மத சாதிவேறுபாடு எந்த வேறுபாட்டையும் கருதாமல் பிரஞ்சிந்திய மக்கள் அத்தனைப் பேரும் ஒரேகுரலில் உரிமை முழக்கம் எழுப்பத் தொடங்கிவிட்டனர். பிரஞ்சிந்தியப் பகுதியில் உள்ள எல்லா நகரசபைகளிலும், ஏகாதிபத்யம் வெளியேறத்தான் வேண்டும் என்கிற தீர்மானம், ஏகமனதாக நிறைவேறிவிட்டது. அதுபோலவே பிரஞ்சிந்திய மந்திரிகள் அனைவரும் விடுதலை அணிவகுப்பில் திரண்டு நிற்கின்றனர். காலமாறுதலை அறிந்து தானாகவே வெளியேறி இருக்கவேண்டிய பிரான்ஸ், குமுறலும்கொந்தளிப்பும் மூண்டெழுந்தபிறகும்வெளியேற மறுப்பது அறிவுடைமையும் ஆகாது. பிரான்சின் வரலாற்றுக்கு நற்பெயர் நல்கிடும் சம்பவமும் அல்ல. போற்றலும்பெரும் புகழும் படைத்த பிரிட்டிஷ் வல்லரசே வெளியேறிவிட்ட பிறகு சின்னஞ்சிறிய அரசாகிய பிரான்ஸ் பிடிவாதம் பிடிப்பதிலே விவேகமா இருக்கமுடியும்? உடனே வெளியேறுவதுதான் முறை.

# காமராஜர் முதல் அமைச்சரானார்!

## புதிய மந்திரிசபை அமைந்துவிட்டது!

### ஆசிரியர்களின் நிலைமை யாது?

நாம் சென்ற மூன்று மாத காலமாக எதிர்பார்த்த நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. அன்பர் இராஜகோபாலாச்சாரியார் தம்முடைய முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். அவரைத் தொடர்ந்து அவருடைய ஏனைய அமைச்சர்களும் தம் பதவிகளை விட்டுவிட்டனர். ஆச்சாரியாருக்குப் பதிலாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகிய திருவாளர் காமராஜர் அவர்களே சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் நாட்டின் முதலமைச்சராகவும் பதவி ஏற்றுவிட்டார். காமராஜர் தலைமையில் சென்னை மாநிலத்திற்குரிய புதிய மந்திரிசபையும் அமைந்துவிட்டது. அம்மந்திரிசபையில் திருவாளர்கள் சி. சுப்ரமண்யம், ஷெட்டி, பக்தவத்சலம், பரமேஸ்வரன் ஆகியோரும் வேறு பலரும் இடம் பெற்றிருக்கின்றனர்.

அன்பர் ஆச்சாரியார், அறிவில் சிறந்தவர். ஆட்சிக் கலையில் நிபுணர். தென்னாட்டின் தலைசிறந்த மூளை என்று வடநாட்டவராலும் பாராட்டப்படுபவர். நிர்வாகத் துறையில் கைகண்ட வல்லமை படைத்தவர். என்றாலும் அவர் இன்றைய தினம், பதவியை விட்டு விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஏன் இந்த நிலை ஏற்பட்டது? ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம் இதைத்தான் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆச்சாரியாருக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் வீழ்ச்சிக்குப் பலர் பலவகையான காரணங்களைச் சுட்டிக் காட்டக்கூடும். ஆனால் அவை அனைத்தையும் விட மிகவும் முக்கியமான காரணம், புதிய கல்வித் திட்டப் பிரச்சினையில் அவர் காட்டிய அர்த்தமற்ற பிடிவாதம்தான் என்பதை நடுநிலை உள்ளம் படைத்த எவரும் மறுத்தல் இயலாது.

ஆச்சாரியாருடைய கல்வித்திட்டம் அவசியமற்றது, ஆபத்துகள் நிறைந்தது, கல்வித்துறையைக் கேடுறச் செய்வது, ஆகவே அதனை உடனடியாக வாபீஸ் வாங்கவேண்டும் என்று ஆசிரியர்கள்

அனைவரும் முழங்கினர். கல்வி நிபுணர்கள் எல்லோரும் கூறினர். நாட்டில் நடமாடும் கட்சிகள் அத்தனையும் எடுத்துரைத்தன. சமுதாயத்தில் உலவும் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் வற்புறுத்தின. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும், திட்டத்திற்கு, கடுமையான எதிர்ப்பு மூண்டெழுந்தது. என்றாலும் ஆச்சாரியார் தன் பிடிவாதத்தைவிட மறுத்தார். கல்வித் திட்டத்தை, விரும்பாத மக்கள்மீது வலுக்கட்டாயமாகத் திணித்தார். மக்கள் சக்திக்கு நேர்மாறான பாதையில் நடக்கத்துணிந்தார். எனவேதான் அவர் இதுபோது அரசியல் துறவறம் கொள்ளவேண்டிய அளவு நிலைமை சிக்கலாகிவிட்டது.

புதிய பிரதமர் காமராஜர் இந்த உண்மையை நன்றாக அறிவார். இவரே பலமுறை புதியகல்வித்திட்டத்தைவன்மையாகக்கண்டித்திருக்கிறார். நாட்டிலே இந்தத் திட்டத்திற்கு எதிராக உள்ள கடுமையான ஆவேசத்தையும் நேரில் கண்டிருக்கிறார். இந்தத் திட்டத்தால் நம் நாட்டின் எதிர்க்காலத்திற்குப் பேராபத்து நிச்சயம் என்பதையும் தெள்ளத் தெளிவாக அறிந்திருக்கிறார். எனவே முதல்வர் காமராஜர் செய்யவேண்டிய முதற் காரியம், புதிய கல்வித்திட்டத்தை வாபீஸ்வாங்குவதுதான். அவர் அப்படிச் செய்தால்தான், நாட்டு மக்களுக்கு அவர்மீது நம்பிக்கை ஏற்படும். ஆசிரியர் உலகத்திற்கு அவர்மீது ஒரு பற்று உண்டாகும். நாட்டின் எதிர்காலமும் நலமடையும். கல்வித் துறையும், ஆபத்தின்றி வாழும்.

இரண்டாவதாக அவர் செய்யவேண்டிய காரியம், ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்தவேண்டும். அவர்களுடைய இன்றைய ஊதியம் எத்துணைக் குறைவானது என்பதையும், இந்தக் குறைவான ஊதியத்தைக்கொண்டு மிகவும் பளுவான வாழ்க்கையைச் சுமக்கமுடியாமல் அவர்கள் எப்படித் தத்தளிக்கிறார்கள் என்பதும் முதல்வர் காமராஜருக்குத் தெரியாதன அல்ல. ஆகவே, ஆசிரியத்தோழர்களின் ஊதியத்தை, இரண்டுரூபாய் மூன்று ரூபாய் என்கிற முறையில் அல்ல, குறைந்தது இருபது ரூபாயாவது உயர்த்தினால்தான், அவர்களின் வாழ்க்கை வளமாகும், வேதனை தீரும்.

பொதுவாக நாட்டுமக்களுக்காகவும், குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களுக்காகவும், உருவான முறையிலும் சிறப்பான அளவிலும் நண்பர் காமராஜர் பணிபுரிவார் என்று நம்புகிறோம். பணிபுரியவேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம்.

---

# ஆரம்ப ஆசிரியர்கட்கு வேண்டுகோள்!

ஆரம்ப ஆசிரியர்களே! ஆசிரிய மனேஜர்களே! எயிடட் பள்ளிகளின் தலைவர்களே! பஞ்சாயத்துப் பள்ளிகளின் நிர்வாகிகளே! உங்கள் அனைவருக்கும் ஓர் வேண்டுகோள். சென்ற பதினைந்து ஆண்டுகளாக, "**ஆரம்பக் கல்வி**" என்னும் இந்த இதழ், உங்களுடைய எழுச்சி முரசமாகவும் உரிமைக் குரலாகவும் இருந்து ஒப்பற்ற பணி புரிந்து வருவதை நீங்கள் நன்ருக அறிவீர்கள். ஏராளமான பொருட் செலவையும் பொருட்படுத்தாமல், நாங்கள் இந்த இதழைச் சிறப்புடனும் தொடர்ச்சியாகவும் நடத்தி வருகிறேம் என்ருல், அதற்குரிய ஒரே காரணம், ஆசிரியர் உலகத்தின் நன்மைக்காகப் பாடுபட வேண்டும் என்கிற குறிக்கோள் நம்முடைய உள்ளத்தில் ஊறிப்போய் இருப்பது தான். இந்த இதழின் இடைவிடாத பணியால் ஆரம்ப ஆசிரியர்களின் பிரச்சினைகள் நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டன—ஆட்சியாளர்களின் செவிகளிலும் புகுந்திருக்கின்றன என்பது நாடறிந்த விஷயம். ஆசிரியத் தோழர்கட்கு இவ்விதம் பெருநன்மை புரிந்துவரும் ஓர் இதழ் சிறப்புடன் திகழ வேண்டும் என்பதற்காகவே நம்மால் பல பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் புத்தக விற்பனை சிறப்புடன் நடைபெற்ருல்தான், ஆசிரியர்களின் இருதய கீதமாகிய இந்த ஏடு, எழிலும் இனிமையும் மிகுந்ததாகத் திகழமுடியும். இதனை நீங்கள் நன்ருக அறிவீர்கள். அறிந்த காரணத்தால்தான், இத்தனை ஆண்டுகளாக, எங்களுடைய பாடபுத்தகங்களை, உங்களுடைய பள்ளிக்கூடங்களில் வைத்து, எங்களுக்குப் போதாரவு நல்கியிருக்கிறீர்கள். நீங்கள் இதுவரை காட்டிய ஆதரவுக்கும் அன்புக்கும் எங்களுடைய மனம் கனிந்த நன்றி. இத்தனை ஆண்டுகளாக நீங்கள் ஆதரித்தது போலவே, இந்த ஆண்டிலும் எங்கள் புத்தகங்களை உங்கள் பள்ளிகளில் வைத்து, அதன் மூலமாக "**ஆரம்பக் கல்வி**" இதழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேம். உங்களுடைய பள்ளிக்கூடங்களில் இப் புத்தகங்களை வைப்பதோடு நில்லாமல், அக்கம் பக்கத்தில் உள்ள பள்ளிகளிலும் இப் புத்தகங்கள் ஏற்கப்படும்படி உங்களுடைய அன்பு வளரவேண்டும். "**ஆரம்பக் கல்வி**"யின் வளர்ச்சி, புத்தகங்களின் வளர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் நமது புத்தகங்களே பவனி வரும்படி செய்ய வேண்டியது உங்களுடைய நீங்காக் கடமையாகும். ஆதரவு தாருங்கள்—"ஆரம்பக் கல்வி"யை வளருங்கள்.

# ராஜாஜியின் கல்வி திட்டம் ஜூன் மாதத்திலிருந்து ஒழியும்

சென்னை ஏப்ரல். 11— சென்னைநகர ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டை ஒட்டி வாத்தியார் அம்மாக்கள்வாத்தியார்கள் அடங்கிய ஊர்வலம் ஒன்றுசென்னை பிராட்வேயிலிருந்து மெமோரியல் ஹாலை நோக்கி பகல்12 மணிக்கு கொதிக்கும் வெய்யலில் சென்றது.

“புதியகல்விதிட்டத்தை வாபஸ் வாங்கு!” சம்பள உயர்வுவேண்டும் “வேலை நிரந்தரமாக்கப்படவேண்டும்”! ஆசிரியர்கள் ஒற்றுமைஓங்குக!” “வேலை இல்லாதிண்டாட்டத்தை ஏற்படுத்தும் புதியகல்வி திட்டம்வேண்டாம்!” என்றுஎழுதப்பட்ட அட்டைகளை வாத்தியார்களும், வாத்தியார் அம்மாக்களும் தாங்கிச்சென்றனர். கோஷங்களை கோஷித்தனர்.

ஏராளமான மக்கள் கூடி நின்று இந்த ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தனர். வாத்தியார் அம்மாக்களே ஊர்வலத்தில் அதிகமாக காணப்பட்டனர். 12–30 மணிசுமாருக்கு ஊர்வலம் மெமோரியில் ஹாலை அடைந்தது.

“புதிய கல்வித்திட்டம் ஜூன் மாதத்திலிருந்துகண்டிப்பாக அடியோடுநீங்கிவிடும்; ஆகவேகவலைப்படவேண்டியதில்லை” என்று காங்கிரசிலுள்ள ராஜாஜி எதிர்ப்பு கோஷ்டித் தலைவர் டாக்டர் வரதராஜலு நாயுடு எம். எல். ஏ.

சென்னை நகர ஆரம்ப ஆசிரியர்கள்மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப்பேசுகையிலே டாக்டர் வரதராஜலு நாயுடு மேற்கண்டவாறு சொன்னார், வரதராஜலு நாயுடு மேலும் பேசியதாவது:—

## கல்வி திட்டம் ஒழியும்

வாத்தியார்களும் இன்னும் எத்தனையோ பேர்களும் புதிய கல்வித் திட்டத்தை பற்றி கவலை தெரிவிக்கிறார்கள். ஜூன் மாதம் முதல் கட்டாயமாக இந்த கல்வி திட்டம் அடியோடு நீங்கிவிடும். கவலைப்பட வேண்டாம். (பலத்த கை தட்டல்)

## மிகக்குறைந்த சம்பளம்

இன்று வாத்தியார்கள் சம்பளம் மிகவும் குறைவாக உள்ளது. சாதாரண நகரசுத்தி தொழிலாளிக்கு கிடைக்கும் சம்பளம் கூட வாத்தியாருக்கு கிடைக்கவில்லை.

## மகாநாட்டில் கைக்குழந்தைகளுடன் வாத்தியாரம்மாக்கள்

மகாநாட்டுக்கு ஏராளமான பெண்கள் வந்திருந்தனர். ஆண்களை விட பெண் பிரதிநிதிகளே அதிகமாய் இருந்தனர். சில வாத்தியாரம்மாக்கள் தங்கள் கைக் குழந்தைகளையும் எடுத்துக் கொண்டு வந்திருந்தனர்.

# முக்கிய அறிவிப்பு

## "ஆரம்பக் கல்வி பத்திரிகை" இனும்.

சென்ற ஆண்டு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும், எமது **புதுமுறை சங்க வாசகங்களை** ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை பாடப் புத்தகங்களாக வைத்தும், சிலர் எமது இதர பாடப் புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1954–55 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1954–55-க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு ஏப்ரல் 30–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலைகளின் பெயர்கள் 1954–55 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனுமாக தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1954 ஜூன் மாதம் 30–ம் தேதிக்குள் அவசியம் அனுப்பிவிடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Bill கள் அனுப்பத்தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

## ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்க வேண்டியவை:

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணுவாகயிருந்தது தற்போது ஓரணுவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சுமார் 20 ரூபாய்க்குப் பொறுமான, சுமார் நாற்பது

புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 அல்லது 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்கு கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4–க்குமேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பொறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்கு மேல் ஆகாது.

ஆதலால் நேரிடையாக சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள (Railway Station) இரயில்வே நிலையத்தின் பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படி குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டு தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை தபால் மூலம்தான் அனுப்பப்பட வேண்டுமென விரும்புபவர்கள் தங்கள் ஆர்டர்களி லேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாக சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்து சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போக குறைந்தது ரூபாய்க்கு 1 அணு ($6\frac{1}{4}$%) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்களை அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

நமது பத்திரிகையில், நமது புத்தகங்களை வாங்கி விற்கும் வியாபாரிகளின் பெயர்களை ஜில்லா வாரியாக பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் மூலம் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்; தக்க கமிஷன் கொடுப்பார்கள். இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளவும்.

# மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை

நமது அலுவலகத்தில் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் ஆரம்பப்பாடசாலைகளுக்குத் தேவையான எல்லாப் பாடபுத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைகளுக்கு 22 புத்தகங்களும், உயர்தரப் பாடசாலைகளுக்கு 11 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாட புத்தகங்களை மாற்றலாமென அரசாங்க உத்தரவில் கண்டிருக்கிறது. ஆதலால் சில பாடசாலைகளில் சிற்சில புத்தகங்களையே மாற்ற வசதியிருக்கும். சில ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாப் புத்தகங்களையும் மாற்றவசதியிருக்கும். அப்பாடசாலைகளுக்கு 22 மாதிரிப் புத்தகங்களை அனுப்புவதென்றால் தபாற்கட்டணம் அதிகமாகின்றது. அப்படி முழு செட்டையும் தபால்மூலம் அனுப்ப எண்ணுபவர்கள் ரூபாய் 5 மணியார்டர் (M. O.) அனுப்பவும். இரயில்வே நிலையம் அருகே உள்ளவர்கள் ரூபாய் 4 அனுப்பினால் முழுசெட் இரயில்வே Paid பார்சல் மூலம் அனுப்பப்படும்.

குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் வேண்டுபவர்கள் ஆரம்பக் கல்விப் பத்திரிகையில் வெளியிட்ட அளவு தபால் பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தபால் மூலம் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்குமேல் எக்காரணத்தைக்கொண்டும் மறுமுறை மாதிரிப் பிரதிகளாக அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் அனுப்ப பணம் அனுப்பப்பட்டால் தபாற்செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையைத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

---

## அறிஞர் வாயுறை

நாடு நலம்பெற வேண்டுமா ஆம் எனில், சாதிச்சண்டை சமயச் சண்டை—பிற மூடச் சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக் குடாக் கடலில் எறிதல் வேண்டும்.

— திரு. வி. க.

## நமது புதிய வெளியீடு

# வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

## (1-முதல்—7-வது வகுப்பு வரை)


இவ்வாண்டு **வீரபாண்டியன் தமிழ் வாசகம்** என்னும் மகுடம் புனைந்த தமிழ் வாசகங்கள், ஒன்று முதல் ஏழாவது வகுப்பு வரையில் வெளியிடப்பட்டு அரசியலார் அங்கீகாரமும் பெற்றிருக்கின்றன. இவை சென்னை **லேடி, M. C. T.** பெண்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் **ஸ்ரீமதி இராஜாம்பாள் கோவிந்தராஜன் M. A., L. T.,** அவர்களால் எழுதப்பட்டு, வித்துவான் **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, திரு. த. சே. உமாபதி M. A., L. T.,** அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இப் புத்தகங்கள் டெம்மி $\frac{1}{8}$ (Demmy $\frac{1}{8}$) பெரிய அளவில் நல்ல காகிதத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்புப் புத்தகங்களிலும் ஏராளமான படங்களும் தற்காலத்திற்கேற்றவாறு புதிய முறையிலும், நடையிலும், பல பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை நமது **சங்க வாசகங்களை** இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வைத்து நடத்தி வரும் ஆசிரியர்கள், அதற்குப் பதிலாக **வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை** வைத்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப்புதிய வாசகங்களில் காணப்படும் சில பாடங்களை மாதிரிக்காக ஆரம்பக் கல்வியில் பிரசுரித்துள்ளோம். இதைக் கவனித்தால் புதிய வாசகங்கள் எந்த முறையில் அமைந்திருக்கின்றன என்பது ஆசிரியர்களுக்கு நன்ருக விளங்கும்.

ஒன்று முதல் ஐந்து வரையில் வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் பன்னிரண்டணுவும், ஏழெட்டு வகுப்புகளுக்கு மாதிரிப் பிரதிநிதிகள் வேண்டுவோர் பத்தணுவும் தபால் பில்லைகள் அனுப்பி மாதிரிப் பிரதிகளை தபால் மூலம் பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்
**ஆரம்பக்கல்வி ஆபீஸ்**
தபால் பெட்டி நெ. 1818
சென்னை.



# பாப்பாப் பாட்டு


காலையில் எழுந்திரு பாப்பா! — நீ
கடவுளைக் கும்பிடு பாப்பா!
பாடம் படித்திடு பாப்பா! — பின்
பால்சோறு சாப்பிடு பாப்பா!
மாலையில் ஆடிடு பாப்பா! — தினம்
மகிழ்வாகப் பாடிடு பாப்பா!

— த. சே. உமாபதி

## படிக்கவும் எழுதவும் கற்பித்தல்




படம்



பட்டம்





கப்பல்

அ



மரம்

படம் மடம்

பட்டம் மட்டம்

அப்பம்


எழுத்துப் பயிற்சி :

அ | ட் ட ப் ப ம் ம

## பயிற்சி—5

படத்தின் பெயரைச் சேர்த்துப் படித்தல் :

ஆல   வால்

மண்   பழம்

வரால்   பார்.

படங்களைப் பார்த்து, விட்ட எழுத்துக்களை எழுதுதல்



1. லா — ம்  2. — ல்  3. — ழ —
4. — ணா  5. தா — ம்  6. ம — — ளம்
7. க — ப —  8. — க் — ரம்  9. — ட் ட —

# எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

## சென்னை

1. M. துரைசாமி முதலியார் & ஸன்ஸ்
1, மலையபெருமாள் தெரு
சென்னை—1
2. C. குமாரசாமி நாயுடு & சன்ஸ்
சைனாபஜார், சென்னை—1
3. P. K. நாயுடு & சன்ஸ்
1, பத்ரையன் தெரு
சென்னை—1
4. தாமோதரம் & கோ
புக் செல்லர்
சைனாபஜார், மதராஸ்
5. பாலகுமார்
புக் செல்லர்
சைனாபஜார், மதராஸ்
6. ராஜன் வித்தியா எம்போரியம்
புக் செல்லர்
16 A கரியப்ப முதலி தெருவு
வேப்பேரி, சென்னை—7

## செங்கற்பட்டு

1. V. கோவிந்தராஜ்
புக் செல்லர்
செங்கற்பட்டு
2. T. K. முனிரத்தினம்
புக் செல்லர்
திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு
3. P. T. மாசிலாமணி முதலியார்
புக் செல்லர்
காஞ்சீபுரம், செங்கற்பட்டு

## வட ஆற்காடு

1. A. சுப்ரமணியம்
புக் செல்லர்
ஆற்காடு
2. K. M. சுவாமி & சன்ஸ்
புக் செல்லர்
ஆற்காடு
3. A. M. ஜெயராமன்
புக் செல்லர்
திருப்பத்தூர்
4. V. M. ராஜமாணிக்கம்
புக் செல்லர்
திருப்பத்தூர்
5. T. நடராஜன்
புக் செல்லர்
திருப்பத்தூர்
6. தி. ஸ்டேஷனரி மார்ட்
புக் செல்லர்
சந்தபேட்டை, குடியாத்தம்
7. எவர் கிரீன் ஷாப்
புக் செல்லர்
குடியாத்தம்
8. A. பாக்கியம் முதலியார் & சன்ஸ்
புக் ஷாப்
வேலூர்
9 K. V. பிரஸ்
புக் டிப்போ
வேலூர்
10. K. M. பாட்சா & கோ
புக் செல்லர்
வந்தவாசி
11. C. தனபால் செட்டியார்
மளிகை வியாபாரம்

சாலவேடு, வந்தவாசி தாலுக்கா
வடஆற்காடு ஜில்லா

12. V. S. நடேச உடையார்
புத்தக வியாபாரம்
ஜோலார்பேட்டை

13. சிதம்பர முதலியார்
புக் செல்லர்
செய்யார்

14. A. M. முனிரத்தின முதலியார்
புக் செல்லர்
ஆம்பூர்

15. A. G. சிகப்துல்லா ஊல்வி
புத்தக வியாபாரம்
ஆம்பூர்

16. அண்ணுமலை
புக் செல்லர்
திருவண்ணுமலை

17. P. தங்கவேல் பிள்ளை
புக் செல்லர்
திருவண்ணுமலை

18. C. சண்முகம்
புக் ஷாப்
திருவண்ணுமலை

19. T. V. C. முனிரத்தின செட்டி
புக் ஷாப்
திருவண்ணுமலை

20. கிருஷ்ணு ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
வாணியம்பாடி

21. டைடா. சி. டி. வெங்கட்ராம செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
போளூர்.

22. ஜெயின் ஜெனரல் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
செங்கம்

23. V. V. சொக்கைய செட்டி & சன்ஸ்
சோளிங்கபுரம்

## தென் ஆற்காடு

1. V. B. கணேசன்
புக் ஷாப்
விழுப்புரம்

2. கமலா ஸ்டோர்ஸ்
பஜார் தெரு
விழுப்புரம்

3. P. முனுசாமி நாயுடு & சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

4. கேசவலு செட்டியார்
புக் செல்லர்
திண்டிவனம்

5. V. K. M. அருணசல செட்டி
புக் ஷாப்
திருப்பாபுலியூர்

6. C. G. இராமானுஜம் செட்டியார்
புக் செல்லர்
சிதம்பரம்

7. C. பார்த்தசாரதி ஐயர்
புக் செல்லர்
சிதம்பரம்

8. S. R. வெங்கட்டராம செட்டி
ஷாப் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

9. K. V. இராஜா செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
வெள்ளையன்குப்பம்
நெய்வேலி

10. C. N. R. செந்திவிநாயகம்
ஷாப் & ஜெனரல்
வளவனூர்

11. S. V, சாரங்கபாணி செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

12. P. S. ராஜன் & கோ
புக் செல்லர்
பண்ருட்டி

13. ஸ்ரீ ராமலிங்கா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிப்பாடி

14. கணபதி புக் செல்லர்
நெல்லிகுப்பம்

15. T. ராஜகோபால்
புக் செல்லர்
கிருஷ்ணபுரம்
செஞ்சி தாலுக்கா

16. M. P. சந்தான செட்டி
புக் செல்லர்
உளுந்தூர்பேட்டை

17. R. ஜெயராம் நாயுடு
மளிகை
ஆண்டிமடம் p. o.

## திருச்சி

1. தெ. பெரியசாமி பிள்ளை
ஷாப் & மளிகை
பொரம்பலூர், திருச்சி

2. முருகன் & கோ
புக் செல்லர்
தெப்பகுளம், திருச்சி

3. S. B. பாலநாகமய்ய செட்டி
புக் ஷாப்
கரூர், திருச்சி

4. பழனியப்பா பிரதர்ஸ்
புக் செல்லர்
தெப்பகுளம், திருச்சி

5. சின்னப்பா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
தாத்தயங்கார்பேட்டை, திருச்சி

## தஞ்சாவூர்

1. R, சீனுவாசலு நாயுடு
புக் செல்லர்
மாயவரம்

2. V. ஜகதீசன்
புக் செல்லர்
பெரிய தெரு
பட்டுக்கோட்டை

3. ராமலிங்க சுவாமி புக் டிப்போ
விஜயபுரம் p. o.
திருவாரூர்

4. பிரகாஷ் டிரேடர்ஸ்
புக் செல்லர்
திருவாரூர்

5. K. S. சிவராம கிருஷ்ணன்
ஜெனரல் மர்ச்சண்ட்
பெரிய பஜார் தெரு
பட்டுக்கோட்டை

6. M. கணபதி
புக் செல்லர்
காசி கடைதெரு
திருத்துறைப்பூண்டி p. o.

7. ஸ்ரீ வெங்கடேஸ்வரா
பிரிண்டிங் ஒர்க்ஸ்
டவுன் உயர்தரப் பாடசாலை ரோடு
கும்பகோணம்

8. P. V. நாதன் & கம்பெனி
புக் செல்லர்
கும்பகோணம்

9. சந்திரா & கோ
புக் செல்லர்

அய்யன் கடைத்தெரு
தஞ்சாவூர் p. o.

10. பாரதமாதா புக் டிப்போ
93•எல்லையம்மன் கோயில் தெரு
தஞ்சாவூர்

11. கு. கோவிந்தசாமி பிள்ளை
அண்டு பிரதர்ஸ்
மளிகை
பந்தணை நல்லூர்
(via) குத்தாலம்

## மதுரை

1. M. தக்ஷிணாமூர்த்திகோன்
புக் செல்லர்
புது மண்டபம், மதுரை

2. E. M. கோபாலகிருஷ்ண
கோன்
புக் செல்லர்
மதுரை

3. M. நடனசுந்தரம் பிரதர்ஸ்
புக் செல்லர்
புதுமண்டபம், மதுரை

4. S. S. ராஜன் புக் டிப்போ
புதுமண்டபம், மதுரை

5. P. L. அருணாசல முதலியார்
புக் செல்லர்
புதுமண்டபம், மதுரை

6. V. M. S. & சன்ஸ்
புக் ஷாப்
புதுமண்டபம், மதுரை

7. லியோபுக்டிப்போ
புக்செல்லர்
56 தறவாய் தெரு
மதுரை

8. S. V. S. நாடார்
புக்செல்லர்
திருமங்கலம்
மதுரை

9. அமீதியா ஸ்டோர்ஸ்
ஷாப் மர்ச்சண்ட்
பேரையூர் p. o.
திருமங்கலம் தாலுக்கா
மதுரை

10. S. முத்துசாமி
புக்செல்லர்
போடி நாயக்கனூர்
மதுரை

11. K. V. நாராயண ஐயர் &
சன்ஸ்
புக்ஷாப்
திண்டுக்கல்

12. P. K. A. குழந்தைவேலு
நாடார்
புக்செல்லர்
திண்டுக்கல்

13. S. P. சூர்ய நாராயண
பிள்ளை
புக்ஷாப்
மெயின்ரோடு
திண்டுக்கல்

14. K. P. R. சாரங்கபாணி
செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
பழனி

15. கணேஷன் ஸ்டோர்
கண்டிரோடு
பழனி

16. K. கிருஷ்ணமாச்சாரி
இரும்புவியாபாரம்
கோடைக்கானல் ரோடு
நிலக்கோட்டை p. o.

17. V. ஆறுமுகம் பிள்ளை
ஷாப்மர்ச்சண்ட்
பெரியகுளம்

18. V. முத்துதேவர், வியா
பாரி

சில்வார்பட்டி
பெரியகுளம்

19. T. S. குருசாமி நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
கள்ளிகுடி
மதுரை

20. காகாஷாப்
உசிலம்பட்டி
மதுரை

21. அப்துல் வகாப்
ஷாப் வியாபாரம்
உசிலம்பட்டி
மதுரை

## இராமனுதபுரம்

1. அருணுஸ்டோர்ஸ்
இராமனுதபுரம்

2. S. T. சுவாமி & சன்ஸ்
புக்ஷாப்
பெரியபஜார்
இராமனுதபுரம்

3. K. M. S. சோமசுந்தரம்
செட்டியார்
ஷாப்மர்ச்சண்ட்
இராமனுதபுரம்

4. K. S. பிள்ளை & சன்ஸ்
புக்செல்லர்
ராஜபாளையம்

5. அமிர்தம் புக்டிப்போ
கல்லூரணி p. o.
via) அருப்புக்கோட்டை

6. அப்பன் & கோ
புச்செல்லர்
விருதுநகர்

7. மாரியப்பன் ஸ்டோர்ஸ்
புக்செல்லர்
விருதுநகர்

8. S. P. M. தங்கவேல்
கள்ளிகுடி
விருதுநகர்

9. A. R. முத்துபாலுசெட்டி
புக்செல்லர்
சாலையூர்
இளையான்குடி

10. S. ராஜேந்திரன் செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
இளையான்குடி

11. P. V. ரெத்தினசபாபதி
செட்டி
புக்ஷாப்
இளையான்குடி

12. M. S. அண்ணமலை
நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
சாத்தூர்

13 . ஜவஹர் புக் டிப்போ
மெயின் ரோடு
சாத்தூர்

14. M. M. சின்னசாமி பிள்ளை
ஜெனரல் மர்ச்சண்ட்
ஸ்ரீ வில்லிபுத்தூர்

15. கலா நிலையம்
காரைக்குடி

16. S. V. S. வெள்ளைச்சாமி
செட்டியார்
ஜெனரல்மர்ச்சண்ட்
பரமகுடி

17. R. கருப்பையா
புக் ஸ்டால்
சாயல்குடி

18. M. M. S. ராமசாமி
செட்டி
புக்செல்லர்
பரமகுடி

19. வே. வி. வேல்முருக
நாடார்
ஷாப் வியாபாரம்
கன்னிசேரி
துலுக்கப்பட்டி

## கோயமுத்தூர்

1. பாலகங்காதர செட்டி
புக்ஷாப்
32, பஜார் தெரு
பொள்ளாச்சி

2. P. மாணிக்கம்
புக்செல்லர்
ஈரோடு.

3. சிவலிங்க விலாஸ்
புக்டிப்போ
ஈரோடு

4. C. R. நடராஜன்
புக்செல்லர்
கோயமுத்தூர்

5. K. O. பெட்டை கவுடர்
புக்செல்லர்
கோயமுத்தூர்

6. A. நஞ்சப்பா
புக்செல்லர்
கோயமுத்தூர்

7. கவிஞர் பதிப்பகம்
கோயமுத்தூர்

8. A. K. மாணிக்கம்
செட்டியார் & சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

9. K. U. N. கவுண்டர் & Co
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

10. M. S. & Mv. பிரதர்ஸ்
புக்ஷாப்
பொள்ளாச்சி

11. பாலதண்டாயுதம்
செட்டியார்
புக்செல்லர்
பொள்ளாச்சி

12. S. S. பாலசாமி செட்டி
புக்செல்லர்
சத்தியமங்கலம்

13. A. L. M. பொன்னுசாமி
ஜெனரல் மர்ச்சண்ட்
அந்தியூர்
(via) பவானி

14. A. A. குட்டியப்ப
முதலியார்
ஜெனரல்மர்ச்சண்ட்
ராஜவீதி
அந்தியூர்

15. M. K. சுப்ரமணியன்
புக்செல்லர்
வால்பாறை பஜார்
கோயமுத்தூர்

16. P. R. S. மணியம்
ஸ்டோர்ஸ்
புக்செல்லர்
பல்லடம் ரோடு
திருப்பூர்

17. தண்டபாணி ஸ்டோர்ஸ்
தாராபுரம்

18. K. விஜயராமன்
வாசவி ஸ்டோர்ஸ்
நெகமம் P. O.
(Via) பொள்ளாச்சி

19. லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
ஜெனரல்மர்ச்சண்ட்
பவானி

20. சண்முகானந்தா புத்தக
நிலையம்
கோபிசெட்டி பாளையம்

21. லட்சுமி ஸ்டேஷனரி
மார்ட்
கோபிசெட்டி பாளையம்
(கோயமுத்தூர்)

22. S. நாகமாணிக்கம் செட்டி
புக்ஷாப்
தல்லிரோடு
உடுமலைப்பேட்டை

23. ராஜா புக்ஷாப்
தல்லி ரோடு
உடுமலைப்பேட்டை

## சேலம்

1. A. K. சந்திரய்ய
செட்டியார்
புக்செல்லர்
கோட்டை, சேலம்

2. M. V. A. நாராயணன்
ஜெனரல்மர்ச்சண்ட்
ராயகோட்டை

3. N. T. கோவிந்த செட்டி
புக்செல்லர்
ராயகோட்டை

4. T. V. பரமசிவம் பிள்ளை
புக்செல்லர்
சேலம்

5. நிர்மலா பப்ளிஷிங்
ஹௌஸ்
47, முதல் அக்ராகாரம்
சேலம் டவுன்

6. L. M. நாகமைய்ய செட்டி
புக்செல்லர்
ஆத்தூர் சேலம்

7. K. வெங்கடப்ப செட்டி
& சன்ஸ்
புக்செல்லர்
டென்கனி கோட்டை

8. ஸ்ரீ சூர்யநாராயண காபி
ஓர்க்ஸ்
புக்செல்லர்
ஹோசூர், சேலம்

9. S. S. R. ஸ்ரீனிவாச
செட்டி
மளிகை
சூளிகிரி P. o.
ஹோசூர் தாலுக்கா

## நீலகிரி

1. S. நாகப்ப செட்டியார்
சகுந்தலா புக்டிப்போ
மார்க்கட்
கூனூர்

2. M. குமாரசுவாமி &சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
கூனூர்

3. I. B. J. நந்திக் கவுண்டர்
ஜெனரல் மர்ச்சண்ட்
மார்க்கட்
உதகமண்டலம்

4. M. A. இருதயசாமி
புக்செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

5. T. M. ஆரோக்கியசாமி
புக்செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

6. C. தாத்தன்
முள்ளிமலை
குண்டா P. o.
நீலகிரி

## திருநெல்வேலி

1. ஸ்ரீ கோபாலன் அண்டு கோ
புக் செல்லர்

கோயில்பட்டி

2. ஸ்ரீ சண்பகவல்லி புக் ஷாப், தெற்கு பஜார், கோயில்பட்டி

3. சண்முகம் பிள்ளை புக் ஷாப் கோயில்பட்டி

4. ஸ்ரீ கோபாலன் ஸ்டோர்ஸ் புக் செல்லர் சங்கரன் கோயில்

5. ஸ்ரீ முருகன் ஜெனரல் ஸ்டோர்ஸ் தென்காசி

6. V. R. பாவநாசம் பிள்ளை ஸ்கூல் புக் சப்ளையர் வீரவநல்லூர்

7. டயோசிசன் புக் டிப்போ பாளையம்கோட்டை

8. திரு. வள்ளலார் புத்தகசாலை தா. பழூர் p. o. (via) ஜெயம் கொண்டான்

9. நேஷனல் ஸ்டோர்ஸ் மெயின்ரோடு ஏர்வாடி

10. P. M. ஆதி நாராயணன் வியாபாரி குரங்கணி தென்திருப்பேரை p. o. திருநெல்வேலி

---


# "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி சென்னை–1**

**மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2–8

**ரிகார்ட் ஷீட்டுகள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

**பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

**பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 1–0

**வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

11 JAN 1958

## தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan - V. Subramaniam)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 26 | 13-5-'53 |
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | R.C. No.3/54 | 17-3'-54 |

மாதிரிப் பிரதிகளுக்கு 0-10-0 அனுப்பவும்.

## புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B.A., L.T., & V. S. Leela B.A; B.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 2 | 0 | 2 | 13-1-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 13-1-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 13-1-'54 |

மாதிரிப் பிரதிகளுக்கு 1-4-0 அனுப்பவும்.

## சமூக நூல்

(T. S. Umapathy, M.A., L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 1 | 0 | R.C.No.3/54 | 17-3-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 8 | 0 | ,, | ,, |
| எட்டாம் வகுப்பு | 1 | 8 | 0 | ,, | ,, |

மாதிரிப் பிரதிகளுக்கு 1-8-0 அனுப்பவும்.

## அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'53 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'53 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'53 |

மாதிரிப் பிரதிகளுக்கு 0-12-0 அனுப்பவும்.

Edited, Printed and Published. by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady Madras—1.